உ

ஸ்ரீச[illegible]ண்டேஸ்வரிதுணை

பெங்களூர் ஆதி விநோத ச[illegible]

நூதனபவழேந்திரிசபா.

இஃது

சைவசமயகுருபாரம்பரையிலவதரித்த கும்பகோணம் ஸ்ரீமத்

சரவணமூர்த்திசுவாமிகள் மாணாக்கராகிய

வித்வான்-மந்திரயோகி,

தி-தி-அப்பாவுபிள்ளை

என்னுமியற்பெயருடைய

முத்துசாமிபிள்ளையவர்கள்

இயற்றியதுடன்,

ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டராயிருந்த-வித்வான்,

நெ - முருகேசமுதலியாரவர்கள்

முன்னிலையில்

வித்வான் - திருமழிசை

சிவப்பிரகாசையரவர்கள்

மாணாக்கர்,

ப - மாசிலாமணிமுதலியாரவர்கள்

புல்லறிவிற்கெட்டியவாறு, சில நூதன தருக்களும், வசனங்களுமியற்றி

ஐதீக லெத்தகிராப்படங்களுஞ்சேர்ப்பித்துத்தர,

தொ - மாணிக்கமுதலியாரவர்களால்

சென்னை

மநோன்மணிவிலாச வச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

Registered Copy-right

1893.

இதன் விலை அணா - ௪

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JUN. 93
MADRAS.

TO

HIS HIGHNESS SRI CHAMA
Rajendra Wudayar
Bahadur,
The Maharaja of mysore.

This Little Volume is

Respectfully Dedicated

By his Most Obedient Servant

The Author.

NOTICE.

Notice is hereby given to all Proprietors of Press and to the public that P. Masilamony Mudaliar has brought out a revised edition of Pavazhandira Sabha enlarging the origenal edited by the Poet T. T. Appavoo Pillay, with various New Songs, Prose and appropriate Lithographic Pictures under the designation of *Noothana Pavazhandiri Sabha* and Registered it under the Registration Act. Persons either re-printing the said *Sabha* without permission or publishing new books with songs and [illegible] taken from this book, in any launguage will not only be liable to all losses but also to penalty under the Indian Penal Code.

K. MANICKA MUDELLIYAR.

11730

உ

ஸ்ரீகுருவேதுணை.

கவியாளி-திரிசிரபுரம்-திருமலை,

அப்பாவுபிள்ளையென்னும்

இயற்பெயருடைய

முத்துசாமிபிள்ளையவர்கள்மீது

வித்வான் - திருமழிசை

சிவப்பிரகாசையரவர்கள்

மாணாக்கர்,

பா-மாசிலாமணிமுதலியாரவர்கள்

உள்ளன்புடனியற்றிய

வாயுரைவாழ்த்து.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

என்னுரைப்பேனென்னுரைப்பேனிவ்வதிசயந்தனையியம்பக்கேண்மோ
பொன்னனையவேகவியுரைக்குங்கம்பனுமேசிரமசைக்கப்பொருணயத்தோ
டின்னிசையினயமுஞ்சொன்னயமுமுறக்கவிசொலப்பாவேந்திரன்மேற்
கன்மனத்தேன்கவியுரைத்தற்குயிலைப்போற்காகமிசைக்கழற்பாற்றே.

கட்டளைக்கலித்துறை.

மெச்சியப்பாவலர்போற்றச்சபையினுமேவிவந்து
நச்சியப்பாவென்றடுத்தவென்னெஞ்சத்துக்கண்ணியென்னும்

வாயுரைவாழ்த்து.

உச்சியப்பானுவெனவேவிளக்கியொருமொழிசொல்
வச்சிரப்பான்மலையப்பாவுவள்ளலைவாழ்த்துவனே.

வெண்பா.

உன்னைவிடேனுனுமேயுன்னுடைமுத்தையா
வென்னைவிடமாட்டாய்நீயென்றுமே - பொன்னுனி[illegible]
[illegible]ர்பெறும்பூவாசம்போனன்னவுனையேயென்வா[illegible]
[illegible]பெறவேவாழ்த்துந்தினம்.

கட்டளைக்கலித்துறை.

தேன்பெற்[illegible]செந்[illegible]மிழ்ப்பாவினங்கொண்டினந்தினமும்
கான்பெற்றவ[illegible]டினங்கிண்டிசெந்தேன்பொழிகற்பகஞ்சேர்
வா[illegible]பெற்றசீர்த[illegible]யப்பாவேர்திரனடிவாழ்த்தி[illegible]ன்மேல்
நான்பெற்றபாக்கியம்யார்பெற்றனருலகன்ன[illegible]லே.

திரமுத்து சாமி திருவடி போ[illegible]றுவோ[illegible]
மார்க்கண்டனுக்காயன்று மறலியைய[illegible]தைத்[illegible]தேவ[illegible]
சீர்பெறமகிழ்ந்தளித்த [illegible]குருவ[illegible]தொழு[illegible]ம். ([illegible])
தேசதேசாதிபதிகள் தேடிக்கொண்ட[illegible]ந்த
தேன்மொழியருணசலன் புகழ்பெற[illegible]த்த. ([illegible])
[illegible]ப்பாரகனிவேலதா ஒப்பாருமில்லாத
[illegible]வால்மாரிமழைபோற் றப்பாமல்பொழிகின்ற. (தீர)
சா[illegible]தய[illegible] சார்வதாமனை[illegible]டி
மற[illegible]ன[illegible]இந்த மந்திரயோகியெனும். (தீர)
அன்ப[illegible]சில[illegible]ணி யனுபோகந்தனையொட்டி
இன்புறப்[illegible]வ[illegible]றின மிறைஞ்சித்துதித்தேற்றும். (தீர)

வாயுரைவாழ்த்து சம்பூரணம்.

விளம்பரம்.

இ[illegible]னல் யாவத்தச்சுக்கூடத்தலைவர்க்கும், மற்றேனையோர்க்கும், தெரிவிப்பதுயாதெனில், கவியாளி-இ-தி-அப்பாவுபிள்ளையவர்களியற்றிய பவழேந்திரசபா என்னுஞ்சரிதையோடு பா-மாசிலாமணிமுதலியார் சில நூதன தருக்களும், வசனங்களுமியற்றி [illegible] ஐந்தலைத்தகிராப்படங்களுஞ்சேர்த்து "நூதன பவழேந்திரசபா" எனப்பெயரிட்டு, ஷை சரிதையை ரிஜிஸ்ட்[illegible]ரேஷன் ஆக்டின்படி ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கிறபடியால், இச்சரிதையை யாவரேனும் உத்திரவின்றி அச்சிட்டாலும், இதிலுள்ள தருக்கள் முதலியவைகளையெடுத்து இதரசரிதைகளிற்சேர்த்து அச்சிட்டாலும், இதரபாஷை எழுத்திலச்சிட்டு வெளிவரக்கண்டாலும், இதனால்வரும் நஷ்டத்தைக்கண்டிப்பாய் கட்டிக்கொடுப்பதன்றி, இன்டியன் பினல் கோட் நிபந்தனைக்கும் உள்ளாவார்களெனத் தெரிவிக்கப்பட்டது.

கொ-மாணிக்கமுதலியார்.

உ

ஸ்ரீ சாமுண்டேஸ்வரி துணை.

பெங்களூர் ஆதி விநோத சபை.

நூதன பவழேந்திரசபா.

விநாயகர் துதி.

மேதினிமாதரெல்லாம் வியப்புடன்புகழ்வதாக
நீதியுநெறியுங்கற்பும் நிலைதவறாதும்பெற்று
காதலியடைந்துவாழ்ந்த நற்பவழேந்திரித்தன்
[illegible]கையையெடுத்துரைக்கக் கணபதிகாப்புத்தானே.

முருகன் துதி.

ஐங்கரக்கையுடையமன்னவனு மார்கலிக்கிறைவண்ணனுஞ்
செந்தழற்படைநிதன்றிசைக்கிறை செப்பு[illegible]ன்பொ[illegible]த்த[illegible]தையும்
அந்தகாளிலைவசுரனுற்சிறை யானதைக்கொ[illegible]தலாகியே
எந்தவேளையுமென்னுளத்தி விருப்பையேக[illegible]பருக[illegible]வே.

குருவணக்கம்

சிரிசிவமுதலைந்தையு மிணைத்திடவுமோங்கார[illegible]னவமூர்த்திநாளும்
பேசாமலாணவப் பேயதையொடுக்கிப் பிடித்து[illegible]ன் சிறுகரத்தைச்
சரிதியாயிடம்வலம்புரிந்திருந்தொலையாதஜனன[illegible]மத்து
சாராமலறுகோச முடனேழுதாணையும் ஸ்தானத்திரு[illegible]ய
நெறியதைக்காட்டியும் நித்தமாய்நிமலமாய் நோராகிர் ரூபமாய்
யோகிநாளுகி தானுகிவாய்மனம் நினைவுக்குணினைவதாகிப்
பொ[illegible]ரியதுசார்ந்திடப் பேரின்ப மெனக்களித்தப்
பிரபுடீகனறுசமயக் கோளி[illegible]ச்சரவணன்பேரடிகள் பணிகுவேனே;

சபாவணக்கம்

நீதியுநெறியுந்தேவ னிலைமையுமறிந்தேயந்த
ஆதியாம்பொருளினாளு மகத்திலிற்றுநிந்தே நூலை
ஓதியேமுறையுணர்ந்த வுத்தமச்சபையோர்கட்கே
பேதியாமனதைநாட்டிப் பிரியமாய்வணங்கினேனே.

உ

ஸ்ரீசாமுண்டீஸ்வரி துணை.

இந்நாடகத்தின் கருத்து.

விருத்தம்.

[illegible]ண்களுக்கு மீன்றோர்நற் கல்விதன்னைப்
[illegible]ரியமாய் போதிக்கிற் பெருமையுண்[illegible]
மண்ண[illegible]லுளோ ரன்னியன்றா ரத்தைக்கோரில்
மா[illegible]றுமைப் வந்தணுகு மானநேர்மை
எண்ணாத[illegible]வேசிமய லிழிவையூட்டு
மெஜமானை வஞ்சித்தோற் கேதுகி[illegible]த்தி
புண்ணதிற்கோலிட்ட தொக்குங் களவதென்றும்
புகன்றனிதை யறிவிலியிப் புவியு[illegible]ளாரே.

(வசனம்) உலகின்கண் உம்பர்க்கதிப னருளா[illegible]திக்கும் பெண்கட்[illegible]கு மீன்றதாய்தந்தைய ரிளமையிற்கல்விப்பயி[illegible]சியடைவதில்மு[illegible] னூழியப்பெண்களைப்போற் [illegible]ங்கள்வீட்டின் குற[illegible]றவல்க[illegible]மாத்திரம் புரியச்செய்து அவர்களுடைய அறிவை யபிவிர்த்தி[illegible]திருத்தத ல் அ[illegible]கலவென்றும், பவ[illegible]ழக்கிரி வாசித்த தன்மையாற் றன்புத்தியை விசாலப்[illegible]டுத்தித் தனக்கு[illegible]லவித விடையூறுகளொன்றின் பின்னொன்றாய்த் தொ[illegible]ந்துமனைகளிலிருந்து தப்பித்தன்னை[illegible]மணந்த கணவனுக்குப் ப[illegible]ங்கொண்[illegible]டத்தக்கபெருமையை வருவித்தனளென்றும் படிப்பறிய[illegible]ளா[illegible]ந்திருப்பாளாயின் படிமனைச் பலருமேசி நகைக்கத்தக்க ப[illegible]னத்தானடைவதோடு தன்னைத்தொட்டவனும் பெற்றவர்களு மற்று[illegible]சுற்[illegible]த்தாருமென்று மாறாதொரு அவமானத்தை ஆபரணமாய்ப்பூ[illegible]ருக்கச் செய்திருப்பாளெனவும், ஆடவர்கள் தங் கணெறிமாறி யன்ன[illegible]ருடைய பெண்டைக்கவனிக்கப்படாதெனக் குந்தல இராஜனுடையக[illegible]யையும் வேசிமயலாற்சுந்தரதர்மனடைந்தசிறுமையைக்[illegible]வளிக்கில[illegible]கொடியதிலுங்கொடிதெனக்காணவும், அன்னியர்ம[illegible]னைத, அன்னைபோற்பாவித்த லதிகமேன்மையைத் தருமென உத்தமசீலனடைந்த பெருமையையும், வேலைகாரர்கள் தங்கள்வேலையில் முன்வினைப்பயனுற்சிக்கித் தன்குடும்பத்தைவிட் அதிகாரமெண்ணி[illegible]ன்புபாராட்டி ஆதரித்துவருபவனொருவனிருக்[illegible]லையிலே மற்றொருவனைக் கருதலதடாதெனச் சுந்தரியா[illegible]ண்ட துக்கத்தையும், அன்னியர்பொருளை அபகரிக்கக்கொள்ளுமா[illegible]சையினும் புகழுக்குக்கேடும்புவியின்கண் வாழ்விற்கு வறுமையையும் அமைக்குமெனத் திருடனடைந்த கோலத்தையும், எஜமானிட்ட ஆக்கினையைமாறி நடாத்துதலனர்த்தத்தை விளை[illegible]க்குமெனச் சேர்வையடைந்த சிக்ஷையையும் நாடகபாவமாய் நடித்துச் [illegible]டிக்காட்டப்பட்டது.

☞ தி-தி-அப்பாவுபிள்ளை.

மாளிகை

ஸ்ரீ-ஸ்ரீ-அப்பாவு மன்னே.

ஸ்ரீசாமுண்டீஸ்வரிதுணை

பெங்களூர் ஆதி விநோ[illegible]ப.

நூதன்பவழேந்திரிசபா.

வீரவர்ம[illegible]காராஜன் விருத்தம்.

சீருருமடியு நீமுடியாய்[illegible]தி
செங்கதிரோன் சோமனக்கினியாய்மேலாம்
ஆரணமாய் சத்துசித்தானந்தமாகி
யகண்டமாயாவுமா யைந்தொழிற்குமாகி
காரணமாயென்றுமா யெங்குமாகி
கருணைபொழிமேகமாம் பூரணன்தான்
தாரணியைநீதிமுறை வழுவாதோச்சி
தனிப்பரமசுகபடைய போற்றினேமே.

(வீரவர்மமகாராஜன்-வ-ம்) சத்துசித்தானந்த பரஞ்சோதியாகிய முக்கண்ணீசனே? இன்னாட்டைநீதிவழுவாமல் செங்கோல் நடாத்தவும், மாதமும்மாரிபெய்து உலகத்தை யிரட்சிப்பதோடு அடியார்களிடருற்றபோது அவ்விடரைநீக்கிப்பாதுகாக்கும் எமதிறைவனே? உன்னுடைய நித்தியகலியாணகுணங்களை யென்னால் துதிக்கத்தரமோ! [illegible]னால் என்னையும் என்குடிகளையும் சதாகாத்து இரக்ஷித்தாளவேண்டும், ஜெகதீசா! போற்றி போற்றி.

வந்தனாதிபதி மந்திரி விருத்தம்.

எள்ளுக்குளெண்ணெய்போல வெங்கணுங்காணுய்நிற்கும்
வள்ளலேமனதினாலும் வழுவாமலணிந்தேயேற்றி
கள்ளமுஞ்சூதும்மோசங் கவனிக்காநீதிபெய்யுக்
தெள்ளலேவீரவர்ம தேவனேயுன்றாள்போற்றி.

(வந்தனாதிபதி மந்திரி-வ-ம்) இந்த விந்தைபுரத்தை யாளாநின்றவீரவர்மமகாராஜனை போற்றி போற்றி.

(வீர-வ-ம்) அப்பா மந்திரி? எனது நாட்டில் மாதமும்மாரிபெய்து குடிகள்மனமகிழ விளைப்போங்கி அவாளுக்கருந்துணையாகிய கால்நடைகள் களித்து தேவாலயப்பூசைகள் கிரமமாய் நடந்தேறி, நான்கு வருணத்தாரும் அவாளவாள் நெறிகளோங்கி, எக்கியஹோமங்களிடையூறின்றி நடந்தேறி, பொய், களவு, சூது, டம்பம், விபசாரம், துரோகம் எனும் துர்த்தசெய்கைகளெங்குந் தலைகாட்டாமல் ஒடுங்கி, ஒருதுறையில் கோவும் புலியும் பகையின்றி நீரருந்தி வாழ்கின்றதா? எனக்கெடுத்தோதையா நேசா.

(மந்-வ-ம்) தாங்கள் இன்றெனை வினவிய யாவற்றுந் தங்களாக்கினையிவ்வாறு நடந்தேறிவருவதால் எல்லோரும் யாதொருமனக்குறையின்றிக் களிப்புடன் தங்களோய்வுகாலங்களிலும் கடவுளின்பெருமையையே கொண்டாடிக் குலாவிக்கொண்டிருப்பதுடன் இராக்காலங்களிலாங்காங்கு நீதிநெறி உண்மையொழுக்கம் கற்புநிலைமைகளைப்புகட்டத் தக்க இவ்விய சரித்திரங்களை (மகாகவிஞர் நாடகத்தமிழாய் ஏற்படுத்தியிருப்பவைகளைப்) பலரும் உணர்ந்து உய்யும்பொருட்டுத் தத்ரூபமாய் நேரில் கண்டவாறே நடித்துக்காட்டும் நாடகசபைகளேற்படுத்தி அந்த இராப்போதில் சற்று அறிவைநாட்டி, மறுநாள் கண்ணுற்றவைகளை யுணர்ந்து சன்மார்க்கத்திலொழுகி அதியுத்தமர்களாக இருக்கிறார்களரசே.

(வீர-வ-ம்) அப்பா மந்திரி? ஒருவருக்கும் மனக்குறையில்லையா?

(மந்-வ-ம்) இல்லை வேந்தே.

(வீர-வ-ம்) சற்றுயோசித்து உரைப்பாயப்பா.

(மந்-வ-ம்) ஏது இன்று நம்மை யோசிக்கச்சொன்னது! ஏ மனமே நீயும் யோசிப்பாய்,—சரி, நமது வேந்தனுடைய நெறியினால் பாவந் தொலைந்து, குடிகள் எல்லோரும் சுகத்திலிருக்கின்றார்களே, ஒருவருக்குங் கிலேசங்காணப்படவில்லையே, மனைமனைதோறும் சந்தோஷவார்த்தையும், சுபகாரியங்களும், நடந்தோங்கிவருகின்றதே! தருமதேவதை அதி மேன்மையாய் நடக்கின்றாளே! நல்லது நாம் கவனிப்போம்—சரி, நமது அரசர்தான் கிலேசித்திலிருப்பவர், அதாவது தேசாந்திரிகளாய்விட்ட பூகி, மதிபூகி என்னும் இரண்டு புத்திரர்களும் நாளதுவரையில்வரவில்லையென எனவும், மறுபுத்திர உற்பத்தியுமில்லை, ஆனதால் அவரே வருத்தத்திலிருப்பவர், தெரிந்தோம், தெரிந்தோம்.

(வீர-வ-ம்) யோசித்தையா மந்திரி?

(மந்-வ-ம்) சரி,—யோசித்தேன் ஆண்டவனே.

(வீர-வ-ம்) முடிவுயென்ன?

(மங்-வ-ம்) தாங்கள் ஒருவரின்றி மற்றெல்லோருஞ் சுகத்திலிருக்கிறார்கள் மகாராஜனே.

(வீர-வ-ம்) அப்படியா, யானும் அவ்வாறே மற்றவர்களைப்போலக் கிலேசமின்றி யிருக்க விதிப்பிரமாணத்தை யுரைப்பாய்.

(மங்-வ-ம்) சுவாமி? யூகி மதியூகி.

(வீர-வ-ம்) ஆ! என்மக்களா! என்றுகாண்பேன்! ஆ! ஈசா!!!

(மங்-வ-ம்) நாளதுதேதிவரையில் எவ்வித மிருப்பதாயுந் தெரியாததால், புத்திரசோகந் தங்களை வருத்துகின்றது. ஆனதால், தாங்களுந் தேவியாருஞ் சுரஞ்சென்று சுந்தரநாதனை [illegible] தால், துயரமகலும்

(வீர-வ-ம்) அப்படியேசெய்வதுத்தமம், நான் வருமளவும் நீ செங்கோலைக் காப்பாய்.

(மங்-வ-ம்) நல்லதென்னுண்டவனே.

(வீர-வ-ம்) அடி மாதே? நாம்பெற்றும் மலடாயிருப்பதை நீக்கிக்கொள்ள தவத்திற்குப்போவோம் வருவாயா.

(விவேகநங்கை-வ-ம்) மெத்தசந்தோஷம் இதோவந்தேன் நாதா.

வீரவர்மமகாராஜன் தரு.

இராகம்-காம்போதி, தாளம்-ஆதி.

பல்லவி.

நடந்துவருவாய்மாதே என்னைத்தொடர்ந்துவருவாய் கோதே.

அநுபல்லவி.

அடர்ந்ததேவர்முனிவர் அநுதினம்புகழ்ந்தேற்றும்
ஆதிமூலப்பொருளை யோதிப்பணியவேணுமின். (நடந்)

சரணம்.

பெற்றும்மலடாக்கப் பரமன் பிடித்தவாதினைப்போக்க
சுத்தசுரமடைந்தே சொல்லாத்துயர்களைய
சுந்தரனருள்பெற வந்தனஞ்செயவென்மின் (நடந்)

(வீர-வ-ம்) மாதே? இந்தப்பூஞ்சோலையைப் பார்த்தையா! வெகுநன்றாயிருக்கின்றது, இது நமது தவத்திற் குவந்ததா யிருக்கின்றது, ஆனதுபற்றி நீ ஜலந்திரட்டிவருவாய்.

(விவேகநங்கை-வ-ம்) மகாபாக்கியம் நாதா,— (ஜலந்திரட்டிவந்து இடத்தைச் சுற்றிசெய்தல்.)

வீரவர்மமகாராஜன் தவஞ்செய் துதி.

இராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

காரணமே எங்கும்பரி பூரணமே
நாரணனும் அயனுங்காணு
நாதா, வேதா, போதா, தா தா. (காரண)

ஆதியனே மறைதுதி யனுதியனே
சோதியான சுயம்பிரகாசா
சூலா, காலா, சீலா, லோலா. (காரண)
பாதிப்பிறை யருள் நீதிநிறை
வேதியேயென் வினையறுக்கும்
வித்தே, சித்தே, முத்தே நத்தே. (காரண)
அஞ்சதனில் அமர் நெஞ்சதனில்
அடியேன் [illegible]ம் வசமளிக்கும்
அன்பே, [illegible], முன்பே, இன்பே. (காரண)

(பர-வ-ம்) அப்பா? வீரவர்மா? உனக்குச் சகலவிதபாக்கியங்களுங் கொடுத்திருக்க நீ அரசைவிட்டடவிவந்தகாரணத்தை தெரிவிப்பாய்

வீரவர்மமகாராஜன் முறை.

இராகம்-பைரவி, தாளம்-சாப்பு.

என்னசொல்லப்போறேன் - நாதா நான்
ஏதுசொல்லப்போறேன்.
நன்னயமாய்ச்சக்ர ரூபகனுகியும்
நாட்டோரிசழ்ந்திட நானுடலெடுத்தேன். (என்ன)
நல்லகமடையாபாவிநானுகியே னுடையா
சொல்லருமவேதச்சுருதிவிதிப்படி
சுபுத்திரனைப்பெற்றும் அபுத்திரனுகினேன். (என்ன)

(பரமன-வ-ம்) அப்பா? இப்போது நீகொண்டுவந்த வெண்ணம் விண்டது? தேசாந்திரஞய்விட்ட வுன்புத்திரர்கள் உன்னிடத்தில் வர வெகுநாளாகும், உனக்குப் புத்திரசோகமே மேலிட்டு வருந்து கின்றது உன்தேவிகெற்பத்தில்திவ்ய அழகுள்ள ஒருபெண்ஜனிப்பள், அவளால் நீ கீர்த்தியடைவாய் வாழி யரசே, போய்வருகின்றேன்

(வீர-வ-ம) மகாபாக்கியத் தேவா, அப்படியேபோய்வருவீர், போற்றி போற்றி,— நாதே நமது நாடடைவோம்வருவாய் பெண்ணே.

(மந்-வ-ம்) போற்றி யரசே? தவத்தினுடையபலனை யருள்செய்யவேணடும் ஆண்டவனே?

(வீர-வ-ம்) அப்பாமந்திரி? பரமன் ஒருபெண்குழந்தை பிறக்குமென அருள்செய்தார் பாலா!

(மந்-வ-ம்) மெத்த சந்தோஷம்.

(வீர-வ-ம்) அதென்ன? மந்திரி இவ்வளவு ஆனந்தங் கொண்டனை

(மந்-வ-ம்) அரசே? பெண்ணின பெருங்கினை யானதால் ஆனந்தித்தேன் வேந்தே.


கல்யாண மண்டபம்
சுந்தாதர்மனுக்குமாலைசூட்டல்

(விவேகநங்கை-வ-ம்) அம்மா தோழி? இன்றென்னமோ எனக்கோர் விதமாய்க்காட்டுகின்றது, இடுப்புக்கத்திரிக்கின்றது, வியர்க்கின்றது, இருதொடைகளுந் துண்டித்துப்போகும்வாறு வலிக்கின்றது, என்செய்வேனடி பாங்கி.

(தோ-வ-ம்) அம்மணி யிக்குறிகள் பிரசவிப்புக் குறிகளாம்—சரி, அப்பா காவலனே? நீ சென்றந்த சீக்கிரமாய் மருத்துவமாதையழைத் தோடிவருவாய். (மருத்துவமாது வருதல்)

(மரு-வ-ம்) தாயே? தாங்களிப்படிக்குவருந்துவதேன் சற்றுநிதானிப்பீர்களீதோதிவ்யரூபமுள்ள பெண்குழந்தைபிறந்தனளம்மா.

(தோ-வ-ம்) போற்றி ஆண்டவ?.

(வீர-வ-ம்) தோழி நீவந்தகாரணத்தை உரைசெய்வாய்?

(தோழி-வ-ம்) ஆண்டவா? இன்று தேவியார் திவ்யரூபமுள்ள பெண்குழந்தையைப்பெற்றாள் மன்னா.

(வீர-வ-ம்) சந்தோஷம், மந்திரி? எமதுதேவியார்பெற்ற குழந்தைக் குநாமகரணஞ்செய்யவேண்டியிருப்பதால்ஜோதிடரைவரவழைப்பாய்

(மந்-வ-ம்) மகா பாக்கியம் வேந்தே. (அசரீரிதோன்றல்)

(அசரீரி-வ-ம்) அப்பா வீரவர்மா? நீயீன்றபெண்ணிற்கு பவழேந்திரியெனப் பெயரிட்டழைப்பாயாக.

(வீர-வ-ம்) மகாபாக்கியம், ஆகாயவாணியே, அம்மா தோழி! பவழேந்திரியென என்னருமை மகளுக்குப் பேரிட்டழைப்பீர்கள்.

(தோழி-வ-ம்) நல்லதாண்டவா சுவாமி.

சுந்தரதர்மராஜன் விருத்தம்

ஆதியேமூலாவென்று மலரியவானைசத்தன்
கோதிலாதுளத்திற்கொண்டு கொப்பெனச்சக்ரமேவி
தீதினையகற்றிக்காத்த தேவனேமோனமூர்த்தி
யோதினேனென்னதுசெங்கோ லொளிபெறக்காருநாதா.

மந்திரி விருத்தம்.

அந்தரசொர்க்கமிக்க வகிலமும்நிறைந்துநிற்கும்
மந்திரமறைகளேற்று மாயனையுளத்திலிட்டு
சிந்தனையகற்றிதர்மம் நீடுறவரசுசெய்யும்
சுந்தரதர்மராஜே துணையடிக்கடிமைபோற்றி.

(மந்-வ-ம்) போற்றி போற்றி சுந்தரதர்மராஜனேபோற்றி.

(சுந்-வ-ம்) அப்பாமந்திரி? இன்றேதேனும்விசேடமுண்டா?

(மந் வ-ம்) யாதொன்றுமில்லை யரசே.

(சுங்-வ-ம்) சுந்தரியாள் கேட்டனுப்பிய முத்தாரத்தை கொடுத்தனுப்பினையா?

(மங்-வ-ம்) அப்போதே கொடுத்தனுப்பிவிட்டேனரசே.

(சுங்-வ-ம்) சரிதான் அவளிடமாக்கினையை என்னுத்திரவை விடேன் மணங்கவனமாய்க்கவனித்து நடந்துகொள்ளவேண்டும்.

(மங்-வ-ம்) அப்படியேயரசே இதுவும்விதியா!!!

(யூகி-வ-ம் அப்பா தம்பி? நாம் முன்வினையால் நமதுபிதாவைப்பிரிந்துவரலாயினேம், நாம்கொண்டுவந்தபொருளுங்குறைந்து வந்தன, இனி நாமிப்படிக்கு இருப்பகடாது, அடுத்த நாட்டையாளும்சுந்தரகர்மராஜனிடம் பிரதானிகள்வேண்டியிருப்பதால் போவோம்வருவாய்.

(மதியூகி-வ-ம்) நல்லது அண்ணாவே.

(கட்டியன்-வ-ம்) நீங்கள்யார்? எங்குவந்தீர்கள்?

(யூகி-வ-ம்) அப்பாகட்டியனே? எங்களரசனைக் காணக்கூடுமோ?

(கட்-வ-ம்) இருங்களேயறிவித்துவருகின்றேன், பராக்குவேந்தே, யாரோ இரண்டுவாலிபர்கள் வடிவிலோ இராஜ மைந்தர்களைப் போலிருக்கின்றார்கள், தங்களைக்காண வந்திருக்கின்றார்களரசே.

(சுங்-வ-ம்) வரச்செய்வாய் கட்டியனே.

(கட்-வ-ம்) அரசரைப்போய்க் காணுவீர்களையா.

(யூகி-வ-ம்) போற்றி வேந்தர் வேந்தே.

(சுங்-வ-ம்) அப்பா நீங்கள்யார்? எந்தனாடு? இங்குவந்த காரணமென்ன வெளியிடுவீர்கள்?

(யூகி-வ ம்) அரசே? நாங்கள் வடநாடாகியவிந்தைபுரம் க்ஷத்திரிய குலம் ஒருதொழிலைக்கருதி யும்மைக்காணவந்தோம்.

(சுங்-வ-ம்) அப்படியா நல்லது, இவர்களை நமது இராஜதானியில் பிரதானிகளாக அமைப்பாய் மந்திரி.

(மங்-வ-ம்) மகா பாக்கியம் வேந்தே

(தோழி-வ-ம்) ஆண்டவா? தங்கள் அருந்தவப்பெண்ணாகிய பவழேந்திரி இன்று பருவமடைந்தாள், இனி தினைதினை விருத்தியடைவாள், கலியாணத்திற்குத்தகுந்தமுயற்சி சீக்கிரத்தில் செய்யத்தக்கது இனி அவளை பாதுகாப்பது கடினம் ஆண்டவா.

(வீர-வ-ம்) அப்படியே செய் வேணம்மா பாங்கி, மந்திரி? தோழிப்பெண் தெரிவித்ததை அறிந்தாயா.

(மங்-வ-ம்) தெரிந்தேனரசே.

(வீர-வ-ம்) இனி அதற்குச் செய்யவேண்டியதென்னயோசிப்பாய்.

(மங்-வ-ம்) அரசே? விவாகத்தை முடிப்பதே காரியம்.

(வீர-வ-ம்) அதற்கெப்படி?

(மங்-வ-ம்) வேந்தே? பவழேந்திரி அம்மாளுக்கு விவாகமென் சுயம்வரம் நாட்டி தேசதேச மன்னருக்கு மணவோலை அனுப்பினால் அரசர்கள் வருவார் அம்மனுடைய கேள்விக்கு விடைகொடுத்தவர் மணம் புரிவார் நாதா இதுதான்என்யோசனை.

(வீர-வ-ம்) அப்படியே செய்வாய்.

(சுந்தரதர்மன்-வ-ம்) மந்திரி? இன்று நானொருகனவு கண்டேன், அதின்பலனையுரைசெய்வாய்.

(மங்-வ-ம்) நல்லது வேந்தே, வெளியிடுவீர்.

(சுங்-வ-ம்) அப்பா? நானெங்கையோ ஒரு அடவியில் தனியாய் நிற்கவும், அங்கு ஒரு சன்னாசி தோன்றி அப்பா இந்த உருத்திராக்ஷமாலையையணிந்துக்கொள்ளென்று கொடுத்தார், நான்தரித்துக் கொண்டேன், இதை யோசித்துச்சொல்வாய்.

(மங்-வ-[illegible]) [illegible]க்கு நல்லகாலம்வந்தது, பாமனருளால் உற்பத்தியாகிய உருத்திராட்சத்திற்குடைய பார்வதியைப் போல கற்புடைய மங்கையை நீர் அடையப்போகிறீர் வேந்தே.

(சுங்-வ-ம்) அப்படியா பார்ப்போம்.

(தூத-வ-ம்) போற்றி போற்றி ஆண்டவா.

(சுங்-வ-ம்) நீங்களார்?

(தூத-வ-ம்) சுவாமி? பவழேந்திரி அம்மாளுடையமணவோலைகொண்டுவந்[illegible]ாம் கொள்வீர்வேந்தே.

(சுந்த-வ-ம்) மந்திரி? உன்வார்த்தைச்சரி வரும்போற் காணுகின்றது, நான் பவழேந்திரிவிவாகத்திற்குப் போகவேண்டும் சீக்கிரம் எல்லாஞ் சித்தப்படுத்துவாய்.

(மங்-வ-ம்) அப்படியே ஆண்டவா. (சித்தப்படுத்துதல்)

(சுங்-வ-ம்) அடா கட்டியனே? சீக்கிரஞ்சென்று மோகவேதியனை அழைத்துவருவாய்.

(கட்-வ-ம்) அப்படியே. (அழைத்துவருதல்)

(வேதி-வ-ம்) கடவுளைவிட அதிகமான அன்பும் தயையும் வைத்து எங்களைக் காத்தருளும் [illegible]ாதிதியே? அழைத்தவர் ஏதுவோ வுரைசெய்யவேண்டும்நாதா.

(சுங்-வ-ம்) ஓ வேதியரே? இன்றொருமணவோலை வந்திருக்கின்றது நமக்குவிவாகமில்லாதிருப்பதழகல்லவெனமந்[illegible]யும் என்தாதையுமோதுவதனால் உமது கருத்தெதுவோ வெளியாமலுரைப்பீர்வேதியரே.

(வேதி-வ-ம்) விவாகமில்லாதவனை வீணனென்று பலரோசுவதுண்டு,

ஆனால், தாங்கள் சுந்தரியாளிடம் இட்டிருக்கும் அன்பும், அவள்தங்களிடம் வைத்திருக்கும் பிராணனும், அரைநிமிஷம் தரிக்காதே, நீர் சுந்தரியாளிடம் ஆலோசித்துச் செல்வீர் வேந்தே.

(சங்-வ-ம்) சரிதான், யான்வருவதாய் சுந்தரிக்குத்தெரிவியுமையனே

(வே-வ-ம்) அப்படியே. (தெரிவித்தல்)

(சுந்தரி-வ-ம்) வாரும் அரசே! இன்னம் கொஞ்சநேரம் வாராதிருந்தால் நன்றாயிருக்கும்.

(சங்-வ-ம்). அதென்னடிபெண்கண்ணே!

(சுந்தரி-வ-ம்) உம்மைப் பார்க்காத கண்கள் புண்ணாய் இப்படித் தனித்திருப்பதைவிட சாவதே மேலென எண்ணி இருந்தேன், ஏதோ அத்திப்பூத்ததுபோலும், அமாவாசையிரவில் மூன்றாம் பிறைச் சந்திரனைக்கண்டதுபோலும், காலையிலிருந்துவராமல் கடு-நாழிகைக்குமேல்வந்தீர், இதுவே போதும் போதும், ஜாரத்துவம் கெட்டது, ஆசையில்லாநாயகனை அடு[...]துங்கெட்டது, அவனுடன் படுப்பதும் கெட்டது; அதிலும் அங்கனையாய் பிறப்பதே கெட்டது, அதை விரித்துரைப்பதிற் பயனென்ன, ஆகிலும்பெரிதல்ல, நீர் இப்போதுவந்த காரியத்தைச் சொல்லும்.

(சங்-வ-ம்) அடி [...]ரத்தினமே? ஒருமணவோலை வந்திருக்கின்றது நானும் போகவேண்டும்.

(சுந்தரி-வ-ம்) போயி?

(சங்-வ-ம்) லபித்தால்கலியாணஞ்செய்துக்கொண்டுவருகி[...]வே

(சுந்தரி-வ-ம்) சரி சரி சரிதான் சரிபோச்சு, காவேட்டிராக்களுக்கு மேல்வேட்டி இரண்டாம், கடைகெட்ட மூளிக்குபெண்டாட்டி இரண்டாம், என் ஒருத்தி மனம்போல நடக்க வும்மால் ஆகவில்லை, இன்னம் ஒருத்தி வேண்டுமோ! அவள் வந்துகாணுஞ்சுகம் அவ்வளவுதான், போம் போம்.

(சங்-வ-ம்) அடி அன்னமே! அப்படியெல்லாம் வெறுத்துப்பேசாதே, குலாச்சாரப்படி நடத்தவேண்டுமாக்கும்.

(சுந்தரி-வ-ம்) இந்த காக்ஷியாலே யென்னசெய்யப்போறீர்.

(சங்-வ-ம்) அடி உனக்கு ஒரு குறைவு வ[...]பார்ப்பேனு.

(சுந்தரி-வ-ம்) ஒன்றுதான் குறைவு, ஆ! ஆ! இன்னம் எப்படி?

சுந்தரி ஜாவளி.

இ[...]ம்-பியாக், தாளம்-ரூபகம்.

உனைப்பிரிந்து நான் உறங்கலாவேன் துரையே
ஒங்கித் துயர் எங்கி உயிர் நீங்குமே யிறையே.

மதன நூலின் முறையுணர்ந்த மன்னவா உம்மை
மாதகல வேறதுவது நீதியோ இறையே. (உனை)
ஒருகொடி புனைமக் காறு விடிலுலகில் வாழ்வதேறு
உருகியுடல் குறுகிமெலி பெருகுமே யின்றுமே. (உனை)
அன்றெனை யென்றும் மகிழ்வனென்று ஆணையிட்டீரா
ஆசைவிட்டு வேசியெனு மோசிப்போ இறையே. (உனை)
எவருடனு மாடிப்பாடி யிருப்பேனிக்குமே
என்று தெண்டனிப் புண்ணுயுளம் குன்றிடுமிறையே. (உனை)
தனிப்பதைவிட வாராலெந்தன் தலையை வீசினே
தாவிநீரும் போவீர் தோஷமேவிடா திறையே. (உனை)

(சுங்-வ-ம்) அடி கண்ணுட்டியே? என்னடி பெருமூச்சு விடுகின்றாய் உன்னெண்ணத்தை வெளியிடுவாயடி.

(சுந்தரி-வ-ம்) நான்கண்ட அநேக புருஷரில் உம்மை ஒரு ஆணி முத்தைப்போல் எண்ணியிருந்தேன், அப்படியே நீருமிருந்தீர், இப்போது புதியபெண்வந்தால் என்னை மறந்துவிடுவீரோ துரையே.

(சுங்-வ-ம்) அப்படிக்கொருபோதுஞ் செய்யேன், அவளை நான் கலியாணஞ்செய்து வந்தாலும் உன்னுக்கிணையின்படி நடக்கச் செய்வேன், இதுவுமன்றி, சதா உன்பாதம் பணியச்செய்வேன் இதுவே சத்தியம் மாதே? யான் உன்மீதிட்டிருக்கு மன்பு உனக்குத்தெரிந்தவிஷயமே. ஏன் இப்படி அதைரியப்படுகிறாய் கிளியே, வேண்டாம்.

(சுந்தரி-வ-ம்) எப்படி நானுமது சத்தியத்தை நம்புவேன், தினம் மூன்றுவேளைவருபவர் இன்று ஒருவேளைவந்தது சரியோ!

(சுங்-வ-ம்) இன்று இராஜாங்கவேலையிலிருந்தேன்.

(சுந்தரி-வ-ம்) பெண்சாதிவந்தபின் எப்படிவருவீர்?

(சுங்-வ-ம்) மந்திரியைக் காரோபார் செய்யச்செய்து நானுன்னிட மிருப்பேனடி மயிலே.

(சுந்தரி-வ-ம்) சரிதான், சாமி உம்மைவிட்டு நானெப்படிக்கிருப்பேன், என்னையுங்கூட அழைத்தேகுந் துரையே.

(சுங்-வ-ம்) மாதே? அங்கே பலதேசத்து அரசர்கள் வருவதால், நீவரப்போகாதடிகிளியே.

(சுந்தரி-வ-ம்) சரிதான், நீர் [illegible] போகிறீர் இன்று என்னோடு கொஞ்சம் ஆடிப்பாடிச்செல்லும்மகனே.

(சுங்-வ-ம்) மாதே? மந்திரிபிரயாணத்திற்கு சித்தஞ்செய்துகாத்திருக்கிறான். நான் இதற்கு அஞ்சாநாள் வந்துசேருகிறேன் பொறுப்பாயடி மயிலே.

சுந்தரி ஜாவளி.

இராகம்-சுருட்டி, தாளம்-ரூபகம்.

நானேவந்துன்னடிபணிந்தாலும் - மனம்
நாடாமலேனோ மோடிசெய்கிறீர்.
தேன[illegible]ர்பொழியா தேக்குயிலொலியா
தீராவெனக்குநன் மாராசேருமென. (நானே)
ஆசைகொண்டுகாம [illegible]வசத்துடன்வந்தேன்
அவேளவியென்றுமே - இந்த
மோசக்கருத்தை நீநேசிப்பாயென்ருல்நான்
மூண்ணுடே னொன்றுமே
பாசமிலாமலே பாவிமதனேவும்
பாணத்தால்நொந்துமே நாணம்போக்கியிதோ. (நானே)

(சுங்-வ-ம்) அப்படியா! நாமங்கப்புரம்போகலாம்வருவாய் குயிலே.

(சுந்தரி-வ-ம்) அடாசா[illegible] நீசொன்னகெடுவில் வாராவிடில் என்னை[illegible] ஒரு ஏரிகுளத்தில் மாய்த்துக்கொள்ளுவேன், இதுசத்தியம் இதுசத்தியம் என்றறிந்துகொள்ளுவாயடா என்நாயகமே.

(சுங்-வ-ம் நல்லதடி மாதே, அப்பா மந்திரி? நானின்று விந்தைபுரிக்குப் போய்வருகி[illegible], நீதுடிகளை பத்திரமாய்ப்பாதுகாப்பாய்.

(மந்திரி-வ-ம்) மகாபாக்கிய மராசே.—(கலியாணத்துக்கேகுதல்)

(வீர-வ-ம்) அப்பா தோழனே? வேந்தர்களெல்லாம் [illegible]ணவ[illegible]யில் வந்திருப்பதனுல் பவழேந்திரியம்மாளை சீக்கிரம் வரச்செய்[illegible]

(மந்-வ-ம்) நல்லதரசே. (சிங்காரித்து இட்டுவருதல்)

(பவ-வ-ம்) போற்றி போற்றி யென்னையீன்ற பிதாவே.

வீரவர்மமகாராஜன் விருத்தம்.

அன்னமே நானீன்ற மயிலே மானே
ஆசையுள பெட்டகமே அரும்பே தேனே
கன்னமுதே கற்கண்டே கதலி மாவே
கரும்பணியே நற்சுவையே கமலப்பூவே
நன்னெளியே நாய[illegible]ம்[illegible]காணமோக[illegible]ம்
நற்குணமே கற்பகமே நாதனீங்[illegible]
என்மகளே யிம்மாலைதாங்கி யுநக
ளிட்டமுள வர்க்கணிவா யினிவாய்த் தானே.

(வீர-வ-ம்) உன்விவாகத்திற்காகராஜாக்கள் எல்லோரும் வந்திருப்பதனுல், அவாளுடைய புகழும், கீர்த்தியும், தோழியால் தெரிந்துகொண்டு, உனக்கு இஷ்டமுள்ளவருக்கு மாலையிடுவாய் அம்மணி.

(பவ-வ-ம்) மகா பாக்கியம் என்பிதாவே, அடியம்மா பாங்கி? எனக்கு இவர்களின் பெருமைகளைச் சொல்வதிருக்கட்டும், முன் என்கேள்வியை இவாளுக்கு அறிவிப்பாய்.

(தோழி-வ-ம்) நல்லதம்மணி, கேளுங்கள் இராஜாதி இராஜர்களே? என் தேவிக்கு ஒரு வினாவுண்டு அதன் பயனை வெளி[illegible]டுவோர் எவரோ அவருக்கு என்னரசி மாலையிடுவாள் வேந்தர்களே.

(சபை-வ-ம்) அதைத் தெளிவாய் வெ[illegible]ியிடுவாய் தோழியே.

(தோழி-வ-ம்) அப்படியே. (வெளியிடுதல்)

தோழி கவி.

அங்குண்டு இங்கே யில்லான் அவன் யாரோ அரசரேறே
இங்குண்டு அங்கே யில்லான் இவன்யாரோ இயம்புவீரே.

(சுங்-வ-ம்) அதை யின்ன மொருதரஞ்சொல்லுவாய் தோழி.

(தோழி-வ-ம்) நல்ல துமகாராஜனே. (மறுபடியுந்தெரிவித்தல்)

(சுங்-வ-ம்) நான் சொல்லும் விடையக[illegible]ளிப்பாய் தோழி.

சுந்தரதர்மன் விருத்தம்.

மாதே நீ முன்னுரைத்தோளுர் தானென்னில்
மாதர்களி லுந்திவிட்டு வந்த[illegible]ர்கம்மில்
இதெதுவு மறியாவக் காலைதொட்டு
தெரிமனைத பரத்தின்பா லிருந்திலோகக்
[illegible]காதாட்டை யொழித்துமவ னுட்கலந்தே
கோலிக்கா தெமனிருக்க வலிமைபூண்ட
தாதாவே யங்குபுக ழூந்றேன் பெண்ணே
தானறியின் குற்றவனைச் சாற்றுவேனே.
சாற்றுவே னவனிதனி லுதித்தோர்தம்மில்
சகலவல யவங்களுமே குறைகளின்றி
கேடறியா யவதரித்தும் லோகாசார
நிலையகனிற் றனிருந்தும் நிதியைத்தேடிப்
போற்றிசெய்தும் குருபா[illegible]ம் சேமநிஷ்டை
புரிந்துபா[illegible] காரம[illegible]ா[illegible]திடாமல்
தேற்றிமனம் பு[illegible]கொ[illegible]கா[illegible]ங்குகுங்
கிண்டாதோ னியதுள்ளோ[illegible] தெரிகுவாயே.

பவழேந்திரிபாவ[illegible]ுட்டல்.

(பவழேந்திரி-வ-ம்) தேவாதி தேவர்களா[illegible]ிய, முனிவ[illegible]ர்கள் யாகம் பிதாக்கள்காண, சுந்தரதர்மருக் கிதோ மாலையிட்டேன், [illegible]ன்கற்பைச்

காரும் கைலைவாழ்வே? அம்பா; ஜெகதீஸ்வரி காரும் காரும்.

(சுங்-வ-ம்) அழுமாதே? நான் தேசம் போகவேண்டும், இவ்விடம் நடக்கவேண்டிய காரியங்களை நீயே இருந்து முடித்துக்கொண்டு சுந்தரபுரிக்குவருவாய்.

(பவ-வ-ம்) பிராணநாதா? நீரின்றி யெனக்கென்ன சடங்குண்டு? என்தந்தைக் கறிவித்து அடியாளும் வருகின்றேனரசே.

(சுங்-வ-ம்) அப்படியே, சீக்கிரம் காலதாமதம் செய்யப்போகாது.

(பவ-வ-ம்) போற்றி யென்பிதாவே, என்னாயகன் தன் தேசம் இப்போதே போகவேண்டுமாம், நானும் போகிறேன் விடைதாரும்.

(வீரவர்ம-வ-ம்) மந்திரி? இதென்னவிநோதம்! கலியாணச் சடங்குகள் முடியா முன்னமேயே போகவேண்டுமென்பது! உன்கருத்தை வெளியிடுவாய் நேசா.

(மங்-வ-ம்) அரசே? இப்போது சடங்குகளுண்டெனமாதுனாக்கின் பத்தா எண்ணத்தை த[illegible]செய்வாரிருக்கும் அது பதிவிரதைகளுக் கடாது போகவிடைதருவதே நலம்.

(வீரவர்-வ-ம்) சரிதான் போய்வருவாய் என்கண்ணே.

(பவ-வ-ம்) நமது தேசம்போவோம் வருவீர் பிராணநாதா.

(சுந்தரி-வ-ம்) [illegible] வேதியரே? சுந்தரதர்மன் வர இன்னம்மூன்று நாள் இருப்பதால், இப்போது இந்த பிரதானிகளாய் அமர்ந்திருக்கும் இருவரும் சிறுபிள்ளைகளாயிருப்பதனால் நாம் கே[illegible]தைக்கொடுப்பார்கள், எப்படியாகிலும் அவர்களிலொருவனை யென்னிடமழைத்துவருவீரா?

(மோகவேதியர்-வ-ம்) பெண்ணே சுந்தரி? என்மனதிலிருந்த எண்ணத்தை நீ யெப்படி யறிந்தாய்? இதோ அழைத்து வருகின்றேன், என் விஷயத்தைப்பற்றி அவனுக்கு ரொம்பவுஞ்சொல்ல வேண்டும்.

(சுங்-வ-ம்) அப்படியே.

(மோக-வ-ம்) ஐயா யூகி? உம்மை சுந்தரியாள் இரண்டுநாளாய் கவனமிட்டிருக்கின்றாள் நீரேன் அவள் வி[illegible]கூலத்தைத் தீர்க்காதிருப்பது

(யூகி-வ-ம்) அப்படிய[illegible]தெரியாது இன்றிரவில் வருகின்றேன், இந்தபதினாயிரம் [illegible] அவளுக்குக்கொடும், நீர் இந்த ஆயிரவராகனை எடுத்துக்கொள்ளும்.

(மோக-வ-ம்) எழுமலை[illegible]ாயணன்பேரில் பூரணகடாக்ஷமிருக்கவேண்டும், மகாப்பிரபு. அடிசுந்தரி? யூகிபிரதானி யின்று வருவதாய் இதோ பதினா[illegible]ரம் வராகன் கொடுத்தனுப்பினர் கொள்வாய்.

(சுங்-வ-ம்) வேதியரே! நீர் செல்லுகின்றகாரியங்கள்நன்றாகவேமுடி

வாகின்றது, சந்தோஷம் வாரும் வாரும் பிரதானியரே? இன்று காறு இந்த ஏழைபேரிற் கிருபைவந்தது.

(பூஷி-வ-ம்) பெண்ணே? அரசரிக்கு வருவதால் நாலெப்படி வரக் கூடும், தெரிந்தால் ஆக்கினைவருமல்லவா, அன்று நீ என்னைக்கண்டு சிறுநகை புரிந்தது மறவேன், என்செய்வேனடி குயிலே.

(சுந்-வ-ம்) அப்படியா, அவர் கெட்டார் முட்டையிலே, பழங்கட் டையிலே, செடிவெட்டையிலே, சுமைகட்டையிலே, ஆ! குக்கப்பே னே, அவனை விடுப்பேனே, உன்னுசைகொடுப்பேனே, பகையைத்தடு ப்பேனே, மிஞ்சினால் அடியோடெடுப்பேனே, உட்காருந் துரையே ஒருபதம் பாடுகிறேன் கேளடாசாமி.

(பூஷி-வ-ம்) நல்லதடி மானே.

சுந்தரி ஜாவளி.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்.

ஓ! துரையே மோகம் மூட்டவாருமே
நினைந்துமதம் பொங்குதென்னை நெருங்கிச்சேருமே. (ஓ!)
ஆசையில்லா ஆடவரை யணுகலேனேடா
வேசையென் றெண்ணாதே உன்வெள்ளாட்டிநானடா. (ஓ!)
வெகுதினமாய்க் கொண்டவெண்ணம் வேதியருமே
லகுவாயலைக்கூட லாச்சுலச்சைசேபோமே. (ஓ!)

(சுந்-வ-ம்) அடா சாமி? இதென்ன ஆச்சரியம்! அந்த சண்டாள ஐய்யஅவ்வில்லானைப் பங்கப்படுத்த உன்னை வருந்தியழைக்கில், என் ஒருவனு இருக்கின்றாய், இது அழகல்லவே, சி, வெறிமனமே, என் ஆத்திரப்படுகின்றாய் அந்த கருப்புவில்லோனை இன்னம் சற்றுநேரத் தில் அடக்க துரைசிங்கம் வந்திருக்க இனி யென்ன குறை, நிதானி.

சுந்தரி தரு.

இராகம்-காபி, தாளம்-மிஸ்ரமம்.

பல்லவி.

கட்டியென்னைச்சேருவாயடா கண்ணாளனே. (கட்)

அநுபல்லவி.

அட்டிசெய்யாதேயினி தரைநிமிஷம்நான்தாளேன்
எட்டியிருப்பதழகல்லவே பின்னைக்கேளேன். (கட்)

சரணங்கள்.

என்னேரமுமுன்வரவை யெதிர்பார்த்திருக்கேனடா
வன்னநகைகொண்டமாரனே மனத்தாளேனடா. (கட்)
ஆசைக்கிசைந்தவெந்த அழகுள்ள வையாரா
வேசியெனநினைக்காதடா விற்பேன்தீரா. (கட்)
கொஞ்சுமயிலாமணி குடும்பத்தைத்தேடி
அஞ்சாமல்நீதேடவருவாய் என்னருகிலடி. (கட்)

(பூகி-வ-ம்) மெத்தசந்தோஷம், அப்படியே இதோ வந்தேனடி.

கொக்கோவென்று கோழியதோ கூவிற்றேபாவி
தக்கமாரா வருவதெப்போ தயவுடன் தாவி. (ஓ!)

(பூகி-வ-ம்) பெண்ணே? நீ சோரும்போது வருகின்றேன்விடைதா
(சுந்-வ-ம்) நிசயமாய்வருவீரா?
(பூகி-வ-ம்) வருகின்றேன் பெண்ணே.
(சுந்-வ-ம்) என்னமே, என் தலையைத்தொட்டு ஆணையிடும்.
(பூகி-வ-ம்)உன்னுணை வருகின்றேன் மானே.
(சுந்-வ-ம்) போய்வாருந் துரையே. (செட்டியார்வருதல்)
(சுந்-வ-ம்) வாரும்வாருஞ்செட்டியாரே?
(செட்-வ-ம்) சுந்தரம்? இரத்தினம் வாங்கினமொத்தம் 500-வராகன், இன்னம் கொடுக்கவில்லை, என் எண்ணமும் முடியவில்லை, ஐயர் சொன்னபடி நேற்று இங்குவந்து 15-நாழிகை வரையில் காத்திருந்தும், நீ கபாடந் திறக்கவில்லை, நான் துக்கத்தோடு வீடுபோய்ச் சேர்ந்தேன் இது சரிதானு?
(சுந்-வ-ம்) செட்டியாரே? சீமானே? சிரங்கச்செட்டி மருமகனே? நேற்றிரவு எனக்குத் தலைவலியுங் காய்ச்சலுமானதால், மெத்தவும் சோர்வுற்றிருந்தேன், இல்லாவிடில் உம்மை அழைத்திரேனு, உட்காரும் பாடுவேன் ஆ! இப்படியும் வெறுத்துப்பேசலாமா!
(செட்-வ-ம்) சந்தோஷம் அப்படியே பாடுவாயடிதேனே.

சுந்தரி ஜாவளி.

இராகம்-பியாக், தாளம்-ரூபகம்.

என்னைக்கூட வெகுநாள்மோக மிட்டிருந்த செட்டியாரே
உன்னைச்சேர வின்றுகால மூற்றதடா கட்டிநீயே
இரவும் பகலு முன்மோகத்தி லிருந்தேனடா
இன்றுகாலங் கண்டே மையல் தின்றிடாதடா
கரத்தாலென்னைப் பிடித்தபோதே சிலிர்க்குதென் மேனி
கண்ணில்மதம் பொங்குதிதழ் கடித்திடத் தாநீ
சுந்தரனுனை விடவதிக சுகமீயா னென்றே
சோருதுடல் மீறிமோகம் பாரிதை யின்றே.

(செட்-வ-ம்.) அடிகொஞ்சுங்கிளியே? அந்த நான்குமாதர்களில்மேனகையென்பவள் அதிமேன்பாடாய்பாடுபவளெனப் புராணுதிகளிற்கண்டேனேயொழிய விற்பார்த்தறியேன், ஆனதா லிப்போது யோசிக்குமிடத்தில் அந்த மேனகையே நீ யாகத்தோற்றப்படுகின்றது, இது விஷயத்தில் இன்னமும் என் மனங்களிக்கும்வாறு ஒருபதம்பாடுவாயடி தேனே, இதுதவிடசுகம்வேறுவேண்டுமோ!

(சுந்-வம்.) ஆ! அப்படியா! சரி, அப்படியே.

சுந்தரி தரு.

இராகம்-காபி, தாளம்-ஆதி.

பல்லவி.

வருக என்னடா அச்சம் அணைய. (வரு)

அநுபல்லவி.

இருக்கிறேனருகில் ஏந்திழைநானும்
ஏனின்னஞ்ஜா... செய்யுராய்நீதானும். (வரு)

சரணங்கள்.

நீ யென்... றென்று நினையாதேசாமி
நெடுநாள்வேண்டுரேனே நான்காமி. (வரு)
காமியர்வந்து கருதியழுகிறேன்
கன்னெஞ்சமாகுமடா வொழுகிறேன். (வரு)
மாசிலாமணிபோல் ...ன்னனுநீயேயடா
நேசித்துநாமுமிப்போ நேராய்நீவிளையாட. (வரு)

(செட்-வ-ம்)சுந்தரம்? நாளையதினம் அரசன் வருவதாய்க்கேள்வி.

(சுந்-வ-ம்) அப்படியா!!! க, உ, ... ச, ரு, (விரலைவிட்டெண்ணுதல்) நாளைவருவதாய்த்தான் அவரிட்ட... கெடுவு, சரி, என்னால் உமக்கு ஆகவேண்டிய காரியமெதுவோ அதை இப்போதே முடித்துக்கொண்டு போம் கண்ணுரை. (முத்தமிடுதல்)

(செட்-வ-ம்) நல்லது சுந்தரம். (இருவரும் லீலைக்கேகி வெளியில்வந்து வார்த்தையாடுதல்)

(சுந்-வ-ம்) இதென்ன செட்டி ஙாையே?

(செட்-வ-ம்) உனக்குத்தான் இருக்கிறதே.

(சுந்-வ-ம்) என்ன காட்டுமே?

(செட்-வ-ம்) அப்படியே, இதுவோ தருப்புக்கம்மல்.

(சுந்-வ-ம்) ஆ! ஆ! வெகுநேத்தியா யிருக்கிறது, ஒரு நல்லநாள் பெரியநாள் வந்தால் அப்போது இதைப்போட்டுக்கொண்டால் ரொம்ப நன்னாய் இருக்கும் அடா சாமி,—(கொஞ்சிக்கேட்கல்)

(செட்-வ-ம்) அப்படியே சுந்தரம், எடுத்துக்கொள் இது ஒரு பெரிதான காரியமா! நீ கொடுத்தசுகத்திற்கு இன்னம் எது கேட்டபோதிலுங் கொடுக்கத்தடை இராது, மனமகிழத்தாசி... க்குக்கொடுத்து ப்பெயரெடுக்காத ஜெனனம், ஒரு ஜெனனமா? சீ, சீ, அப்படி எண்ணவேண்டாம் என் காரியம் உனக்குத்தெரியாதா!

(சுந்-வ-ம்) ஆ! கண்ணுளா! உம்மை இப்போதானு அறிவேன் இதென்ன ...லை, ... கேட்டதும் கேட்காம லிருக்கும்போதே

கொடுக்கும் சாமியார்?சே—இது இருக்கட்டும், சாமி? உன் உடம்பு ரொம்பவும் அலண்டுவிட்டது, நீ வீட்டிற்குப்போய் வேண்டும்போ துவந்திருந்துபோ, நான்தான் எங்கே போரேன்.

(செட்-வ-ம்.) நல்லதடி கிளியே. (செட்டி பார்த்தவாரேகுதல்)

(சுங்-வ-ம்) அப்ப, வந்தசனி தொலேந்தது, இனி வருஞ்சனியைப் பத்தியோசிக்கவேண்டுமல்லவா, சரி, யோசிப்போம், சுந்தரதர்மன் இன்றைக்கு வருவதாய்ச் சொல்லிப்போனதால் வருவான், ஆனதால் நாம் பணிகளை நீக்கி ஒரு பழைய வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டு தலைவிரிகோலமாய் எதிர் நின்று பார்ப்போம், ஒருகால் வந்தால் நாமிருக்கப்பட்ட கோலத்தைக்கண்டு நாம் இல்லாததினால்தான்றோ இக்கெதியாயினளென்று நம்பிக்கை யதிகரிக்கும், இதுவேசரி.

சுந்தரி கண்ணிகள்

இராகம்-நீலாம்புரி, தாளம்-ஆதி.

எப்போ காண்பேனோ! என்துரையை
எப்போகாண்பேனோ!

கப்புதேமோகமென்னைக் — கண்ணாளனைக்காணமல்
மப்புத்தனமாயெனைமறந்து — மன்னனின்றாரோ. (எப்)
நாளாறில்வருவேனென்று — நகன்றுசென்றுமின்னம்
தாளமனங்கொண்டசதி — தானறியேனே. (எப்)
அய்யோ! என்குடிக்கேயமச்சன் — எங்குதோன்றினனோபாவி
பன்னும்நாரியைத்தொட்டு — பார்த்துநின்றிட்டாரோ. (எப்)
மாநிலாமணிபதம் — மனதில்நினைந்தேதினம்
வாசியையடைக்கினும் — வாழ்வதேயினிநலம். (எப்)

(சுந்தர்தர்மன்-வ-ம்.) ஆ!!! அதோ யார்வருகிறது! சுந்தரமா! அய்யோ! நாம் நாலுநாள் இல்லாததற்கே இக்கோலமாயினள், கலியாணச்சடங்குகள் முடியும்வரையில் அங்கிருந்தால்இறந்தேபோயிருப்பள், நாம் உடனே வந்ததால் இவளைக்கண்டோம், சரி, அடி பெண்ணே பவழேந்திரி? இதுதான் நமது தேசம், அதோ பார் எதிர்நோக்கி வருபவள் என் பிராணனுக்கு அதிகாரியாக்கும், ஆனதால் நீ அவளை விநயத்துடன் சேவித்துக்கொள்வாயடி பெண்ணே.

(பவ-வ-ம்) அப்படியே பிராணநாதா? —போற்றி போற்றி அம்மணி? அடியாளும் உமது திவ்யபாதங்களுக்கு அடிமை, ஆதரித்தாட்கொள்ளவேண்டும் தாயே.

(சுங்-வ-ம்) ஆ! இவளைப்பார்த்தால் ஆதிலட்சுமியைப்போ லிருக்கின்றாள், ஆ! இவள்பாதத்திற் கிணையாகமாட்டோம், மற்ற எந்தப் பெண்களும் இணையாகமாட்டார்களே! இதன்றி தேவகன்னிகளையும்

இனே விடப்போமோ ! இவனே இந்தரூபத்தோடு படைத்தவனுடைய எண்ணம் எதுவோ ! நம்மைக்கெடுக்கத்தானல்லவா ! நல்லது இவனே ஊருக்கப்புறமிருத்தி ஆசனேக் கலந்தாடாமற்செய்வோம், அந்த துஷ்டனுகிய மந்திரியால் நமக்கு வந்தகேடல்லவா, ஆனதால் அவன்பேரில் தூறுசொல்லி நீக்கச்செய்வோம், இதுவேசரி, எழுந்திரடி பெண்ணே எழுந்திரு—அரசே ? இப்படிவாரும்.

சுந்தரி தரு.

இராகம் சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆ ! உன்ஜால[illegible]க்தேனே சாமி நானே காமி. (ஆ !)

அநுபல்லவி.

போ-போ உன்தேச[illegible] பொல்லாதுர்வாசம் பெண்பழிதோஷம் (|

[illegible]ணங்கள்.

தப்பிலிதனம் இன்றலோகண்டேன்
ஒப்பிலாமாரா செப்பவும்மாமோ
தானேன்மோகம்-கேளே னுன்சொல்-ஆளனே நானும். (ஆ !)
ஐந்தாறுநாளில் வாரேனென்றென்னிடம்
தந்திரமாய்ப்பேசி சந்[illegible]ரனேபோனாய்
ஆசையில்[illegible]லையே-ரோஷமில்லாத-வேசியல்லடா நானும்.(ஆ !)
அ[illegible]டையிலிருக்கும் வண்டைநாரியை நீ
[illegible]னங்கிட்ட கொழுப்போசுந்தரா
ஆகாதுசினேகம்-வெகுதென்மனம் - போகுதேகனம். (ஆ !)

(சுந்த-வ-ம்.) அ ! என்னடி இப்படி வெறுத்துப்பேசுகிறாய், நான் அங்குசென்று இம்மாது கேள்விக்கு விடைதர மாலைகட்டப்பட்டவனேதவிர வேறொரு சடங்குகளும் நடத்திக்கொள்ளாமல் நீ கொடுக்கும் பேரானந்தவாரியை பெரிதென எண்ணி இங்ஙனே ஓடிவர, நீ இவ்வாறு மனஸ்தாபப்படுவ[illegible] அழகல்லடி கண்ணே.

(சுந்-வ-ம்.) அப்படியா, ஆனால் சரி, இன்னொரு இரகசியம்.

(சுந்த-வ-ம்.) அது என்னடி ?

சுந்தரி விருத்தம்.

படிப்பில்லா மைந்தனேயீன்றதந்தை
பகைஞனே யெண்ணிடுவன் பாரில்காதா
விடிப்பதென்ன மலடியன்றோ குலத்துக்[illegible]தான்
வேந்தனே சத்துருவாம் விவேகத்திர்க்கே
குடிப்பதுகட் கொடுமையதாம் கோவேகாற்றக்
கொள்ளுநல்ல மனத்திற்குப் பகையாமிங்கு

நடித்திடுவேன் ரூபவதி தனைமணந்தோ
னுக்கவ ளவ்வாறெனு நாலோது தன்றே.

(சுங்-வ-ம்) ஆ! என் கண்ணுளனே? என்னவேலைசெய்துவிட்டீர், கேளும், தந்தைக்கு வாசிக்காத பிள்ளையும், குலத்திற்கு மலடியும், கவரதைக்குக் கள்குடியும், வாசனைக்கு நாற்றமும், சொண்டவனுக்கு ரூபவதியாகியபெண்சாதியும்சத்துருவல்லவா! ஐயோபாபம்!! உன் உயிருக்கே உலைதேடிக்கொண்...ர, என் செய்வேன் துரையே!

(சுந்த-வ-ம்) இதென்ன விபரீத...யிருக்கிறது!

(சுங்-வ-ம்.) ஊத உதடும் பிள்ளைபெற வயிறுமிருந்தால் போதாதா, நீர் இப்படிக்கொத்த ரூபவதியை என் கொண்டுவந்தீர்.

(சுந்த-வ-ம்.) நீ சொன்னவிபரம் என்ன...டி நாஜினி.

(சுங்-வ-ம்) அப்படியா, அடெப்பூத உத்தமம், பிள்ளைபெற வயிறுமிருந்தால் போதாதா, சம்சாரிகட்குள ...ளோ அதிரூபவதி, "பாரியாளும் ரூபவதி சத்துரு" என்றறியீரோ, ...பாம் போம்.

(சுங்-வ-ம்) ஆம், ஆம், சரிதான் இப்போது என்புத்தியிற்பட்டது இவளை என்னசெய்யவேண்டும் சொலவாயடி கானக்குயிலே.

(சுங்-வ-ம்) நீர் இவளை ஒருவர் முகம்பாராதபடிக்கு கொஞ்சநாள் அறைக்குள் இருக்கச்செய்யும் அப்பால் சொல்லுவேன்.

(சுந்த-வ-ம்) அப்படியே சூரியனைக்கூட நோக்காமல் கடுஞ்சிறையிவிட்டுச் சேர்வையைக்காவல்வைத்து விடுகின்றேன் ...கனுக்கு.

(சுங்-வ-ம்) அப்படிக்குச்செய்தபின் என்மாளிகைக்குவாரும்.

(சுங்-வ-ம்) அப்படியே, ஆயினும் நீ இருக்குங் கோலத்தைக்கண்டு என்பிராணன் தவிக்கின்றதடி மடமானே.

(சுங்-வ-ம்) நீரில்லாநாளோ, நிலவில்லா இரவு, ஆகையால் நீர் இல்லாதபோது என் சிங்காரிப்பைப் பார்ப்பவரார், எனதெண்ணம் நீரறியீரா! சரி, ஆடவர் மனங்கல்லென்றும் மங்கையர் மனம்பேதமை என்றும் இன்றேதெரிந்தேன், மேலும் அம்மிதுணையாக, அரசாணி முன்பாக, அருந்ததி சபையோர்சாக்ஷியாக, பிராமணாள் முன்னிலையில்பச்சைப்பந்தலில் எட்டி தொட்டுத்தாலி கட்டிவந்த சிமாட்டியா, என்னையும் ஊரிலுள்ள தாசியைப்போல எண்ணி கேட்டுவிட்டீர், இது களிருக்கட்டும், ஒருகாரியம் நடந்திருக்கிறது, சீக்கிரம் வாரும்.

(சுந்த-வ-ம்) இதோவந்தேன் வீட்டிற்கு நடப்பாய் தேனே,—அடி பெண்ணே பவழேந்திரி? நீ இந்த அறையில் இருக்கவேண்டும், ஒருவருடனும் வசனிக்கப்போகா, வேளைக்கு போஜனந்தாதிகொண்டுவருவள், அதை உண்டு இருக்கவேண்டும், மீறிடில் இவ்வாளுக்கிரையிடுவேன், பத்திரம்.

பவழேந்திரிசிறை -
சேர்வை -
(பவழேந்திரியை யேலம் கூறுதல்) வுத்தமகிளள்)
சேர்வை
குடிகள்
குந்தலராஜன் கோலு)
(பவழேந்திரிசிறை)

(பவ வ-ம்.) புத்தி புக்தி, அப்படியே நாத — ஆ! பரம்பொருளே என் தலையில் இப்படியா எழுதிவைத்தனை!

பவழேந்திரி ஜாவளி.

இராகம்-பியாக், தாளம்-ரூபகம்.

ஓ! சங்கரனே! என்னை இச்சஞ்சலத்தில் விட்டாயே!
வஞ்சகத்தைத் தொட்டாயே! (ஓ!)
உன்னைக்கோரி தவமியற்ற வந்தளித்தாயே
உலகிலென்னைக்கலங்கவிடல் ஒழுங்கதல்லவே-கமன்
விழுங்கவில்லையே (ஓ!)
ஆளன்கோராப்பாவியென்னை யகைத்ததேனையா
அங்கஞ்சொக்கி குன்றினாலு மழுகவைத்தாயே-தினம்
தொழுகவைத்தாயே. (ஓ!)
கல்லுமண்ணும்பிறந்திட்டாலுங் கவம்பெறுவேனே
கன்னியாக்கிவர்மயிட்டுக் கரையவிட்டாயே-கனம்
குறையவிட்டாயே. (ஓ!)
வல்லுயிராய்ச்சாகிற்பாபம் வந்துசேருமே
வசைமொழிகளிசைகுவரே யகிலத்தோருமே-மேல்
உலகத்தாருமே. (ஓ!)

(தோழி-வ-ம்.) அம்மணி? போஜனங்கொள்வாய் தாயே.

(பவ-வ-ம்.) தாயே? எனக்கு போஜனம் ஒருகேடா, பயித்தியக்காரி.

(தோழி-வ-ம்) என்னசெய்யலாமம்மா, மன்னன் வேசிமோகத்திலிருக்கிறார், பெண் ஜென்மமோ கடைப்பட்டது தாயே.

(பவ-வ-ம்) இருந்தால் இருக்கட்டும், நானுமவருக்குப் பணிவிடை செய்யச் சித்தமாயிருக்கிறேன், ஆகிலும் என்கணவருடைய பாததரிசனங் கிடைத்தா லதுவே போதுமம்மா.

(தோழி-வ-ம்) அம்மா? தங்களைக் கனவிலும் நினைப்பதில்லையே! சாப்பாடு இல்லாமல் எப்படி இருக்கக்கூடும், தேகம் இளைத்துப்போகுமே, ஆனதால் எவ்விததுயரிருக்கினும் எழுந்துசற்றுதயவுசெய்யும்

(பவ-வ-ம்) அம்மா தோழி? நல்ல-பிராணன் நாற்பது நாள் இருக்கும், என் கொழுனர் என் முகத்தைப்பாரா விரதம் பூண்டிருக்கச்சேயர்பார்த்து மெச்சவுண்டு யான்உண்க வேண்டியது, போ போ. (சிறல்)

(தோழி-வ-ம்) புத்தி யம்மணி, மன்னிக்கவேண்டுந்தாயே.

(சுந்-வ-ம்) வாரும் வாரும் சாமி?

(சுந்த-வ-ம்) அடி பெண்ணே சுந்தரம்? நீ சொன்ன காரியமெனுவோ அதை சீக்கிரம் வெளியிடுவாய்?

(சுந்-வ-ம் அதைக்கே ட்கவா இரண்டு நாள்கழித் துவந்தீர், ஐயோ ஜாதகத்துவக்கெட்டது, , சீ, இந்த ஜென்மம் வீணே, போதும்.

(சுந்த-வ-ம்) மாதே என்னடி இப்படி தேகத்தை அலட்டுகிறாய் என் எண்ணம் உனக்கு தெரிந்திருக்கும் இப்படி சோதிப்பதடா யான் இல்லாத காலையில் மந்திரி நடத்திய காரியாகாரியங்களை விசாரிக்கவேண்டியிருந்ததால் இற்று நாளாயிற்று கோபம் வேண்டாம்மாதே.

(சுந்-வ-ம்) (இதுதான் சமயமென எடுத்தோதல்) அந்தபடுபாவி இன்னம் இருக்கிறானா ! அவனை நீர் உதச்சர்வுவரவில்லையா !

(சுந்த-வ-ம்) அவனாடி ! சொல்லடி என் கண்ணே.

(சுந்-வ-ம்) அப்படியா ! கேளும் அரசே.

சுந்தரி கண்ணிகள்.

இராகம்-காபி, தாளம்-ருபகம்.

என்னசொல்வேன் நடந்தகதி
இறைவாநானுமே

எங்குளம் வாடுதையோ
இசையத்தானுமே (எ)

அரசேநானுன் னாசைப்பெண்டென்
றறிந்தும்பாவியே

அமைச்சனென்னைப் பெண்டழைக்க
லானான் தாவியே. (எ)

போடாபோவே யென்றுநானும்
புகலத்தோஷியும்

போற்றிசெய்து வணங்கிச்சென்றான்
பொல்லாப்பாவியும். (எ)

உமக்குரைக் காதிருக்கவென
வருகிவாடினான் .

உள்வஞ்ச மிட்டவன்போல
வுன்னி யோடினான். (எ)

(சுந்த-வ-ம்) ஆ ! அப்படியா ! அந்தப்பாவியை இப்போதே வெளியாக்கிவிட்டு வேறு மந்திரியை வருவித்துக்கொள்ளுகிறேன் கோதே.

(சுந்-வ-ம்) என்னமோ பாரும் அப்படிச்செய்யாவிடில் மறுபடியும் என்னைப் பார்க்கீர் என் பிராணேசா.

(சுந்த-வ-ம்)இதோ பாரடிகுயிலே. (அரசுக்கேகுதல்) அடா அதிதுஷ்டனாகிய அமைச்சா? நீ இப்படிவா?

(மந்-வ-ம்) சுவாமி? ஏது என்பேரில் இவ்வளவு கடூரமான கோபம்

(சுந்த-வ-ம்) யான் இல்லாதகாலையில் என் ஆசைப் பெண்டாகிய சுந்தரியாளை பெண்டுக்கழைப்பது நீதியோ! பேசாதுஷ்டா.

(மந்-வ-ம்) சுவாமி? இருக்கும்போதே இடிவிழுந்தால் என்னசொல்லப்போகிறேன் அப்படி ஒருபோதுமிராது அரசே.

(சுந்த-வ-ம்) சி நன்றி அற்ற பிணமே, என் சுந்தரம் ஒருபோதும் தந்திரமானவார்த்தையாடாள் ஆனதாலினி நீ என்முகத்தின்முன்நிற்கப்போகாது, என் சபையைவிட்டப்புறம் நடப்பதுடன் என் தேசத்தெல்லையையுங்கடப்பாய்.

(மந்-வ-ம்) அப்படியே நாதா, விதியே இதுவும் விந்தையே!

(சுந்த-வ-ம்) அப்பா யூகி! நீ சிரித்ததற்குக் காரண மென்ன?

(யூகி-வ-ம்) ஒன்று மில்லை அரசே.

(சுந்த-வ-ம்) நீ க்ஷத்திரியனானால் வெளியிடுவாய் ஒளிக்காதே.

யூகி விருத்தம்.

வேசிவலைப்பட்டவற்கேயறிவுமில்லை
விவேகமில்லையுத்தியில்லைவிளங்கவொன்றை
யோசிக்குங்குணமதில்லைமானமில்லை
யும்பரருணுண்டெனுமோருமதியில்லை
காசினியிற்றொழிற்புரியுமகைவனமில்லை
கற்புடையாள்தனைமதிக்குங்கியானமில்லை
தேசிகனேயெனவெண்ணிச்சிரித்தேனென்று
தெரிகுவீரிதுவுண்மைத்தேவேபோற்றி.

(யூகி-வ-ம்) அரசே? விவேகிகளாற் புகலப்பட்ட நூலைக்கொண்டு என்சிற்றறிவி லெட்டியவாறு புகலமாட்டுவேன், அதாவது ஒருவன் பஞ்சபாதகங்களுக்கிரண்டு ஓர் உருவோடுங்கூடிய வேசியின் மாயவலையிற்சிக்குண்டவனுக்கு அறிவு, விவேகம், நற்புத்தி, யாதொன்றை யோசிக்குமார்க்கம், மானாபிமானம், சாக்ஷாத் பரஞ்சோதியை சற்றுகிலும் ஸ்தௌத்தியஞ் செய்யநினைவும், உலகத்தின்கண்ணுய்யும் மானிடர்கள்பேரில் பூதயவு பச்சாதாபமும் கிஞ்சித்தேனு மிராது, இதன்றியில் தன்னுடைய இல்லாள் எவ்விதத்துயருறில் கண்ணெடுத்தும்பாரானென்று எண்ணிசிரித்தேன் இது உண்மைகோவே.

(சுந்த-வ-ம்) சரி, அப்படி யாருக்கில்லை?

(யூகி-வ-ம்) உமக்கே.

(சுந்த-வ-ம்) அதெப்படி?

(யூகி-வ-ம்) விபரமா கேட்கலானீர் தெரிவிக்கிறேன்கேளும்.

யூகிவிருத்தம்,

மன்னர்குலனேயுண்மைபேசவென்றீர்
மாப்ரபுவேநீரில்லாக்காலைவேசி
நன்னிலைவிட்டையரையென்பாலனுப்ப
நானேகவெனையனந்தாள்நாணயத்திற்காய்
அன்னிதமாயுத்தமன்மேற்பழியதிட்டாள்
அறியாமல்வெளிசெய்திரமச்சன்றன்னை
யென்னவுந்தனாதிவென்றேசிரித்தேன்வேந்தே
யிதுவுண்மையறிசத்யமியம்பினேனே

(சுந்த-வ-ம்) அப்படியா! நீ இப்படிச்செய்தது சரியா! நீயும் சத்யவந்தன்தானா! (வியப்புறல்)

(யூகி-வ-ம்) கேட்பாய் மன்னா? வேசியோபொதுவானபொருள்; அவளுக்கு நாயகன் பணமின்றி வேறில்லை, உமக்குமுதல் எத்தனை நாயக

ரை காணயத்திற்காகச் சேர்ந்திருப்பாள், ஆருக்கார்சதம், ஆனல் நீர் இப்போது விவாகஞ்செய்து வந்த அந்தவேசியின் போதனையால் அருஞ்சிறையிலிட்டிருக்கும் உமது தேவி எனக்குத்தாய், மற்றும் உலகத்தோருக்குந் தாயென்றறிவிர் சூன்ய அறிவுள்ள அரசே.

(சுந்த-வ-ம்) அடா யூகி! என்னையவமதிப்பாய் பேசியதுடன் எனக்கே நீதியும் ஓதவந்தாய்! சரி சரி, நன்றாயிருக்கிறது.

சேர்வை விருத்தம்.

இந்தவாறுகத்தானே யியம்புமிப்பாதகன்றன்
தந்திரமொழிகள்தன்னை தகுதியென்றுரைக்கப்போமோ
விந்தையென்றறிந்தேநீரும் விரைவினில்நீக்கியப்பால்
சுந்தரிமனம்போல்நீரும் சுகமுடனிருப்பீர்கோவே.

(சேர்வை-வ-ம்) அரசே? இந்தப்பாதகன் அஞ்சாநெஞ்சுடையவனாகி குற்றமற்றசுந்தரியை நிந்தித்ததுமல்லாமல் உம்மையும் இச்சபையில் சகலநீதியுணர்ந்தவன்போல் பேசத்தலைப்பட்டான், ஆனதால் இக்கொடியோனை இவ்விடம்விட்டுநீக்கும், சுந்தரிவார்த்தை சரியெனமதித்துக்கொள்ளும் அரசே.

(சுந்த-வ-ம்) ஆம் ஆம் தெரிந்தேன், — அப்பாகட்டியனே? மந்திரியை யழைத்துவருவாய் (போய் அழைத்துவருதல்)

(மந்-வ-ம்) அரசே? அடியேனை யழைத்தகாரியம்யாது?

(சுந்த-வ-ம்) மந்திரி? யோசிக்குமளவில் உன்பேரில் நிர்தோஷமாய் யான் நிந்தித்ததாகத்தெரியவந்தது மனம்பொருந்தா இவ்வாசனத்திலுவீற்றிருப்பதுடன் இந்தயூகி மகாவுத்தமியாகிய சுந்தரியையுமென்னையும் இச்சபையில் இகழ்ந்ததைக்கேட்டாயா!

(மந்-வ-ம்) அரசே? எக்குலத்திற் பிறந்தோனயிருக்கினும் உண்மையை வெளியிடுபவனே அதி யுத்தமன்.

மதியூகி விருத்தம்.

வேசையர்க்குப் பணந்தானே குலமுங்கோலம்
வேந்தரையும் வெறுத்திடுவர் விருப்பமின்றி
வேசையர்க்குப் பணந்தானே புருடனுக்கும்
வேண்டாரே வலியவரில் மதனைக்கூட
வேசையர்க்குப் பணந்தானே குருவுந்தெய்வம்
வேதியரு மீசனுமோர் பொருளதாமோ
வேசையர்க்குப் பணந்தானே தாயுந்தந்தை
விருப்பமுண்டோ மற்றவர்மேல் யாவரேனும்.

(மதியூகி-வ-ம்) மகாராஜனே? என்தமயன் புகன்றது நீதியே, அதாவது வேசிகட்கு கணவன்பொருளே, பொருளீபவன் எக்குலத்தோ

ருயிருக்கினும் புணரத்தகடைசெய்யார்கள், அவாளுக்கோ குலமில்லை, குணமில்லை, குறியில்லை, மேலும் வேசிவலைப்பட்டவனுக்கு பகுசாஅறிவுங்கெட்டு தன்மானம் இன்னதெனத்தெரியாமல் யாசற்றநெஞ்சுடையார் சொற்களைப்பகுத்தறியுங் குணமில்லாவிடத்தில் ஜீவிப்பதைவிட துட்டமிருகங்கள் வாழாநின்ற இருண்டகாடடைவதேமேலென எண்ணினேன், ஆனதால் நாங்கள்போகிறோம், உம்முடைய அதிகாரத்தை சுந்தரிக்குக்கொடுத்து இராஜ்பத்தை ஆண்டுகொள்ளும், வாரும் வாரும் அண்ணாவே

(யூகி-வ-ம்) இதோவந்தேனடா என்னறிவுள்ள சகோதரனே.

(சுந்த-வ-ம்) மந்திரி? நீஎப்போதும்போல் உனக்குள்ள அதிகாரத்தைச் செலுத்திவருவாய், நான் சுந்தரியாளிடம்போய் வருகின்றேன் அப்பா சேர்வையே? அந்தப்பவழேந்திரியென்னும் நாரி எப்படியிருக்கிறாள், தெரிந்திருந்தால் உரைசெய்வாய்?

(சேர்-வ-ம்) அரசே? தங்கள் ஆக்கினையின்படி எங்காவலில் போஜனங்கூட இல்லாமல் இருக்கிறாள், அவள் சுந்தரியாவாளா.

(சுந்த-வ-ம்) சரி, மகாசந்தோஷம்—கட்டியனே? மோகவேதியர் எங்கே? ஏன் இன்னம் வரக்காணோம்.

(கட்-வ-ம்) இதோவந்தனர் ஆண்டவா.

(சுந்த-வ-ம்) வேதியரே? யான் சுந்தரியாள் மனைக்கு வருவதாகத் தெரிவிப்பீர் சுவாமி.

(மோகவே-வ-ம்) நல்லதுபிரபு.

பவழேந்திரி ஜாவளி.

இராகம்-பியாக், தாளம்-ரூபகம்.

இந்தவிதியெனக்கென்றே   யெழுதினானோபாவி
நொந்தகாலைநோவச்செய்வது   எந்தஞாயமறியேனே (இ)
அந்தநாளிற்பலவரச ரறியச்சொன்ன   வென்கேள்விக்கே
சுகுணராரும்விடையீந்திச்   சுகத்திற்கோகெதிபேனே (இ)
என்னையத்தொட்டகணவரென்னைக் கடுஞ்சிறையிடவினையே
ஐயோவிந்தவவதிக்கோவெனை யாளக்கியேதாளச்செய்தாய் (இ)
பிறக்கும்போதேயிறந்திருந்தாற் பெரும்பதவியுண்டெனக்கே
பேதையாக்கிவேதைபடம்   பெருந்திடையிதாதானே (இ)

(மோகவே-வ-ம்) அடி சுந்தரி? உன் மாப்பிளைவாரான் பத்திரம்.

(சுந்-வ-ம்) அப்படியா! செட்டியாரே செட்டியாரே? இராஜன் வருகிறானாம் தாங்கள் நாளைகாலையில்வந்தால் உமதிஷ்டம்போல் சுகத்தையனுபவித்துப் போகலாம் சீக்கிரம்போய்விடும், செட்டியாரே? மறக்கப்போகாது, நில்லடா சாமி, ஒரு ஆசைமுத்தங்கொடடா.

(செட்-வ-ம்.) அப்படியே, ஆ! என்ன அன்பு! (நீங்குதல்)

(சுந்த-வ-ம்.) அடி என்கண்ணே?

(சுந்-வ-ம்.) வாரும் துரையே? இன்னேரமேன் தடை? இப்படியும் அன்னம் ஆகாரமில்லாமலலையச்செய்வதற்கு எத்தனை நாள்வர்மம்இட்டிருந்தீரோ, இதுவும் தீவினைதானு! ஏமாரா? சற்று பொறு.

(சுந்த-வ-ம்.) ஆ! பெண்ணே? இதென்ன அநியாயம்! ஓங்கிறவனை கெருக்குகிறதென்னும்பழமொழிபோல் இப்படியும் எனக்கேட்டுமனதை வியாகூலப்படுத்திக்கொள்ளலாமா! இது சரியல்லவே, கண்ணே? இதெல்லாம்வேண்டாம், ஏன் இன்னம் போஜனஞ் செய்யாமலிருந்தாய்திரேகம் இளைத்துப்போகுமே!

(சுந்-வ-ம்.) ஆ! உம்மைக்காணாதபோது எனக்கு சாப்பாடு ஒருகேடா, நல்லசொன்னீர், உமதாசைவலையிற்சிக்கின எனக்கு உம்மைக் கண்டால்தான் சாப்பிட்டதுபோல் இருக்கிறது உம்மால் பெற்றோர்முதலியவர்களைத்துறந்ததையறியீரா, என்னமோகங்கொடுத்துவிட்டீர்.

(சுந்த-வ-ம்.) இனி பராவாயில்லை, போஜனத்திற்கெழுந்திரு, இதன்றியில் உன்பேரில்அபவாதமிட்ட துரோகிகளை இன்னிமிஷம்வெளியாக்கிவர இன்னேரமாயிவிட்டது, இதுதான் தடை.

(சுந்-வ-ம்.) அப்படியா! ஆனல் சந்தோஷம், வந்த நாரி எப்படியிருக்கிறாள்? அதை வெளியிடும் சரசலோலனே?

(சுந்த-வ-ம்.) குயிலுக்கிள்ளைகளுக்கேட்டு அயர்ந்துசோகமுறச்செய்யும் இனியமொழியுடையாளே? அவள் அருஞ்சிறையில் அன்னமின்றி வருந்திருக்கச்செய்தேனடி நாயகி.

(சுந்-வ-ம்) மெத்த நல்லகாரியம், அடா சாமி? இனி உன்பிராணனுக்கு ஒரு தொந்தரவுமில்லை, இதோ போஜனம் செய்துவிட்டு வாரேன், (போஜனம்முடித்துக்கொண்டு பள்ளியறைக்குவருதல்) வாரும் பஞ்சணைமெத்தையைப்பாரும், உன் எண்ணத்தைத்தீரும், இனி தடைசெய்யப்போகா.

சுந்தரி தரு.

இராகம்-காபி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

அழகுள்ள துரையே [illegible]அணைந்து கூடடா என்னை. (அ)

அநுபல்லவி.

பழுத்திருக்குநாளிலிந்த பாவைதனைவந்துதொட்ட. (அ)

சரணங்கள்.

நேற்றுவருவாயென்றுவழி பார்த்திருந்தேனேவிழி
பூத்துப்போகும்படியாய்க காத்திருந்தேனேசாமி. (அ)

காமனென்னை வாட்டுறானே தாபமேனேதுரையே
சோமன்வெய்யிற்போற்காயுரான் நேமமிதாயினுவிரையே.(அ)
சொக்கமுள்ளபஞ்சணையில் முந்திதழ்கடித்து இராஜா
சுந்தரமாசிலாமணியை சொகுசுடன்போற்றிதேஜா.(அ)

(சுந்த-வ-ம்.) அடி மாசிலாமணதையுடையக்கண்ணே ? என் மனம் போல் உன் மனமுமிருப்பதால், இனி தடையில்லை, மானே.—(இருவரும்துயில் நீக்கிப்பின்,மறுநாட்காலை மன்னன் காலக்கடனைமுடித்துக்கொண்டுத் தசத்திர்க்கேகுகல்)

பவழேந்திரி ஜாவளி.

இராகம்-காபி, தாளம்-சாப்பு.

ஏனினிப் பெண்ஜென்மம் பாவமே. ஓ!(ஏ)
கல்லாயினுமாமாயினுங் கவைக்காகும்பாரிலே. ஓ!(ஏ)
நாயாகினும்வேட்டையாடும் நாதன்கோராப்பாவியானேன். ஓ!(ஏ)
கோடிகாலம்வாழ்ந்தேனோநான் கொழுணனையேபிறிந்திட. ஓ!(ஏ)
பத்துபெட்டுப்பெற்றறிவேன் பலனுங்காணேன்பாரிலே. ஓ!(ஏ)
கணவனடிபிரிந்தமாது கழுதையொக்குமூரிலே. ஓ!(ஏ)

(மகரிஷிகள்-வ-ம்.) அப்பா கட்டியனே ? நாங்கள்வந்திருப்பதாக உன்னரசனுக்குத் தெரிவிப்பாயப்பா.

(கட்-வ-ம்) நல்லது சுவாமிகளே—பராக் வேந்தே ? எங்ஙனமிருந்தோ நமது ஆசாரவாசலில் தங்களைக்காணு நிமித்தம் இரிஷிகள் வந்திருக்கிறார்கள் ஆண்டவா.

(சுந்த-வ-ம்.) அப்படியா ! அப்பா மந்திரி ? எங்ஙனமிருந்தோ பேரறியுடையோர்கள் வந்திருக்கிறார்களாம், ஆனதால் நாம் சென்று அழைத்துவருவோம் வருவாயப்பா —(இருவரும்போயழைத்துவரல்)

(சுந்த-வ-ம்.) போற்றி மகரிஷிகளே ? இந்த ஆசனத்திலிருப்பீர்கள்

(மகரி-வ-ம்.) அப்பா நீயும் உன்குழந்தைகளும் க்ஷேமமா ?

(சுந்த-வ-ம்.) சுவாமிகளே ? அடியேனுக்குப்புத்திரனில்லையே.

(மகரி-வ-ம்.) அது ஏனப்பா ? தவத்தால்வந்த வீரவர்மமகாராஜனது புத்திரியை மாலையிட்டு நெடுநாளாயிற்றே !

(சுந்த-வ-ம்-) ஆம் சுவாமிகளே, திரட்டிக்கு நாளில்லாததினுல் சற்றுதடை பட்டிருக்கிறது.

(மகரி-வ-ம்.) சுந்தரதர்மா ? இன்று நல்லநாள் ஆனதால் உன்காரியத்தை முடிவுசெய்துகொள், குலம்விளக்கவேண்டும், நீயோ சற்புத்திரனைப்பெற்று சுகமாய்வாழ்வாய், சுபம், நாங்கள்போய்வாரோம்.

(சுந்த-வ-ம்.) மகாபாக்கியம் சுவாமிகளே, —அப்பா சேர்வையே ? நீ பவழேந்திரிக்குக தாதிமூலமாய் வந்த புண்யவான்களுடையகருத்

கையுஞ் செப்பி நான் இன்று வருதாய் அறிவிப்பாயடா.

(சேர்-வ-ம்.) அப்படியே ஆண்டவா.

(மோகவேதியர்-வ-ம்) ஓ! ஹோ!!! சுந்தரியாருக்குக் கேடுவரும்போல் காணுகின்றது, என்னசெய்யலாம், யோசிப்போம், சரி, சேர்வையை சுந்தரியிடம் வரச்செய்து மன்னன் பவழேந்திரியினிடம் அவனை போகவண்ணம் முடிவுசெய்யவேண்டும், இல்லாவிடில் கெட்டேபோவாள், ஐயா சேர்வையாரே? இப்படிவாரும், உம்மை சுந்தரியாள் அதிக கவனமிட்டிருக்கிறாள், நீர் தடைசெய்யப்போகாது, ஆனதால் அவ்விடஞ்சென்று காரியாகாரியங்களை யறிந்துகொண்டு பின்பு உமது அலுவலைப்பாரும்.

(சேர்-வ-ம்) அடடா! என்னபாக்கியம்! ஒருமாது வலியக்கோரில் போகத்தான்வேண்டும் இல்லாவிடில்தோஷம் சம்பவிக்கும், சரி, ஐயா வேதியரே? அப்படியே போய்க்காண்கின்[illegible]றேன். (செல்லுதல்)

(மோகவேதி-வ-ம்) சந்தோஷமப்பா, அடி சுந்தரம் இப்படிவாடி! சேர்வையை நீ கோரினதாக வரச்சொல்லி இருக்கிறேன்வருவா னவனை உன்வசம் ஆக்காவிடில் இனி அரசன் இங்குவாரான்.

(சுந்-வ-ம்) அது ஏன் வேதியரே?

(மோகவேதி-வ-ம்) அதுவா இன்று சபைக்குப் போயிருந்தேன், எவ்விடமோ இருந்து இரிஷிகள்வந்து இன்று நல்லதினமானதால் சாந்திமுகூர்த்தஞ்செய்துக்கொண்டு நற்புத்திரனைப்பெறக் கட்டளை[illegible], அரசன் பவழேந்திரியினிடம் வருவதாகச் சேர்வைக்குக்கட்டளையிட்டான், ஆனதால்தான் இவ்விதநடக்கிறதுசெய்து வரச்சொன்னேனடி.

(சுந்-வ-ம்) அப்படியா சங்கதி! எல்லாம்போகிறபோதிலும் இழுக்கிறவலையிலுமிருக்கிறது, சரி, அந்த சேர்வைவரட்டும் ஒருகைபார்க்கிறேன், நீர் சற்று விலகியிரும் குலதெய்வமே (சேர்வையைக்காண) வாரும் வாரும் சேர்வையே? அடியாள் மீதில் இத்தனைக்கோபமா? இந்தமஞ்சத்திலிரும், இந்தச்சிற்றுண்டியை வந்த அலுப்புதீரப்புசியும் நான் வெகுநாளாயிட்டிருந்த மோகத்தைத் தீர்த்துக்கொள்ளாமல்உம்மை இன்று வெளியேகவிடேன்.

(சேர்-வ-ம்) அப்படியே உனதிஷ்டம்போல் நடத்திக்கொள்வாய், ஆ! கருப்புவில்லைத்தாங்கிய மாரனே? என்றுங்காணாத சுகத்தை இன்று சுந்தரிகொடுத்ததால் இவன் எதுசெய்தினுந் தடைசெய்யப்போகாது, சரி, கண்ணே? நீ கொடுத்த சுகத்துக்கு கைம்மாறு எதுசெய்யப்போறேன் சுந்தரம்; மற்றசங்கதி நானே இந்தவேளைக்கு வருகின்றேன் சீக்கிரம் உத்திரவுகொடுப்பாய் நாழியாகிறது.

(சுந்-வ-ம்) ஏது இவ்வளவு அவசரம்?

(சேர்-வ-ம்) விசேஷமொன்றுமில்லை, அரசன் என்னமோ இன்று தன்தேவியிடம் வருவதாகத் தெரிவிக்கச்சொன்னான், அன்றியும் இன்றுசுபதினமென்றும் இரிஷிகள்சொல்லிப்போயினார்கள்.

(சுங்-வ-ம்) ஆ ! கெட்டேனே ! அவள் என்குடிக்குத்தீம்பாய் வந்திருப்பதால் அடாசாமி ? அவளுடன் அரசனைக்கூடாமற் செய்யவேண்டும் என்றுரையே, நீ நினைத்தால்முடியாதா, நாம் எப்போ கலந்தோமோ என்சொல்லைக் கேட்கப்போகாதா, இந்தவுடலும் உயிரும் உம்முடையதல்லவா, இதன்றியில் அந்நாரியைப்பிரித்து எப்படியாகிலும் வெளியாக்கி நீயே அனுபவிக்கவேண்டுமென்றுரையே.

(சேர்-வ-ம்) நல்ல யுக்திசொன்னாய் கண்ணே, அப்படியேசெய்து பலர்களைக்கப்பார்க்கிறேன், இனி சந்தோஷமா யிருப்பாயடி குயிலே.

பவழேந்திரி ஜாவளி.

இராகம்-பீரேு, தாளம்-ஆதி.

விதியே விளைத்தப்பழி யாகோ.

நேத்தி நேத்தி கெட்டுயிர் விடல்
தேத்துவோரார் ஓ தோது - தவம்
ஆற்றிற்புளி யாக்காதே விதி. (வி)
எண்ணியேக்கி யிருந்தசுகம்
ஏக்கமாவ தேகேது - முன்
பண்ணியபாவம் போபோ ஓ விதி. (வி)
யாரதுவாழ்வை யகற்றினேனோ
அன்றியேதோதோ ஓ ஓ ஓ - இனி
கோரியவன்பத மேற்றுவாய் விதி (வி)

(சேர்-வ-ம்) அம்பா தோழி ? நான் உன் தேவியைக்காணவேண்டும் அரசனனுப்பியிருக்கிறார் தெரிவிப்பாயம்மா.

(தோழி-வ-ம்) நல்லதப்பா சேர்வையே.

தோழி கவி.

அம்மணிபோற்றி யரசர்தன்சேர்வையை
அம்மணியனுப்பின ரதிருவிர்சரணம்.

(தோழி-வ-ம்) அம்மணி ; உங்களைக்காணவேண்டி மன்னரனுப்பினதாக சேர்வை தெரிவிக்கச்சொன்னான் தாயே.

(பவ-வ-ம்) அப்படியா ! ஆனால் வரச்சொல்லும் பாங்கி.

(தோழி-வ-ம்) நல்லது தாயே, அப்பா சேர்வையே ? உத்தரவாயிற்று போகலாமப்பா (போய்க்காணல்)

(சேர்-வ-ம்) பவழேந்திரி ? நீ இந்த அருஞ்சிறையிலிருப்பதைவிடஎன் வீடுவந்தால் அதிகசுகத்திலிருப்பையே, ஐயோ ! உன்னைப்பார்த்தால் என்மனம்வருத்தப்படுகின்றது உன்கருத்தென்னமாதே.

(பவ-வ-ம்) அடேசண்டாளா ? இந்தவார்த்தைசொல்லவா வந்தனை நான் பத்தாவின்பாதத்தைக்கனவிலும் மறவாதவளாக இருக்கிறேனில் உன் சடலத்தை கழுகுகள் கொத்த ; நாய், நரிகள், முன்னும் பின்னு மிழுத்து காணாப்பிணமாய்ப்போவாய் ; சி, துஷ்டனே அகலுவாய்.

(சேர்-வ-ம்) அப்படியா ! சபாஷ்.

சேர்வை விருத்தம்.

கல்லதுநாரியிப்போ நவிலுவேன்கேளாயுன்னை
வல்லவட்சுந்தரிக்கே வணக்கிநற்பணிகள்பூண
அல்லலுங்கொண்டுநாளு மலைந்திடச்செய்துமென்மேல்
பல்லோரும்பார்த்துமேசப் பரிகாசஞ்செய்யக்காண்பேன்.

(சேர்-வ-ம்) அடிபெண்ணே பவழேந்திரி ? நல்லது என்மனம்போல நடக்காமல் மகாவுத்தமிபோல் இன்னதென்றறியாமல் தூஷிக்கலானாய், என்னயோக்கியதை, உன்னை சுந்தரிவீட்டிற்குப் புழுக்கையாக்கியாவரும்பார்த்து நகைக்கச்செய்யாவிடில் யான்எடுத்த உடல், ஓர் உடலா ! அதிலும் உன்னை இவ்விதகாரியஞ் செய்துவைக்காமல் தலைசாய்த்து உறங்கேனடி நாரி.

பவழேந்திரி ஜாவளி.

இராகம்--கமாஸ்-தாளம்-ரூபகம்.

இன்றிம்மொழி கேட்கவிட்டா யேற்குமோ நேசா
என்னுடலு முயிருமெத்த வேகுதுனை வாசா (இ)
நன்றறியாப் பேய னென்னை நாயென்றும் பேச
நாயகனுஞ் சொல்லிவிட்டனாயமோ தா ஈச (இ)
போதும் போது மிந்தஜென்மம் புவியில் நாதனே
பொறுக்கேனினி யுயிரைவாங்கும் புகழும் பாதனே (இ)
இனிமேலிருத்தல் நலமலவென வெண்ணினே னுன்னை
கனியுடனே கா கா கா வடியா ளென்னை (இ)

(தோழி-வ-ம்) அம்மா ? இதெல்லாம் விதிப்பயன் என்னசெய்யலாந்தாயே, கொண்டவன் தயவிருந்தாலல்லவோ கூரையேறிப்போர் செய்யலாம் பொறு.

(சேர்-வ-ம்) போற்றி போற்றி ஆண்டவா ? தாங்களின்று வருவதாய் பவழேந்திரிக்குச் சொன்னேன், இங்கு அந்தக்கொடிய சண்டாளன் வரப்போகாதெனச் சொன்னாள்வேந்தே, சுந்தரியம்மாள் குணத்திற்கு இவள் இணையாகாள் இவளைத்தேசம் விட்டு நீக்குவதே உத்தமம்.

(சுந்த-வ-ம்) அப்படிச்சொன்னாளா !!! மந்திரி ? கேட்டாயாசங்கதியென்னைத் தூறுகின்றனையே.

(மந்-வ-ம்) அரசே ? இந்தவார்த்தை தாயார் ஒருபோதுஞ் சொல்லி

வீரர், நான்னாளைக்குப்போய் அறிந்துவாறேன், இது அந்தசுந்தரியாளுடைய மாறுபாடா யெனக்குக் காட்டுகின்றது.

(சேர்-வ-ம்) அரசே? மந்திரிடத்தை யுமக்குத்தெருந்திருக்கிறதால், அவனென்னத்தில் தனக்கிணங்காத சுந்தரியைபெப்படியுங்கெடுக்க நினைத்திருக்கின்றான், ஆனதால் மந்திரிவார்த்தைதனை அனுவசியமென்று தள்ளி உமது மனம்போல் நடத்துவீர் கோவே.

(சுந்த-வ-ம்) ஆம் ஆம், சரி சரி, சேர்வைபே.—ஐயா மோகவேதிபரே? கணவனை யிகழ்ந்தவளை யென்னசெய்யலாம்?

(மோக-வ-ம் பிரபூ? அவளை பலரும்நகைக்க ஏலங்கூறி விற்கிரஞ்செய்யவேண்டியது; இப்படிச்சு முன் அனேகர் செய்ததைக்கண்டுங்கூட இருக்கிறேன் கன்னு.

(சுந்த-வ-ம்) இதுவும் சரியான யோசனையே—சரி, சேர்வைபே? அந்த நாரியை உனது காவலில்வைத்து நாளை பலர் அறிய ஏலங்கூறி, வந்த தொகைக்கு விற்கிரயஞ்செய்துவிடுவாய்—அப்பாமந்திரி?

(மந்-வ-ம்) சொல்லும் அரசே.

(சுந்த-வ-ம் நீயுங்கூட இருந்து வந்தவிலைக்கு விற்கிரயஞ்செய்து அப்பொருளை யென் கண்மணியாகிய சுந்தரியாளுக்கு அனுப்பிவிட்டு மறுவேலை பார்ப்பாய் சீக்கிரம் சீக்கிரம்.

(மந்-வ-ம்) அப்படியே ஆண்டவா,—ஓ! தெய்வமே! எங்கிருக்கிறாய்! ஐயோ! இந்த மகாநீதிவழுவச்செய்யும் மன்னனையும் பார்த்திருக்கின்றாயல்லவா! என்னை உத்தமியைவிற்கவாவிட்டனை!! ஏ! மனமே? கேடுவரும் பின்னே மதிகெட்டுப்போகுமுன்னே எனும் நீதியை மறந்தனையோ, நல்லது பதிவிரதையாகிய பவழேந்திரி எனும் தாயினிடத்தில் வைத்த அன்பினால் மறந்தனையோ லுங்காணுகின்றது உன் தாயிக்கு ஒருபோதும் யாதொரு துன்பமும் நேரிடாது, ஆனால் முன் வினைப்பயனிருப்பதால் தாய் அனுபவிப்பதேகாரியமெனத்தெரிந்து எஜமான் கட்டளைப்படி நடப்பாய்.

(சேர்-வ-ம்) அடி பெண்ணே பவழேந்திரி? உன்னை எங்களரசன் பயிரங்கமாய் வந்தவிலைக்கு ஏலங்கூறி விற்கச்சொன்னார், இதோபார் கணையாழி, வேறு மொழிவேண்டாம்.

(பவ-வ-ம்) ஆ! தெய்வமே! இந்த துஷ்டன் செப்பியவாறு முடித்தானே! இதற்கு யாது செய்யக்கூடும்! தேவா!

(கட்-வ-ம) தாயே? இது வேந்தனிட்ட ஆக்கினைதானம்மணி, யென்னசெய்யலாம், அதி உத்தமனாகிய மந்திரி எவ்வளவோ தடுத்துரைத்தும் இச்சண்டாளன் சொல்லைமேற்கொண்டதினாலிவ்வித ஆக்கினைக்குள்ளானீர்; பெரிதல்ல யாவற்றிக்கும் சர்வேஸ்வரன் இருக்கிறான்.

(பவ-வ-ம்) அப்படியா, சரி, வரும்விதி வந்தேதீரும், இதோவந்தே னடா சேர்வையே.

(தனபாலசெட்டி-வ-ம்) அப்பா உத்தமசீலனே? இப்போது கச்சவட வியாபாரஞ் சுருக்கா யிருப்பதனால், நீ சிக்கக் கோடிவராகனை எடுத்துச்சென்று வாலேஸ்மாநகரில் தரகர் மூலமாய் விதவிதமாக வுயர்ந்தகச்லைசகள் வாங்கிவருவாயா?

(உத்தமசீலன்-வ-ம்) அப்படியே வாங்கி வருகிறேனையா.

(த-செ-வ-ம்) ஆனால் வேறோர் யோசனை என்னைவருத்துகிறது, அதாவது நீயோ இராஜபுத்திரன், அதன்னிரியில் கெம்பீரகுணமுடையவனுயுமிருக்கிறாய், இது நிமித்தம் விலைகுறைத்து வாங்காயே.

(உத்-வ-ம்) நான் உம்மிடத்தில் இரண்டுவருடமாகப் பழகி யிருப்பதால் அதிகவிலைகொடுத்து வாங்கேன், நம்பும்.

(த-செ-வ-ம்) அப்படியானால் சுகமாய் போய் வருவாய்.

(உத்-வ-ம்) புத்தி புத்தி, ஐயா, போய்வாரேன்.

பவழேந்திரி தரு.

இராகம்-தேசிகத்தோடி, தாளம்-மிஸ்ரமம்.

பல்லவி.

ஏன் பிறந்தேனே! நான் பெண்ணாய். (ஏன்)

அநுபல்லவி.

மாணவிந்த மழுவேந்தி மங்கியழமர்மடிமீட்டாய், (ஏன்)

சரணங்கள்.

புத்திவித்தை பூண்டமன்னன் பொருளுரைத்துப் பொற்கொடியை
சத்திக்கொண்டுஞ் சிறைவைக்க நாடியதுன் கோளதாமோ. (ஏன்)
அன்றுதொட்ட அணியின்றி யடியாள்வேறு கட்டலையே
இனறிக்கோல மாய்வீதியில் ஏகவிட்டா யிதுவுங்கூத்தோ. (ஏன்)
கோதிட்டேனே கூந்தலென்றும் குளிக்கதுண்டோ மேனிதேய்த்து
நிதியாமன்ன னிவ்வாறு தெருவில்வர விட்டனரே. (ஏன்)

(பவ-வ-ம்) ஆ! சிவமே! நீயே துணை; காரும் காரும்.

(சேர்-வ-ம்) அடா தோட்டி? பவழேந்திரியை பலருமறிய ஏலம் போடப்போகிறதாகப் பறைசாட்டுவாய்.

(தோ-வ-ம்) டே. எம்மவென் எப்படி அவச்சரப்பட்ரான் பாத்தியா அது இக்குட்டும், தோ ஆண்டே? பவயேந்திரி ஆரு? ஏ ஏலம்பேசட்ராய்? கா கெக்க செல்லு ஆண்டே.

(சேர்-வ-ம்) கமதரசனைத் தேடிவந்த பெண்ஜாதி அவமதிப்பாய் மன்னனைப்பேசியதால் ஆலோசனைசபையில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது, இனி சீக்கிரம் பறைசாட்டுவாய்.

(தோ-வ-ம்) டேடே எசகூத்தி என்னவேலை செய்திட்டான் ! ஐயோ அந்தம்மா ரொம்ப நல்லவுங்கோ என்னூது கேப்பியட்டு இக்கிறாமே ! இவனுக்கு போங்காலம வந்திச்சி, இன்னம் போகப்போக பாக்கலாம் தோ ஆண்டேதமுக்கு போர்ரேன்,—இடும் இடும், காசிபுணமிருந்தா எடுத்துகுனுவாங்கோ ஆண்டமாரே.

(ஊரார்-வ-ம்) என்னடா தோட்டி சங்கதி ?

(தோ-வ-ம்) சங்கதியா கேக்கிங்கொ, இடும் இடுமடா எசகூத்தியாரே, இடும் இடும் இனி நாடு கெடும் கெடும் அம்மா செல்லு படும் படும், சுந்தரி குடி கெடும் கெடும், சேர்வையை பாவம் தொடும் தொடும் இதுதாண்டா எம்மகளாரே.—(தோட்டி நீங்கல்)

(உத்தமசீலன்-வ-ம்) ஆ ! அங்கென்ன வெகுஜனக்கூட்டம் ! நாமும் சென்று பார்ப்போம், ஐயா இதென்ன சங்கதி ?

(சேர்-வ-ம்) ஆரடா நீ நாயைப்போல் கத்துகிறாய், சி, சி, அப்புறம் போடா கழுதைப்பிறப்பே.

(உத்-வ-ம்) ஆ ! பார்த்தையா ! இவன் கெர்வத்தை ! சிவனே ? இவ்வித பாதகனேயும் வைத்திருக்கிறாயல்லவா ! சீ, மனமே ! ஏன் கவலைப்படுகின்றாய் ? அப்பாதகன் வெகு சீக்கிரங்கெட இதுவே குறியாகும், நல்லோர் மனதைக்குன்னச்செய்யுங் கொடும் பாவி, ஆனால் நீ வந்த காரியத்தை முடிவிட்டேகுவாய், சரி, நல்லது இவன் யாரோ தெரிந்து பிறகுயோசிப்போம், ஐயா இதென்னகூட்டம் ?

(மங்-வ-ம்) ஐயா ? இவன் சேர்வைக்காரன், இந்தச் சண்டாளன் செய்த சூதால் எங்களரசன் தன்தேவியை விற்கிரையஞ்செய்ய ஆங்யாபித்தார், இதன்றியில் இவனே வாங்கி யனுபவிக்க எண்ணமுடையவனாகவுமிருக்கிறான், என் செய்யலாம் பிரபூ.

(உத்-வ-ம்) சரி, யாராவது வாங்கிக்கொள்ளலாமோ ?

(மங்-வ-ம்) அதிக விலைகேட்பவருக்கே கொடுப்பதன்றி மற்றேருக்கில்லையெனத் தீர்மானம் ஐயா.

(உத்-வ-ம்) அப்படியா ! ஆனால் பார்ப்போம். நாமே வாங்குவோம், இந்த அரசன் விபசாரிபோற் காணுகின்றது, அப்படி இவனேவாங்காவிடில் இப்பாதகன் எண்ணமதைப்பூர்த்திசெய்து கொள்வன் : வாங்கி ஒருகை பார்ப்போம் (ஏலங்கூறல்)

(சேர்-வ-ம்) இந்த பவழேந்திரியின் விட் பதினாயிரம்.

(உத்-வ-ம்) அ ! இவனுத்திரத்தைப்பார்த்தியா ! இருபதுநாயிரம்.

(சேர்-வ-ம்) முப்பதாயிரம்.

(உத்-வ-ம்) ஏது இவன் எக்கி ஓடுகிறான் ! நல்லது ஐம்பதாயிரம்

(சேர்-வ-ம்) ஐயோ ! இவனுரோ பணுதிடோலிருக்கிறதன்னியில் நம

க்குப்போட்டியாயுக்கேட்கிறான், மேலும் நம்மிடமிருப்பதெல்லாஞ் சேர்த்தால் ஐம்பதாயிரம் ஆகாதே, சி, சி, நாமித்தருணம் விலைக்கப் போகாது, இன்னம் சற்று மேல் கேட்கிப்பார்ப்போம், இகத்து

(உக்-வ-ம்) ஏது.

(சேர்-வ-ம்) ஐயோ! இதர்க்குமேல்போகுவதர்க்குப் பணமில்லை, பின்னிட்டு யோசிப்பொம், சரி, ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம், ஐயோ! கேட்பாரில்லையே!—அடே துன்மார்க்கா? பணமிருந்தால் சரி, இல்லாவிடில் சிறையிலடைக்கச்செய்வேன் கொட்டு மொகதம்

(உக்-வ-ம்) அடே துரோகி? மறுபடியும் இவ்வாறு அவமதிப்புள்ள வார்த்தை யாடுவாயேயானால் இச்சாதிராயுகத்திர்க்கிரை யிடுவேன் பத்திரம், யாரெனமதித்தாய், ஐயா மந்திரியாரே? இதோ மொத்தம் ஒப்புக்கொள்ளுவீர், இனி தடை செய்யப்போகா.

(மந்-வ-ம்) அப்படியே ஒப்புக்கொண்டேன், ஐயா? தங்கள் நாம தேயமுதலியவைகளேதுவோ, சற்று தயவுசெய்யவேண்டும்.

(உக்-வ-ம்) நானே பத்மசேகர மகாராஜனுடைய அருந்தவப் புத்திரனாகிய உத்தமசீலனென்றறிவீர் மந்திரி.

(மந்-வ-ம்) மெத்தசந்தோஷம் அரசே, என் தாயை ஒப்புக்கொள்வீர்; பரமசிவமே! காரும் இத்துயரைத்தீரும்.—ஆ! என் தாயே இந்த ஞாலந்தனில் என்ன கோலங் காணலானேன்! அம்மணி? நானெவ்வளவோ நீதிகளை யெடுத்துரைத்தும் துர்ப்போதனையினால் மன்னன் கேழ்க்காதவரானார், வேசியின் மோகமே பெரிதேயென்றெண்ணி தங்களை யிக்கோலமாக்கினார்; இனி யென்னசெய்யக்கூடும், நானோ தாயிழந்த கன்றைப்போல் தவிக்கின்றேன், அம்மா? இந்த உத்தமசீல மகாராஜன் தங்களை விலைக்கிக் கொண்டார்,! அந்தோ உங்களுக்கும் அந்த நான்முகன் சற்றேனுங்கருணை வையாமல் இவ்விதிக்கிரைக்கிறான்! சரி, சரி, இனி அவனை நிந்திப்பதில் பிரயோசனமில்லை, தாயே? இந்த காணிக்கையை தங்கள் வழிச்செலவுக்குக் கொண்டேகுவீர் இதோ பாதம்போற்றினேன்.

(பவ-வ-ம்) என்னறிவுள்ளபாலகா? முன்செய்த கர்மசேட்டையினால் வந்தபலனின்றி வேறல்லவே என் வருத்தப்படுகின்றாயப்பா, நீ மனதுக்கத்தைநீக்கி மன்னன்சொற்படி நடப்பதே மேலான தர்மமென்றுணர்வதுடன் நீ யென்வழிச்செலவுக்காகக்கொடுக்குங் காசினை யென்சக்களத்தியாகிய வேசிக்கு மன்னன் ஆசைதீர கொண்டுகொடுப்பதே சரியென மதிக்கிறேன்; இதன்றியில் நான் பத்தாவை நோகப்போகுமா! என்வினைக்கு மன்னன் என்னசெய்வார், எனக்குப்பிராணநாதரும் உனக்குத் தந்தையுமாகிய அரசரை வேசியினால்

எது துயர் அணுகாமல் பாதுகாப்பது உன்னுடைய பெரியகடமை.

(மங்-வ-ம்) ஆ! என்தாயிக்கு என்ன அறிவு! என்ன விவேகம்! இந்த நின்னை நீவுயிருப்பதினால் அன்னை யெவ்விடஞ் செல்கினும் யாதொரு துன்பமும்வாராமல் பரமசிவன் காப்பதுதின்னம்; ஏ மனமே ? இனிதிடப்படுவாய், நல்லதம்மணி போய்வருவீர்,

உத்தமசீலன் பவளேந்திரியின் சரிதையை விசாரித்தல்.

(உத்தமசீலன்-வ-ம்) பெண்மணி ? இனி உன்றுமக்காட்டைநீக்கி என்னுகேள்விக்குச் சற்றுவிடைதருதற்குத் தடையுண்டா ?

(பவ-வ-ம்) யாதொருதடையுமில்லை ஐயா.

(உத்-வ-ம்) சரி, உன்னை இவ்வரசனெல்லரும் அறியவிலைக்கு நீவிற்பனைசெய்ததர்க்குக்காரணம் ? பெண்டைவிற்கும் பேயனென்றும் அரசனை யின்றல்லவோகண்டேன்.

(பவ-வ-ம்) ஐயா? அப்படி என்னரசராகிய பத்தாவைக்காரியமறியாமல் தூஷிப்பது கூடாது, ஆனதால் நீர்கேட்ட கேள்விக்கு சரிவரச் சொல்கிறேன்கேட்பீர். அதாவது, என் தாய்தந்தையர் அருந்தவஞ்செய்துபரமனருளால்நான் உதித்தவளாயிருந்தும் பூர்வீகவினையினால் என்பத்தா விலைமாதர்சேட்டை இன்னதென்றுணராமல் மாபாவியாகிய ஒருசேர்வையின் சகவாசத்தால் யானிவ்வாறுநேனே ஒழிய வேறொன்றுமில்லை, இதைப்பற்றிபத்தாவை வெறுப்பது தருமநீதியல்லவே, தன்னைத்தான்நோவதேபெரிது.

(உத்-வ-ம்) ஆ! இம்மாதை பலருமறிய இக்கோலமாக்கிய அரசனைப்பக்திவிசுவாசத்தோடு புகல்வதுடன் தன்னைத்தான்வெறுத்து ஞாயவுட்டங்களையெடுத்துக் காண்பித்தாள், கற்புடைய மங்கையருக்குக் கணவனே தெய்வமென்பதற்கு இம்மாதேசாக்ஷி, நாம் அறிவினைத்தால் இம்மாதுநிமித்தம் பலவாறுயோசித்துவிட்டது மூடபுத்தியே, அம்மா தாயே? நீர் இப்படியிருந்திடில் முடிவில் உமதுகெதியென்னமோ தெரிந்திலேன், இப்போது மந்திரியென்னும் மனமானது திகைக்கின்றது, சற்றுவுரைசெய்வாய் தாயே.

(பவ-வ-ம்) ஐயா ? இன்னதொட்டு சிவநோன்புஎன்று ஒருவிரதமுண்டு அதை மானதபூசையால் முடிவுசெய்ய கூ-மாதஞ்செல்லும் அதுவரையில் இவ்வாறாகவேயிருப்பேன் முடிந்தவுடன் தேவேந்திரபோகத்தை யநுபவிப்பேன் ; ஆனதால் என்னிமித்தம் உமக்குமனக்கவலைவேண்டாம்.

(உத்-வ-ம்) அப்படியா ! அதுபரியந்தம் உமக்குநான் ஏவல்புரிகுவேன்நாம்வேறுதேசம்போவோம் வருவாய் அம்மணி.

(பவ-வ-ம்) அப்படியே நடப்போம்.

பவழேந்திரி கண்ணிகள்.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்.

ஆ! ஆ! என்னகாலம் வந்ததையோ! ஈசா! பவநாசா!
பெண்ணாய்ப்பிறந்துமே மண்ணில்மாயாகம்
என்னைக்கைவிடலாம் பண்ணினேனே நாவி. (ஆ!)
மாலையிட்ட மன்னன் மகிழ்ந்தேயென்னை நேயே! அமரர்கோவே!
தாவியேயவிழ்க்கவு மேவிடச்செய்தாயே
போவதுமெவ்விடம் சாவதேயினிசலம். (ஆ!)
நாட்டுப்பெண்களைப் போலநானும்வாழ ஆமோ! ஓ! ஓ! பரனே!
தொல்லுலகுதனில பல்லவர்தூற்றவும
சொல்லாவினைவந்து மெல்லக்கப்பிற்றோதான். (ஆ!)
எத்துயர்வந்தாலும் வாட்டும்துணையே மாசிலாமணியே!
உன்னையேகாவுமே பண்ணினேனின்றுமே
வல்மந்தைதவிர்த்துமே இன்முத்திதாருமே. (ஆ!)

(உக்-வ-ம்) ஆ! ஜெகதீசா! இந்த மாதுசிரோன்மணியை இவ்விதத்துயரிலிருக்கப்பார்ப்பது உன் திருவருட்கழகா! அந்தோ! இந்தமாதின்வருத்தத்தை என்கண்ணினால் கண்டு பிறயாபல் உயிருடனிருக்கிறேனல்லா, அப்படிச்சாக என்னினி எல்தனபால் செட்டியிடம் கடன்காரனாகவும் இருக்கிறேன், நம்பிகொடுத்த பொருளை கொடாமல் சாகத்துணிந்தால் என்சொல்வர் உலகத்தார், அப்படிகொடுப்போமெனில் கையில் ஏதொருமார்க்கமும் காணேன் ஈசா! இதற்கொரு மார்க்கம் காட்டுவதுடன் என்தாயிங்கொப்பான இம்மாதினது துயரத்தை சற்று அகலக்கிருபைசெய்யும் பரம்பொருளே, இதோ போற்றிசெய்தேன், காரும், காரும்.

(சேர்வை-வ-ம்) நாம்கொண்ட எண்ணம் வீணாய்விட்டது, காத்திருந்தவன்பெண்ணை நேற்றுவந்தவன் கொண்டுபோகலாச்சுது நாமினி விடுபோவதிற் பயனில்லை, நமதெண்ணமும் முடியவில்லை. சுந்தரிக்குக்கொடுத்தவாக்கும் வீணாயிற்று; என்செய்வேன்விதியே! இன்னும் பார்ப்போம், நாமேன் அதைரியப்படவேண்டும், மெய்வருந்தக்கூலிதரும் எனும்பழமொழியை உளமதிற்கொண்டு அவளைப் பின்பற்றிச்சென்று அந்த இராஜகுமாரனை எவ்விதத்திலாவது உபாயஞ்செய்தாவது அவளைத்துறத்தி அந்தப்பவழேந்திரியை அடைவதே மேலானதீர்த்தி, இதன்றி யிலவனால்புகழ்வரினும் மலதாழ்வுவரினும் சரியே, இனி நாம்திரும்பப்போகா, நடந்தை பார்க்கத்தான் வேண்டும். தொடரல்.

(உத்-வ-ம்) அம்மா? நாம் குக்கலதேசம்வந்தோம் இதற்கடுத்த நாட்டில் தனபாலசெட்டியிருக்கிறார், அவரிடம்விளைப்பயனால் நான் ஆளா

கவிருக்கிறேன் அவர் வியாபாரஞ் செய்யும்படிக்கு இலக்ஷவராகன் கொடுத்தார்; அதையிழந்து உன்னை வாங்கிவிட்டேன் மனம் வாடுகின்றது என்குல தெய்வமே.

(பவ-வ-ம்) அஞ்சவேண்டாம் அப்பா, இந்த மோதிரத்தைக் கொண்டுபோய் இவ்வூர் அரசனிடம் குறைந்தவிலை கோடிவராகனுக்கு விற்று செட்டியார் கடனைத் தீர்த்துவிடும், நான் இந்தமண்டபத்திலிருக்கின்றேன்.

(உச்-வ-ம்) அம்மா தாயே? உன்யெண்ணமதை என்னென்றுபுகல மாட்டுவேன், உன் தயவே தயவு நல்ல சம்மதம், நீர் ஒருவருடனும் வசனிக்காமல் முக்காடுகொண்டு இருப்பீராயாமாகில் இவ்வூரரசனிடஞ் சென்று இம்மோதிரத்தை உமதிஷ்டப்படி விற்பனைசெய்து தொகையைசற்றுநேரத்திற்குள் கொண்டோடிவருகின்றேன் தாயே.

(சேர்-வ-ம்) இவனேதோ காரியார்த்தமாய் குந்தளராஜனிடம் செல்கின்றான், அங்குதப்பியிருக்கத் தப்பி அகப்பட்டுக்கொண்டான் தும்மட்டிக்காமுத்தன் என்பதுபோல் இதல்லவோ நமக்கென்ன ஓடிவாயிற்று; இவனங்குசெல்லாமுன் நாமங்குமுன்சென்று அரசனையிருக்கு இவன் கருத்தை தந்திரவுபாயத்தினால் பேதித்துவிட்டு, உடனே பவளேந்திரியைக் கைப்பற்றுவதே சரியானயோசனை; போவோம்: போற்றி போற்றி அரசே.

(குந்தளமகாராஜன்-வ-ம்) நீ யாரப்பா?

(சேர்-வ-ம்) நான் சுந்தரதர்மருடைய பிரதானி, உம்மிடத்தில் இராஜகாரியமாக வந்தேன், வரும்வழியிலொரு அதிசயங்கண்டேன் அதைத்தெரிவிக்க வோடிவந்தேன் வேந்தே.

(குந்-வ-ம்) அப்படியா! உட்காரும் பிரதானியாரே.

பவளேந்திரி ஜாவளி.

இராகம்-கன்னடா, தாளம்-சாப்பு.

போதும் போதும் பெண்ணாய் பிறந்தசுகம்
போதும் போதும் புவியிலினியிருக்கல். (போதும்)
விதியோ முன்செய்த வினையோ நான்
விலையானதும்வேற் றரசன்கொண்டதுமினி. (போதும்.)
பழியாவமெனும் பச்சாதாபமின்றியே
பத்தா விற்கச்செய்த பலனென்னேயினி. (போதும்.)
வாங்கிக்கொண்டோனதி வாஞ்சையாய்ப்போற்றிட
வைகுந்தனுஞ்செய்த வன்மையெவ்விதமினி. (போதும்.)

(உச்-வ-ம்) போற்றி போற்றி வேந்தே.

(குந்-வ-ம்) நீ யாரப்பா?

(உக்-வ-ம்) நான் வர்த்தகன் தங்களுக் கொருமோதிரங் கொணர்ந் தேனரசே; அதுவோ அதிமேன்மைதங்கினபொருள்.

(குங்-வ-ம்) அப்படியா! எகேகாட்டும் பார்ப்போம்.

(உத-வ-ம) இதோ பாரும் இதன்விலை கோடி வராகன்.

(சே-வ-ம்) இப்படிவாரும் அரசே? இந்தமோதிரம்ஐந்துகோடிபெ றும், இவன்வியாபாரியல்ல, இவனொரு இராஜகன்னிகையை யெத்த னமிருந்தோ கைப்பற்றிவந்து ஊருக்கப்புறமிருக்கும் மண்டபத்தில் இருத்தி இங்கு வந்திருப்பதால் அவளுக்குத்தக்க நாயகன் நீரே. ஆதலால் இக்கட்சணமே காவலரையனுப்பி அவளையழைத்துவரச் செய்து உமது வசமாக்கிக்கொண்டபின்பு இந்தப்பொருளுக்குடைய வரை அழைத்துவரச்செப்பும், இவன் அவளைக்காணாதவனாயப்படியே ஓடிப்போவன், நீரந்த ரூபவதியைக்கூடி அனுபவியும் இதைச்செப்ப வேநானிங்குவந்தேன்.

(குங்-வ-ம்) சந்தோஷம் அடா காவலனே! நமது தேசத்தின் வெளி யிலிருக்கும் மண்டபத்தி லிராநின்றபெண்ணை உன்காவலுக்குள்ளாக் கியென் சிங்காரமாளிகையிலிருத்தித் தாதிமார்களை யெச்சரிக்கையோ டிருக்கச் செய்து எனக்கு அறிவிப்பாய்.

(காவலர்-வ-ம்) அப்படியே.

(குங்-வ-ம்) ஐயா? நீ இங்கிருப்பாய், நான் இரத்தினத்தைபரிசோத செய்து நீ கேட்டபொன்னைக் கொடுக்கின்றேன்.

(உக்-வ-ம்) நல்லது.

(கா-வ-ம்) ஆரங்கிருப்பது? திருட யிப்படிவா?

(பவ-வ-ம்) ஆ! இதென்னவிதி, வருகிறேனையா.

(கா-வ-ம்) இந்தமாளிகையி லிருப்பாய். ஆமடாதோழி? நமதரசன்வ ருமளவும் ஜாக்கிரதையாய்க் காக்கவேண்டும்.

(தோழி-வ-ம்) நல்லதப்பா.

பவழேந்திரி கண்ணிகள்.

இராகம்-நீலாம்புரி, தாளம்-ஆதி.

ஐயையோ எப்பிறப்பி லமைத்த பழிபாவமோ
ஆரிட்ட சாபமோதான் தேவே!
நொய்யவென் னுளமொரு நொடிக்குட் பலதுயரம்
நோக்கியனுப்ப நீதான் தேவே!
மாலையிட்டோர்லேசியின் மயக்கத்தாலென்னைக்கை
மாறிடவுஞ் செய்தாயே தேவே!
ஓலைஇழித்திட நானுனைக் ககப்படா தெந்தன்
ஊழ்வினைப்பயனோதோ தேவே!

வேசிக்கீழ் தாசியைப்போல விதத்தாலோராடவர்கள்
விரும்பவிட்டனை யென்னை தேவே !
ஆசித்துன்னடிகோரி அன்னை தந்தையர்கலம்
அமைத்ததிதற் கோவுன்னை தேவே !

(குந்-வ-ம்) முடிந்ததா?

(காவலன்-வ-ம்) ஆம் அரசே.

(குந்-வ-ம்) ஐயா ? இந்தமோதிரத்தில் பவழேந்திரியென்று இருப்பதால், அவளை அழைத்துவரவேண்டும், இல்லாவிடில் இதுகளவாகும் இதுநிமித்தியம் உன்னை தண்டிப்பேன்.

(உத்-வ-ம்) இதோ அழைத்தோடிவருகின்றேனையா, ஆ ! இதென்ன இங்கிருந்த என்தாயைக்காணோமே ! என் செய்வேன் ! விதியே ! செட்டியார் பொருளும்போய், கிட்டியதாயும்போய், மோதிரமும் போய், நாம் கள்ளனுகுங் காலம்வந்ததே ! விதியே ! இனி இங்கிருக்கப்போகாது, காட்டடைந்து பவழேந்திரியம்மாளைத் தேடுவதே சரி.

(குந்தல-வ-ம்) அடா காவலனே ! நான்வருவதாய் நீசென்று அந்தமாதுக் கறிவிப்பாய்.

(காவ-வ-ம்) அப்படியே, அம்மா ? எங்களரசன்வருகின்றார்.

(பவ-வ-ம்) சந்தோஷம் காவலனே—இனி என்னுமோதெய்வமே !

(குந்-வ-ம்) பெண்மணே நான்வருவதறிந்தும் சிங்காரித்துக் கொள்ளாதிருந்த காரணமென்னமோ தெரிவிப்பாய்.

(பவ-வ-ம்) அரசே ? எனக்கொருவிரதம், இன்னம் ஒருவாரமுண்டு, அதுமுடிந்தபின் தங்களிஷ்டப்படியே நடப்பேன், இன்றுதான் புனிதளானேன்.

(குந்-வ-ம்) அப்படியே செய்குவாய்மாதே, பாங்கிகளே ? வெகுஜாக்கிரதையாயிருக்கவேண்டும் இல்லாவிடில்சிரச்சேதம்செய்விப்பேன்.

(பாங்கி-வ-ம்) நல்லது ஆண்டவா.

(சேர்வை-வ-ம்) நாம்செய்ததந்திரத்தினால் பவழேந்திரி தனியாகினாள், இனி எப்படியும் நமக்குவசப்படுவாள், அவளிருக்குமிடஞ்சென்று வார்த்தையாடிவருவோம் ; அதோமாளிகையின்பேரில் குந்தியிருக்கிறாள், என்ன அழகு, என்னகாந்தி, மாதேபவழேந்திரி ? சுகமா.

(பவ-வ-ம்) இருக்கும் ஸ்தானத்திலிருந்தால் சுகம்.

(சேர்-வ-ம்) உனக்காக நான்மெத்தவும் வருத்தமெடுத்துக்கொண்டேன், நீ கிஞ்சிற்றேனும் கவனிக்காதிருப்ப தழகா.

(பவ-வ-ம்) காலம்வந்தாலல்லோ முடிவாகும்.

(சேர்-வ-ம்) ஞாபகமிருக்கட்டும் நான்தினம் ஒருவேளை, காலம்வருமளவும் உன்னைத்தரிசிப்பேன்.

(உத்த-வ-ம்) ஆ! விதியே! இனிப்பவழேந்திரியம்மாளை எங்குகாண்பேன், செட்டிபொருளைத்தீர்க்க, தாய்கொடுத்தமோதிரமும் போயவளு மெங்கனேனுமறைந்தனள், நாம் காட்டிலலையவுங்காலம் வந்ததே.

உத்தமசீலன் ஜாவளி.

இராகம்-கமாஸ், தாளம்-ரூபகம்.

என்னமோசஞ் செய்தனை நீ மிக்குபவழேந்திரிதாயே
உன்னைக்கொண்டே னுளம்வாடி யுநகலானேனையையோ (எ)
குந்தளனு மோதிரங்கைக் கொண்டுபோர்த்துன்பேரைத்தாயே
அந்தநாம முடையோரை யழைக்கவென்றுன்பிழைக்கலாகேன். ()
உங்கரமெந்தன் கையிலீந் தெங்கோடிநீயுமோளித்தாய்தாயே
இங்கனென்னை யேங்கவிட்டு இருப்பதுவும் செருக்காகுமோ. (எ)
செட்டிகடன் தீராமுன்னஞ் செல்வதங்கடாதெனவே
கிட்டிவ்வனைத் தேடலானேன்கிடைக்கிடாயோ படைத்தேயருள். ()

(சன்-வ-ம்) அடா கட்டியனே? நான் அந்தரதர்மனைப்பார்க்கவேண்டுமேடா, நீ சென்று தெரிந்தோடிவருவாய்

(கட்டி-வ-ம்) அறிக்கைசெய்து வருகின்றேன் சுவாமி, அரசே? யாரோ ஒருசன்னியாசி தங்களைக் காணவேண்டிவந்திருக்கிறு ராசே.

(சுந்த-வ-ம்) வரச்சொல்லுவாயப்பா, போற்றிபோற்றி சுவாமிகளே

(சன்-வ-ம்) பகுதிபிட்சாந் தேகி.

(சுந்த-வ-ம்) மந்திரி? இவருக்கு அன்னமளிக்கச்செய்வாய்.

(சன்-வ-ம்) ஆ! நாமிவனைப் பார்க்கப்போகாதே, அப்பா இராஜனே? நீயபுத்திரனு?

(சுந்த-வ-ம்) ஆம் சுவாமி.

(சன்-வ-ம்) ஆனாலுன்தேவிகையா லெனக்கேதாவது கொடுக்கச் செய்வாய், இது மநுநீதிமுறைமை.

(சுந்த-வ-ம்) சுவாமி? அவளென்னை இழிவாய்ப்பேசியதால் ஏலங்கூறி வந்த விலைக்குக்கொடுத்துவிட்டேன், என்னருமை மாதாகிய சுந்தரியாளைக்கொண்டு தங்களுக்குவேண்டிய வுபசாரங்கள் நடந்தேறச் செய்கின்றேன் சுவாமி.

(சன்-வ-ம்) அவளாரப்பா?

(சுந்த-வ-ம்) அவள் வேசி.

(சன்-வ-ம்) அப்படியா சி, சண்டாளா.

சன்னியாசி கண்ணிகள்.

இராகம்-ஆனந்தபயிரவி, தாளம்-ஆதி.

வீரமுஞ் சூரமும் வெட்கமுங் கெட்டோனே
வேந்தனெனப்போமா சண்டாளா! வேந்தனெனப்போமா.

பாரில்மனையாளைப் பணத்திற்கு விற்றோனைப்
பார்க்கவினிப்போமா த்ரோகி! பார்க்கவினிப்போமா.
அணையுமனைவியை யன்னியற்கீந்தோனை
அரசனெனப்போமா சண்டாளா! அரசனெனப்போமா.
துணைப்பற்றியுந்தனைத் தொடர்ந்தாளை விட்டோனை
துரைதானெனப்போமா பாவி! துரைதானெனப்போமா.

(சன்-வ-ம்) நான் அநேக தேசாதிபதிகளைக்கண்டேன், ஆனால் உன்னைப்போன்றவனை எங்கும் கண்டதில்லை, நீமகாபாதகன் மனையாளைத் துன்பத்திருத்தி குலவிருத்தியைக்குறைத்தவன், உன்னை எமனிழுக் கசிக்கிரத்தில் வரப்போரானடா படுபாவி, உன்முகத்தை நான் பார்த்ததோஷம் நீங்க இதோயாத்திரைபோகின்றேன், கடவுளே! இந்தப் பாவியைப்பார்க்க இன்றெனை விட்டாயா!

(சுந்த-வ-ம்) சுவாமிகளே? நான் புனிதனாகும் முறை உபதேசிப்பீர் நாதா, அ! இனி என்னசெய்வேன்!!!

(சன்-வ-ம்) சி, சண்டாளா.

சன்னியாசி - ஜாவளி.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

நீ பெரும்பாவி பாவி பாவி.
தாவியமாதினைத் தவிக்கவிட்டதோஷி. (நீ)
பாத்தையை நேசித்த பாராளுநிர்ப்பனை
அறமறியாதோனே அபுக்ரமேதோஷி. (நீ)

(சன்-வ-ம்) உன்னுட்டினி அரைநொடியுந் தங்கேனடா பாவி.

(சுந்த-வ-ம்) ஐயையோ! மந்திரி? இதென்ன விபரீதம்! நான் பாவியாகினேன், இனி எப்படி இதற்கு வழிசொல்லுவாய்!

(மந்-வ-ம்) அரசே? என்தாயாகிய பவழேந்திரியம்மாள் குந்தல இராஜனால் சிறையிடப்பட்டிருக்கிறாள் எனக்கேள்வி.

(சுந்த-வ-ம்) அப்படியா! நான்போய் அழைத்து வருகின்றேன்.

(மந்-வ-ம்) சுவாமி? அவன் அதிகபலவந்தன், நீரிப்படிப்போகப் போகாது, வேடமாறிச்சென்று தேவியாரைக்கண்டு அழைத்து புரவியின்மேலேற்றி இரவோடிரவிலேயே வந்துசேரவேண்டியது, அங்கு அதிசண்டாளனாகிய சேர்வையுமிருக்கின்றானும், ஜாக்கிரதை யரசே.

(சுந்த-வ-ம்) அப்படியே செய்கின்றேனப்பா.

(மந்-வ-ம்) அடா இந்தக்குதிரையை வேந்தனோடழைத்துச் செல்.

சுந்தரதர்மன் கண்ணிகள்.

இராகம்-இந்துஸ்தான் கியால், தாளம்-ரூபகம்.

எப்போகாண்பேண்டி யென்கிளியே
எப்போகாண்பேண்டி.

தப்பிலியுன்னையே தாவிவிற்றதினாலே
இப்பிறவியினில் ஏங்கவிட்டனையே. (எ.)
சுந்தரிவார்த்தைக்கேட்டு சொக்கிமனங்கெட்டு
வந்தவரையில்திட்டி வசைமோசம்போனேனே (எ.)
கொண்டவன்பாவி கொடியனெனவேயெனை
அண்டத்தோர்சொல ஆக்கினையோஐயோ! (எ.)

(சுந்த-வ-ம்) அடாசேவகனே! இதோ குந்தலநகரம் வந்தோம், நீ இங்கிருப்பாய், நான்வேறுவேடம்பூண்டு நாட்டிற்குள் போய்வாரேன்.

(சேவகன்-வ-ம்) நல்லதுசாமி.

(சுந்த-வ-ம்) இதேது இங்கொருமாளிகைகட்டப்பட்டிருக்கின்றது! அதிககாவலு மிடப்பட்டிருக்கின்றது!

பவழேந்திரி தரு.

இராகம்-முகாரி, தாளம்-ரூபகம்.

அப்பப்பாகாது இந்தச்சென்மம் - தொட்ட
ஆளனருகிலிருந்தா லல்லவோ இன்பம். (அப்.)
ஒப்பிக்கணவர் பணிக் குதவாதவளாகினேன்
ஓ! கோ! சுந்தரதர்மா உனக்கே அபயமினி. (அப்.)

(சுந்த-வ-ம்) ஆ! இதென்ன இங்காரோ ஒருமாது துக்கக்குரலாய் அழுகின்றாள், நம்முடைய பேரையுங் கவனிக்கிறாள், இங்கு நின்று கேட்போம்.—(செவியினிடம் கரத்தைவைத்துக்கவனித்தல்)

ஆ! வேசிமோகத்தி லமுழ்ந்தியெந்தனையே - மறந்திடவும்
விலைகூறி விற்றிடச் செய்தனீரைய
யோசிப்பதுமேனோ, இனிவுற்றதொரு வல்வினையை
ஓ! கோ! விதிவசமீகாகுமோ உத்தமன்வரப்போறதில்லையே
உயிரைமாய்ப்பதும் உண்மையே. (அப்.)

(சுந்த-வ-ம்) இவள் பவழேந்திரியே, சரி, இனிநாம் தூரமிருக்கப் போகாது, மாளிகையினருகிற் சென்று பிச்சைகேட்பதுபோல் நமது வரவைத் தெரிவிப்போம். இதுவேசரி.

சுந்தரதர்மன் ஹாவளி.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

வேசியினாலிந்த விதிவந்ததே-யென்
வெட்கமனைத்துமன்றே வெளிப்பட்டதே. (வேசி.)
சகிதனை முடியினில் சார்ந்திடவேந்திய
சம்புவேயென்பாவம் க்ஷமித்தருளே. (வேசி)
கும்பிப்பசிதணிக்க கோரியிதோநான்
கோதேதாறுற்றேனிங் குனையடுத்தே. (வேசி)
நம்பிவந்தவனென நாடியேதேனும் நீயே
நயந்தளிப்பாயே பிக்ஷைநாயகியே. (வேசி)

குந்ததர்மன்
பவழேழுந்திரன கொலு
திருடர் சிறை
குந்தரதருமன்
கொலு
குடிகள்

(பவமே-வம்) ஆ! இதென்ன இதுவரையில் இங்கொரு யாசகரும் வந்ததில்லை, இன்று வந்ததிலும் என்னுயகருடைய குரலாய்க்காட்டுகின்றது, அம்மா தோழி?

(தோழி-வ-ம்) அம்மணி,

(பவ-வ-ம்) அங்கு பிச்சைக்கேட்பவரை, என்சாளரத்திற் கெதிராக வரச்சொல்லுவாய்.

(தோழி-வ-ம்) நல்லதம்மா.—(அழைத்துவரல்)

(பவ-வ-ம்) நீர் எந்ததேசம்? பெயரென்ன? இங்குவந்த காரணமென்ன? தெரியச்சொல்லும் சுவாமி.

சுந்தரதாமன் அகவல்.

அன்னமேகிளியே யலறுகுவேன்கேளா ய்
சொர்ணமேயென்விதி சொல்லவும்போ மோ
ஆதிசேடனு மயர்ந்தேவிடுவ ன்
ஆனதாலிப்போ அறிவுளகோ தே
தெரிந்தவரையில் தெளிவுறவுரைப்பே ன்
இந்நகர்வடக்கே யிருக்குதுவீ ர
வர்மமாநகரம் வளப்புறுஞ்செங்கோ ல்
கைதனிற்றுங்கியே கனிவுடனாளு ம்
வீரவர்மனெனும் வேந்தன்செய் த
அருமைதவத்தா லரம்பையர்நா ண
வந்துமேயுதித்த வணிகைபிராம ம்
பவமேந்திரியெனப் பலருஞ்சொல்வ ர்

(பவ-வ-ம்) ஆ! இவர் நமது நாயகரென்பதற்குத் தடையேயில்லை, ஏனெனிலோ நமது தந்தையின் நாடுமுதலிய பெயரும், நாம் உதித்தவரலாறும்வெளிப்படையாயெடுத்துக்காட்டிவருவதால், இவர் நமது நாயகரே, அல்லது அந்தச்சண்டாளனாகிய சேர்வையின்ருகாயிருக்குமா! சி, அப்படி ஒருபோதும் இராது, அன்று நாம் மாலைசூட்டாமுன் நமது கேள்விக்கு விடை ஈயுங்காலத்தில் இவர்துதிருமுகத்தைப் பார்த்திருப்பதுடன்நம்மை எந்தகாரணத்தையோவுட்கொண்டுசிறையிலிருக்கும்படி கட்டளையிட்டகாலையிலும் பார்த்த இத்திருமுகமே, இனி சந்தேகப்படப்போகாது, இனிவரும் வாய்மொழியையுங்கவனிப்போம்; பிறகு சொல்லும் சுவாமி.

(சுந்த-வ-ம்) அப்படியே கேட்பாய்:

எந்தனுக்கொன்றுந் தெரியாகாளி ல்
மணவோலையொன்று மகிழ்ந்தோடிதூத ன்
கொணர்ந்தேயிந்தனன் கொடும்பாவியானு ம்
மகிழ்ந்தோடிசென்று மாதின்கேள்வி யை

தெளியுறவுரைத்துத் தேன்மொழியா ளே
கொண்டுமேவந்த கொடும்பாவியென்பெய ர்
சுந்தரனெனவே சொல்லுவருலகோ ர்
ஆனதால்மாதே யருந்தோஷியெனக் கு
கேளாச்செவியில் மூளாநெருப்பெ ன
சுருதிமுறையிட சொக்கினேன்வே சி
வலைதனிற்சிக்கி வகுக்கொளுமா தை
பல்லோருங்காணப் பார்த்துமேயே ச
விற்றதினாலே வீரமுங்குன் றி
இக்கோலமானே னினிதெரிந்திடுவா ய்
மாசிலாமணிபதம் மனதினில்நாட்டி யே
எந்தன்சரிதையை யிப்பொழுதுனக் கே
எடுத்துநானுரைத்தே னினிவேறிலை யே.

(பவ-வ-ம்) ஆ! இவர் நமது துரை, இனிசந்தேகங்கொள்ளப்போகா ஆ! என் துரையே! நான் தோஷி, துரோகி, சண்டாளி, இந்தப்பாவிதான் அன்று பலருமறியக் கைப்பற்றிய பவழேந்திரி! இதன்றியில் உமக்கு இவ்விதத்துன்பம்வர அடியாளேகாரணமல்லவா! ஆனதால் இப்பாதகியை உமது திருப்பாதத்காலுதைத்து மரிக்கச்செய்தால் நான் நல்லகதியடைவேன் பிராணநாதா.

(சுந்த-வ-ம்) ஆ! பெண்ணே? நீ சொன்னதெல்லாம் எனக்கொப்புமேயன்றி உனக்கல்ல, உன்னை நானிக்கெதி செய்தும் நீ என்னையேமறவாமல்கவனமிட்டிருக்குங்காரணம் என்னமோ மாதே.

பவழேந்திரி விருத்தம்.

கற்றறிந்த மாதர்கட்கே யென்மனாளா
கண்கண்ட தெய்வமவள் கணவனாகும்
நற்றியவர் திருநாமம் பஜிப்பதாலே
நாககன்று மெலான நகரங்கிட்டும்
வெற்றியுளோர் வினைதுசெயினு மிழிவதில்லை
வெறுத்தவளே பெருங் கழுந்த வேண்டார்மேலோர்
சுற்றிடுமே வெம்பாவம் வசைவந்தெய்தும்
சோம்பிடுவா ளறிந்திடுவீர் சொல்லுநாலே.

(பவழே-வ-ம்) சுவாமி? நல்லபெண்ணுக்குகணவனே தெய்வம், அவன்பெயரைத்தியானிப்பதே அவளுக்குத்திருமந்திரம் அதனால் அவளுக்கு நற்பதவியுண்டு, கணவன் எவ்விதத் துன்பத்தி லிருத்திப்பார்க்கினும் மனையாள் வெறுக்கப்போகாது, வெறுக்கிலோ நரகடைவாள் பழிபாவங்கள்சுற்றி அங்குமவளை வாதைசெய்யும், இது சுருதிமுறை பிராணநாதா.

(சுந்த-வ-ம்) சுந்தரியும் என்னை இப்படித்தானேகவனிப்பாள், அவளும் உத்தமியல்லவா, நல்லபதவி அவளுக்கும் கிட்டுமா அல்லது கிட்டாதா, இச்சந்தேகங்களை விசிதமாயுரைசெய்வாய் தேனே.

(பவ-வ-ம்) இவ்விஷயத்தில் நான் வாசித்தறிந்தமட்டிலுந் தெரிவிப்பேன், ஆனல் கோபிப்பதில்லையென வாக்களிப்பீர் நாதா.

(சு-வ-ம்) அப்படியே விளங்கும்படி சொல்வாய் நாயகி.

பவழேந்திரி விருத்தம்.

காசொன்றே வேசியர்க்குக் கணவன்மன்னு
  கையிலில்லா தவனைமெத்தக் கசடனென்பார்
தேசமதிற் சுகத்திலிட்டும் அன்யர்தம்மைத்
  தேடியே பொருளுக்காய்த் தியங்கிச் சேர்வார்
ஆசைவிடே னென்றிடுவார் முன்புபின்னல்
  அணைந்திடுவார் பலபேரை யறிந்துகேட்கில்
தோஷமென்பார் சத்தியங்கள் செய்யநாதா
  துணிந்திடுவார் மெய்யுரையார் வேசையாரே.

(பவழே-வ-ம்) வேசிகட்கு கணவன் பொருள்கொடுப்பவன். எவனிருக்கினுங்கூடுவார், கொடாதவனை விரும்பார், எவ்வளவுகொடுத்தாலும் அன்னியனைக்கோரித் தூதுவிடுவார், தெரிந்துகேட்டால் சத்தியங்கள் வெகுவாய்ச்செய்வார், அவாளுடலே பொய்பால்நிறைந்தது அவர்களுக்கு நரகமின்றி பதவியில்லை, அவாளைக்கருதியிருப்பவருக்குங் கதியில்லை பிராணநாதா.

(சுந்த-வ-ம்) அப்படியா சரிதான் நூலும் இவ்வாறே சொன்னலல்லவா, நாமவளை வெறுத்தது மூடபுத்தியே, பெண்ணே? எனக்குப் புத்திவந்தது, இனி அந்தச்சண்டாளியின் நேசத்தைக் கனவிலும் நினையேன், நீ என்னுடன் வருவாயடி கிளியே.

(பவழே-வ-ம்) நாதா! இது சமையமன்று, பதினைந்துநாழிகைக்குமேல் ஒருகுதிரையோடு நீரிங்குவாரும், நான் இந்த சாளரத்திற்கு சரியாய் ஒரு ஏணிசாத்திவைக்கின்றேன் அதை அசையும் நானிறங்கி வந்துவிடுகின்றேன், காவலர்களால் அரச னறிந்தால்நம்மைவதைத்துவிடுவான்.

(சுந்த-வ-ம்) அப்படியே வருகின்றேனடி கண்ணே, ஆ! பரமசிவமே, இன்று என் உத்தமப்பெண்ணைக்கண்டேன் அவளுடைய கருத்தையும் அறிந்தேன், புனிதனானேன், வசையையும் இனி நீக்கிக்கொள்வேன், சுந்தரியை கனவிலும் காணேன், இது உண்மை அடா சேவகனே? குதிரையைக் கொண்டுபோகிறேன் நான் வருமளவும் நீ இங்கிருப்பாய்.

(காவ-வ-ம்) நல்லதுசாமி.

(சுந்த-வ-ம்) ஆ ! இதோ நமது தேவி முன்ஜாக்கிரதையாய் ஏணி யிட்டிருக்கிருள், ஆனல் இன்னங் காவலர்கள் நித்திரைகொள்ளவில் லே, பத்துநாழிகைப் பொழுதாயிற்று இந்த மரத்தினடியில் ஐந்து நா ழிகைப்பொழுதையுங் கழித்துவிடுவோம். இதுவேசரி.

(திருடன்-வ-ம்) இன்றுநமக்குத் துணைவருகிய அமாவாசைவந்தது இனிநாம் சோம்பலா யிருப்பதடாது நடப்போம், ஆ ! இது என்ன இங்கொரு குதிரைகட்டியிருக்கின்றது சேவகன் சயனித்திருக்கிருன் நாம் வந்ததற்குக் குதிரைகிடைத்ததே போதும், ஆ ! இதென்னமோ ஏணியைச் சாளரத்திற்காய்ச் சாத்தியிருக்கின்றது ஏறிப்போவோம்.

(திரு-வ-ம்) ஆ ! நமதுபுண்ணியமே புண்ணியம் ! ஒரு அழகான பெண் இறங்கிவருகின்ருள் சந்தோஷம்.

(பவமே-வ-ம்) குதிரையெங்கே ?

(திரு-வ-ம்) அடி நீயே நிக்கோ இதோநானடந்துவாரேனடிகுட்டி.

(பவமே-வ-ம்) இவனுரோ தெரியவில்லேயே !

(திரு-வ-ம்) அடி யென்னசென்னே ?

(பவமே-வ-ம்) அ ! வேறுகுரலா யிருக்கின்றதே தெய்வமே ! இ ன்னமுஞ் சோதிக்கின்ருயா ! ஆ ! என் நாயகரெங்கே ! ஜெகதீசா

(திரு-வ-ம்) அடி எங்கவீட்டே நாந்திருடிச்சேர்த்த சொத்துரொம் ப இக்குது, உனக்குக்குடுப்பேன் எம்பெஞ்சாரிக் கில்லேதெரிவாய் !

(பவ-வ-ம்) கடவுளே ! என்னேத்திருடன்கையிற் சிக்கவாவிட்டனே! என் துரையை எக்கதிசெய்துவிட்டாய் ! நல்லது இவன்கையிலிருந் து நாமெப்படியுந் தப்பித்துக்கொள்ளவேண்டும்.

(திரு-வ-ம்) அடியே இதுபெரியகாடு, இங்கொருவருமில்லே, கொ ஞ்சநேரம் படுப்போம் வாடி ?

(பவ-வ-ம்) நான் உம்முடன்வந்துவிட்டதால் காவலர்கள் தேடிவரு வார்கள், முன்னுக்குச்சென்று பொழுதுவிடிந்தவுடன் நீரிக்குதிரையி ன்மீதேறி உமது வீட்டிறகுப்போய் என் மூத்த குடியாளேயும் குலத் தாரையும் வாத்தியமும் அழைத்துவாரும், நான் அவாள்முன் உமக் கு மாலேயிட்டு மனேக்குச்சென்று சயனிப்போம்.

(திரு-வம்) ஆ ! ஆ ! நல்லதடி,

பவமேந்திரி ஜாவளி.

இராகம்-காபி, தாளம்-மிஸ்ரமம்.

எவர்தானேதுவார் இந்தகதி வந்தசேதி (எவர்)
துரைதனேத்தேடித் திரிதமாயோடி
திஷ்டன்கைப்பட்ட வகைப்பாடி-என்னேகாடி (எவர்)
பாவியுங்கூடப் பதைக்கநான்வாட
பத்தாவிற் கிந்தமொழியாட என்னேத்தேட (எவர்)
கணவருமென்னேக் கவர்ந்திடாமுன்னே
கள்ளன்கைச்சிக்கியவாற்தன்னேகாண என்னே (எவர்)

(பவழே-வ-ம்) இதோ பொழுதுவிடிந்தது; நீர் வீட்டிற்குச்சென்று சீக்கிரம் வாரும், நானிங்கிருக்கின்றேன்.

(திரு-வ-ம்) உன்பேரென்னடி ?

(பவ-வ-ம்) பவழம்.

(திரு-வ-ம்) பவளம் பவளம், இதோவாரேன்.

(பவ-வ-ம்) திருடன்கையிலிருந்து தப்பினோம், இனி இங்கிருக்கப் போகாது, இவ்வனத்தின்வழியே கண்கண்டமட்டும் ஓடுவோம்.

(சுந்த-வ-ம்) ஆ! இதென்ன! நாம்தூங்கிவிட்டோம்! குதிரையையுங்காணோம்! வணிதையையுங்காணோம்! ஆ! தெய்வமே! என்னையுமி(?)வை என்னகெதிசெய்துவிட்டாய் இனி என்செய்வேன்!!! சிவனே! இப்போதுயான்.

சுந்தரதர்மன் கண்ணிகள்.

இராகம்-இந்துஸ்தான் காபி, தாளம்-சாபு.

பரதேசியானேன் பரதேசியானேன்
பவழேந்திரியுனைக்கண்டும் பரதேசியானேன். (பர)
பரமனருளால்வந்த பாவைபவழேந்திரி
கருதிவந்ததுபோலே கண்ணுறக்கண்டுமிப்போ. (பர)
கம்புக்குநீயேவித்து கருத்தறியாப்பெரும்பாவி
சர்ப்பனைவுனைசெய்தேன் சண்டாளக்கொடும்பாவி. (பர)
நாழிகைபதினேந்தில் நகன்றுவருவதாய்நீ
ஏழைக்கிரங்கிசொன்ன இன்பமொழியைக்காணேன். (பர)
உந்தனைவெறுப்பதில் உண்டோவுலகில்மார்க்கம்
வந்துஉறங்கினதால் வகைகெட்டுப்போனேனே (பர)
மாசிலாமணிக்குகந்த மந்திரயோகனே
நேசியாப்பிழையேதோ நேராகச்செய்தேனோ. (பர)

(சுந்த-வ-ம்) ஆ! மாதே! அதி ஆவலோடு உனைவந்துகண்டும் நீ உத்தரவுசெய்தவண்ணம் வந்து யான்சற்று அலுத்து உறங்கினதோஷத்தால், நீ குதிரையுடன் எங்குசென்றனையோ! ஆ! தெய்வமே!

சுந்தரதர்மன் கண்ணிகள்.

இராகம்-சாமா, தாளம்-மிஸ்ரமம்,

ஐயோ எங்குதேடுவேனடி மாதே
ஆவிசோருதிங்கு மனங்லையுதேகோதே
ஆரிழைத்தவினையோ இதுதோணேன்
அங்கம்வாடி எங்குந்தேடி அலரிடலானேன்.

(சுந்-வ-ம்) ஆ! ஆ! தெய்வமே! இதுவும் என்விதியா!

(காவ-வ-ம்) அரசே? மாளிகையிலிருந்த மாதைக்காணோம்!

(குந்-வ-ம்) அப்படியா ! எங்குசென்றாள் !

(சேர்வை-வ-ம்) அரசே ? அவளை எப்படியும் தேடிப்பிடிப்போம் வாரும், இதேது குதிரைக்காலடி தோற்றுகின்றது இதைப்பற்றி நடப்போம், அரசே ? இங்கு அடிமாறிபது, பவழேந்திரி இந்தக்காட்டிற் றானிருப்பாள், நீரொருபுறமும் நானொருபுறமுமாய்த் தேடுவோம்.

(குந்-வ-ம்) அப்படியே நேசனே.

(திரு-வ-ம்) ஓ ! அண்ணமாரே ? நானொரு ராசாமகளைக் கொண்டுவந்தேன், எனக்குகலியாணம் நீங்களும்வாங்கோ மேளக்காரா மேளங்கொண்டாடா.

(மேள-வ-ம்) இதோ கொண்டுவந்தோம்.

(குலத்தார்-வ-ம்) எங்கடா ராசாமகள் ?

(திரு-வ-ம்) இதோ இங்கிருக்கிறாள்.

(குலத்-வ-ம்) எதோ !

(திரு-வ-ம்) ஐயையோ ! காணேனே என்னசெய்வேன் !

(குல-வ-ம்) போடா கள்ளப்பயலே பாலைக்குடிக்கி நாங்கபோறோம்

(திரு-வ-ம்) பவளம் பவளம், நீ எங்கிருக்கிறாயடி குட்டி, இதோ அவள்காலடி, பின்னேபோய்த்தேடுவோம் பவளம் ? பவளம் ?

(குந்த-வ-ம்) பவழேந்திரி ? பவழேந்திரி ?

(சேர்வை-வ-ம்) பவழேந்திரி ? பவழேந்திரி ?

பவழேந்திரி தரு.

இராகம்-சுருட்டி, தாளம்-ரூபகம்.

ஆ ! சிவனே ! இந்தகெதி யமைத்தேனோ தோணேனே
ஆ ! துரை யென்னுசையுள்ள வாளன் வரக்காணேனே
சேர்வைசெய்தசூதகனால் சிக்கலானேன் திருடன்பாற்
சிவமேயென்னைத் தொட்டநாதன் சேதியாதுங்காணேனே
மாலையிட்டகணவரை மாபாவி நான்கண்டுன்குறை
மாறிடாமலென்னை யிவ்வாறு மங்கவிட்டதேனையா
சுந்தரதர்மரென்னைத் தொட்டதனாற் பலவினை
சூழ்ந்து உளம்வருந்தலான சூதமேதோகாணேனே.

(பவ-வ-ம்) ஆ! என்னுசையுள்ள மணவாளன், எக்கெதியானாரோ தெரிந்திலேனே சிவமே !

சுந்தரதர்மன் கண்ணிகள்.

இராகம்-சாமா, தாளம்-ரூபகம்.

பவழேந்திரியென்னைப் பரதேசிபோலாக்கி
யாவையெங்குற்றனை பரியுமுன்வசமாக்கி (பவ)

(சுந்-வ-ம்) அடிகண்ணே! இது யாரிட்டசாபமடி; அல்லது நான் செய்த பழியா! நீ இயற்றிய வினையா!

சொன்னவாறு வந்திங்கு சோம்பிநித்திரையோக
சுந்தரமேநீயுஞ் சொல்லாமல் தனியேக. (பவ)

(சுந்-வ-ம்) அடி என்னருகுணம் பொருந்திய அன்னமே, என்னை வாவெனச்சொன்ன வஞ்சியே, என்னை மறந்து எங்குசென்றனை மிஞ்சியே, இக்குந்தளனுக்கஞ்சியே, நான் எங்கெனத்தேடுவேனடி இளமயிலே, குயிலே என்னுயிரே.

சுந்தரதர்மன் தரு.

இராகம்-முகாரி, தாளம்-ரூபகம்.

ஆ!! பவழேந்திரி! யிலையவிட்டெனையிங்கு
அகன்றெங்கு சென்றனையோ! (ஆ!)
ஓ! ஓ! நான்பாவி யுணர்வறியாக்கோவி
உத்தமிபவழேந்திரி யெத்திசைசென்றாயோ (ஆ!)
ஆக்கினைவிட்டவாறே யன்னமேயிங்குபாரே
அஸ்வத்துடனேவந்தும் அலையலானேனினிகூறே (ஆ!)
தாக்கப்பெரியாளென்னைத் தரையிலுறங்கவுன்னை
தாவியழைத்துச்சென்ற தடியனாரோகேணேன். (ஆ!)

(சுந்த-வ-ம்) ஆ! பவழேந்திரி! உன்னை அன்று பலவாறு இகழ்ந்து பேசியகொடுமையானது இப்போது என்னைத்தொடர்ந்தவினைக்கு என்னசெய்வேன்! எனக்கும் இக்கோலமாக லலாடத்தில் இன்னபடி எழுதிய தேவனே தேவன்!!!

சுந்தரதர்மன் கண்ணிகள்.

இராகம்-சங்கராபரணம், தாளம்-திரிபுடை.

இந்தவிதியெனக்கே எழுதினனோபாவி (இ)
இத்துயரடைந்திட ஓ சகியே
வஞ்சவிடத்திலுந்தன் வாக்கினிலேகுலைய. (இ)
சகியாளைக்கண்டுந்தான் சந்தோஷங்கொண்டுநான்
மதிமோசம்போனேனிங்கு மாபாவிதூங்கித்தான். (இ)
எங்கெனவுனைத்தேடி ஏகுவேனினிவாடி
அங்கம்பதறுதெந்தன் அளியேபவழேந்த்ரி. (இ)
கண்ணூற்கண்டுமேயுனைக் கடக்கச்செய்ததுவினை
என்னாதென்னணியென்மனமேங்குதேபவழேந்த்ரி. (இ)

(சுந்த-வ-ம்) இங்குநாம் நின்று தனியே புலம்புவதில் என்ன பலனடையப்போகிறோம், இதோநமது குதிரைசென்ற காலடிகள்காணப்படுகின்றது, இதைத்தொடர்ந்துசென்றால் நமது நாயகியைக் காணுவோ

ம், காணுவோமா! காணுவோங் காணுவோம், அவளிந்தக் காவலர்களுக்கஞ்சி நாம் தூங்குவதை எழுப்புவது தோஷமென்று எண்ணித்தான் குதிரையின்மீதேறிக் காட்டின்வழிப் பற்றியதாய்க் காணுகின்றது, வேறுகாரியமாயிருந்தால் அவள் தனியேபோயிருப்பாளன்றோ, சரிதான் நாமிவையறியாமல் அவள்மீது சிந்தையாடியது அசடல்லவா, நாமன்றோ சவத்தைப்போல உறங்கினோம், குதிரையோடிய சத்தத்தையுங் கேளாமற்போனோம், இனி நடப்போம்; இவ்வழியிலுங் குதிரையடிகளைக்காணலாகிறது, இங்கு அவைகள்மறைந்து பவழேந்திரியின் பாதத்தினடிகள்மாத்திரங் காணுகின்றது, இந்தக்காட்டிலெங்கேனு நமதுவரவை எதிர்ப்பார்த்துக்கொண் டிருப்பதாய்க்காட்டுகின்றது, தேடிப்பார்ப்போம், பவழேந்திரி? பவழேந்திரி! ஐயையோ காணேனே! சீ, என்ஜெனனம் ஒருஜெனனமா! பெண்டிழந்த பாவியாய்விட்டேன்! இன்னும் தேடுவோம்.

சுந்தரதர்மன் [illegible].

வேறு.

ஐயையோநான்பாவி யாணுலும்படுதோஷி
ஆசைபிரிந்தே ஓ! விதியே!
மெய்யதுசோர்வடைந்து மெல்லிநிலைகுலைந்து
பிரண்டகலைபோலாகி ஓ! சதியே!
எண்ணுதவெண்ணமது என்னைச்சூழுதேவந்து
எனக்குத்துணையாரடி ஓ! சதியே!
புண்ணாகியுந்தன்மனம் போணுயோயேக்குதினம்
பொழுதோருகமாய்க்காண ஓ! விதியே!
எங்கெனவுனைத்தேடி யேக்குவேன்மனம்வாடி
இளமயிலேநான்துரோகி ஓ! சதியே!
அங்கம்பதறுதெந்த ஞானியும்சோருதுக்கதன்
அடியைப்பற்றியும்வந்து ஓ! சதியே!

(சுந்த-வ-ம்) எங்கிருக்கின்றாயடி எந்திழையே! அடி என் அன்னமே! கிளியே! அறிவுள்ள இரத்தினமே! சித்திரமே!

சுந்தரதர்மன் ஜாவளி.

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-திரிபுடை.

உன்னைநான் காணுதினி உயிரிருந்தேனன்னமே
என்னைநீ பிரிந்திருக்க லேதிருமோடி சொர்ணமே. (உ)
வேசிமோகத்தா லுன்னை விற்கச்செய்தேனே கண்ணே
யோசித்துளங் கரைந்தெங் குற்றனை யோடிபெண்ணே. (உ)
என்னுது மெண்ணிமனம் ஏங்குதடி யிக்கணம்
புண்ணுனதடிகனம் போச்சுதோடியேவனம். (உ)

பெண்டையகன்றதோஷி பெருமையெல்லாம்ரோசி
கொண்டகிலேயோசி கோமதமே நேசி. (உ)

(சுந்த-வ-ம்) இனிநாம் செய்வதென்ன ! காட்டிற்குப் போகிலோ நமது அஜாக்கிரதையைப்பற்றி எல்லோரு மிகழுவார்கள், இப்போது அடைந்திருக்கும் அபகீர்த்தி அபிவிருத்தியாகுமன்றோ, அதைவிட இன்னமும் இக்காட்டிலலைந்து பவழேந்திரியைத் தேடுவோம், கண்ணுக்குப் புலப்பட்டாலாச்சுது, இல்லாவிடிற் காட்டுமிருகங்களுக் கிரையாவோம், இதுவே சரியானயோசனை ; துட்டமனமே ; கெட்டகுணமே.

(பவ-வ-ம்) நெஞ்சே ? நாமிங்கு தவிப்பதினாற் பயனென்ன ? அதோ ஒருசன்னியாசி ஆசிரமம் தோன்றுகின்றது, அங்குசென்று பணிவிடைசெய்வோம், அவாளால் நமது கணவரை யெளிதில் காணுவோம், இதுவேசரி ; போற்றி சுவாமிகளே.

(ரிஷி-வ-ம்) அம்மணி நீயார் ? எங்கிருப்பது ? இங்கு எங்களைநாடி வந்த காரணமென்ன ? வெளியிடுவாய் கண்மணியே.

(பவ-வ-ம்) சுவாமிகளே ? அடியாளோ விந்தைநகரத் தரசராகியவீரவர்ம மகாராஜனருந்தவப்புத்திரி, சுந்தரதர்மரைக் கைப்பிடித்துங் காதகிசெய்த கருமத்தால் காட்டிற்பிரிந்த கசடி, அவரைத் தங்கள்கிருபையால் எளிதிற்காணும்படி யாகுமெனக் கருத்தமைத்துவந்தேன் கனவந்தர்களே, அடியாளைக் காருங்கள்.

(ரிஷி-வ-ம்) சந்தோஷ மம்மணி உன்னுடைய எண்ணஞ் சீக்கிரத்திற்கைக்கூடக் கைலைநாத னருளாகும் தாயே, நீசென்று அங்குதோன்றும் புஷ்பவனத்தில் பூஜைக்கு யோக்கியதையான மலர்களை எடுத்துவருவாயா மகளே.

(பவ-வ-ம்) நல்லது சுவாமிகளே.

பவழேந்திரி ஜாவளி.

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ரூபகம்.

மலரெடுப்பேன் மாநெறியோகிகள் தானுளமகிழ. (மல)
அறுகு கொன்றைதும்பை அலரியல்லிகை
குருவேர் சாமந்தி கொழுந்துடன்முல்லை. (மல)
பச்சைத்தினமரு பாதிரிமகிழும்
இச்சைவாகவட்டம் இருவாட்சிகுமிழும். (மல)
பத்திரி ஜாசியும் பாரிதிகாந்திப்பூவும்
உத்தமர்களானயோகிகள்தாவும். (மல)

(யூகி-வ-ம்) ஆ! இதென்ன நமக்கு இந்தக்காலையில் கடவுள் ஒரு பெண்ணை அமைக்க நினைத்தவாறு காணுகின்றது ; அங்கு மலரெடுக்

குமாரு தேவகன்னியா! வனதேவியா! என்னவடிவு! என்னகாந்தி! இவளுக்கிந்த சுந்தரத்தை யமைத்தவனன்றோ பிரமனெனப் பெய ரெடுக்கத்தக்க பெருமையுடையவன், நம்மைபபடைத்தவனுக்கு இந் தப்புகழ்கிடைக்குமா! ஏதேது கிடைக்காது கிட்டாது; அடிமயிலே?

யூகி தரு.

இராகம்-கல்யாணி, தாளம்- ரூபகம்.

பல்லவி.

உன்னைக்கண்டென்னுள முருகிவாடுதே ஓ! ஓ! மானே. (உன்)

அநுபல்லவி.

தன்னிலேமாறுது தாவிடக்கோருது
கையலே உன்காந்தி தணலாய்த்தோன்றுது
தாவுவாய்-என்னை மேவுவாய்-அருகிற்
கூவுவாய்-சுகம் ஈகுவாய்-அடி. (உன்)

சரணம்.

முன்னம் நானிழைத்த முறையோ தவமோ
மூதாக்கள்செய்த மொழியாப்பலமோ
இன்னிலேயுந்தனை யிங்குநான் கண்டதும்
ஏதுக்கோ-மதனவாதுக்கோ-களிப்
போதுக்கோ-வினை-தீதுக்கோ-அடி. (உன்)

(மதியூகி-வ-ம்) அண்ணா? நீரிப்படி பலவாறு வாய்ப்பினத்தி அறி வகற்றி யாடுங்காரணமெதுவோ, அடியேனுக் கெடுத்துரைக்கில் இப் போதே யதைமுடித்து உமதுமனதைச் சந்தோஷிக்கச் செய்கின்றே ன் தமையனே.

(யூகி-வ-ம்) அப்பா தம்பி? அந்தப்பூஞ்சோலையில் சித்திரப் பது மையைப்போல நடந்து, குந்தி, எட்டி, எகிறி, மலரெடுக்கும் மங்கை க்கண்டு என்மனம் மன்மதவேதனைக் குள்ளானதால், நான் அங்குசெ ன்று அவளுக்கினிய வார்த்தைகளைச்செப்பி என்வசமாக்கிக்கொண்டு வருமளவும், நீதயைசெய்து இங்கிருப்பாயடா தம்பி.

(மதி-வ-ம்) அண்ணா? எங்கப்பெண்? நானுஞ்சற்று இங்கிருந்தாற் போல்பார்ப்பேன், ஆ! ஆ! அந்தப்பெண்ணா! அவளைக்கண்டவுடன்.

மதியூகி விருத்தம்.

என்மனமு மிகவுருகிக் காமியாகி
ஏந்திழையைச் சேர்ந்தணைய எண்ணங்கொண்டேன்
நன்னழகி நடைகுலுக்கி நங்கைமார்க்கோர்
நாயகமாய்த் தானுதித்தாள் நவிலக்கேளும்
பின்னவர்க்கே முன்னமுதை யளித்திருந்தோர்
சிராகப்பின் கொள்வர் ஜெகத்திலண்ணா!

புன்மையென வெண்ணிடவும் போகப்போகா
போற்றினே னென்னைப்போகப் புகலுவீரே.

(மதிபூகி-வ-ம்) அண்ணா? அம்மானைக்கண்ட என்மனம்மன்மதன் கைவசமாகிவிட்டது, நான் அவளைக்கூடாவிடில் இங்ஙனே மரிப்பே னென்னை நீர்மயானத்தடக்கி அப்பாற்போவீர், உலகவாசிகள் சிறியோரை முன்பு உண்ணச்செய்து பின்பு பெரியோ ருருந்துவரன்றோ, இதையொரு கெடுநியாக எண்ணாமல் நான் ஏகவிடை கிருபைசெய்யும் அண்ணாவே, உமதடிகளுக்கு இதோ அனேகநமஸ்காரம்.

(பூகி-வ-ம்) அடாபாவி? நானோ உனக்குத்தமயன், தந்தைக்கொப்பானவன், நானிச்சித்தப்பெண்ணோ உனக்குத் தாயோடொக்குமன்றோ, நீ இப்படிக் காடுவதடுக்குமா கேளடா துரோகி.

பூகி விருத்தம்.

அண்ணனுட தேவியரு மீன்றதாயும்
அரிவேசன் பத்தினியும் அவனிமீது
தன்னையின்றி வளர்த்தவளும் பாலதிந்த
நாயகியும் குருமாதும் நாட்டையாளும்
அண்ணனுட மனைவியரும் பெண்கொடுத்த
அம்மையரு மாதாவென் றறைவரே
கண்மணியே சொல்லும்படி செய்தபேரைக்
கண்டதில்லைக் கேட்டதில்லை கவனிப்பாயே.

(பூகி-வ-ம்) தம்பி? அண்ணன்தேவி, பெற்றவள், வளர்த்தவள், பிரியமாய்ப்பால்கொடுத்தவள், பெண்கொடுத்தமாமி, பிரபுவின்மனைவி, சிநேகனுடைய பெண்சாதி இவரைத் தாய்மார்களென நீதிபேசுவதை மறந்து நீயாடுவதடுக்குமா! நீசொன்னவாறு செய்தவரை நான் கண்டதில்லைக் கேட்டதில்லை, ஆனதால் நீகொண்ட எண்ணத்தை மறப்பாயடா மாபாதகா.

(மதிபூகி-வ-ம்) என் அண்ணா? எனக்குமுன் பிறந்தோராயிருப்பதுமன்றி, அனேக நீதிசாஸ்திரபுராணாதிகளைக்கரைகண்டறத்தெரிந்தவராயிருந்தும், சற்றேனும் பொறுமையில்லாமல் இவ்வற்பவிஷயத்தில் என்மனம்போல நடவாமல் சண்டாளமென்னுங்கோபத்திற்கு இடந்தருகலானீர், அந்தோ! இதுசரியன்று, ஆனதால் யான்சொல்வதைச் சற்றுகவனிப்பீர்.

மதிபூகி விருத்தம்.

பலயோனிதனில்மறந்து பிறந்துபாரில்
பண்பியாவொன்றிரண்டில் பாய்ந்துமாந்தர்
சலவிடம்பாவகங்காரந் தனைக்கைக்கொண்டு
காலனுடனகர்வாழ்கக் கருதுமெண்ணம்

நலமலவென்றெண்ணி யையாநீருமந்த
நாதாந்தமெய்ப்பொருளை நாடி நாளும்
குலமிளங்கநன்னெறியி லற்றகோவே
கோபமெனுஞ்சண்டாளங் கூடாதன்றே.

(மதி-வ-ம்) இவ்வாறு நூலோதுவது தெரிந்திருந்தும், என் அண்ணா? சமயத்திற்குத்தக்கபடி தெரிந்ததை மறந்துபேசுகின்றீர் இதன்றியில் பூர்வத்தில் முன்னோர்கள் தர்மவிதிப்படி நடத்தியசரிதையைக் கேளும் சொல்வேன்.

மதிபூஷி விருத்தம்.

பற்குணனும் வில்வளைத்துப் பாஞ்சாலனீன்ற
பாவைதுரோ பதைதன்னை மாலைசூட்டி
சந்தனராம் பாண்டுமைந்த ரைவரொத்துச்
சருவிவினை யாடியதைச் சாற்றும்நூலை
விற்பனரே மறந்ததிங்கு விவேகந்தானோ
விரகத்தால் நீகொண்ட வெறியோ சூதோ
நற்குணமே நாமொத்து அவளைக்கூடல்
நாயகமே பிழையல்ல நம்புவீரே.

(மதிபூஷி-வம்) அண்ணா? பஞ்சமவேதமாகிய பாரதத்தை வாசிக்கவில்லையோ, மைக்காளமுகிலேவாகனமாகவூர்திய தேவர்கோனினது அம்சத்திலுதிக்கவனும், கபடநாடக சூத்திரவதாரியாகிய கண்ணனது அருளைச்சம்பூரணமாகக்கொண்ட சவிசாசியென்னும் அர்ச்சுனனுளவன், அதே துவாபரயுகத்தில் நளாகினி யென்னும் பெண்பாவை ஓர்காரணார்த்தமாகப் பாஞ்சாலன்செய்த யாகத்திலுதித்தபாஞ்சாலியை மாலையிடப்பட்டும், மற்ற நால்வரும் மோகித்துச்சுகிக்கவில்லையா! அவ்வாறாகவே நாமிருவருமே ஏகோபித்து அவளைக் கூடியனுபவித்தால் கீர்த்தியேயன்றிக் கேடல்ல அண்ணாவே.

(பூஷி-வ-ம்) அப்படியா, இவனும்பிடிவாதி "ருணுபந்தரூபேணு பசுபத்னி சுதாலயா" இவனையு மழைக்கதேகுவோம். அவன் யாரைக் கோருகின்றனனோ நிதானிப்போம், கண்ணிற்படச்செய்த கடவுள்நமக்குக் கைக்கூடச்செய்வது கடமையல்லவா, அப்பாதம்பி மதிபூஷி? நாமிருவரும்போவோம், அவளாரைக்கோருகின்றாளோபார்ப்போம்.

(மதிபூஷி-வ-ம்) இதுசரி, ருணனுபந்தத்தைப்போல முடியும்.

(பவழே-வ-ம்) ஆ! இதென்ன இரண்டு வாலிபர்கள் வில்லாளிகளாய்நம்மையேநாடி வருகின்றார்கள், என்னகதி யின்னம்வருமோ பிராணநாதா, என் கற்பைக்காருங்கடவுளே!

பவழேந்திரி ஜாவளி.

இராகம்-கன்னடா, தாளம் சாபு.

வாருமே வாருமே வாருமே
வாருமேயெந்தன் கதியைப்பாருமே தீருமே ஓடி (வாரு)

போனனே கெட்டுப் போனனே
ஆனனே ஒண்டியாயும்மைக்காணனே தோணனே ஓடி. (வாரு)
வேஷியால் அவ்வேசியால் உன்னேசியால்
நேசியால்விற்றனீரென்னே ஆசிக்கப்போகாதோ ஓடி. (வாரு)
கத்தினேன்மிகக்கத்தினேன் உடல்வற்றினேன்
சத்தியமீறிடமனம் நத்திடேனுத்தமா ஓடி. (வாரு)
சோருது உடல்சோருது அயர்மீறுது
மீறுதுஅன்பமேயும்மைக் கோருது திரவே ஓடி. (வாரு)

(யூகி-வ-ம்) பெண்ணே? எங்களிருவரில் நீயாரைச்சேருகின்றாய்!

(பவ-வ-ம்) நீங்களோ வழக்கிட்டு வந்திருப்பதாய்க் காட்டுகின்றது. ஆனால் நான் சொல்லும்வாறு செய்வீர்களா?

(யூகி-வ-ம்) சொல்வாய்?

(பவ-வ-ம்) உங்கள் ஆயுதங்களையும், உடுப்புகளையும், தாழ இடுவீர்கள்.

(யூகி-வம்) இதோ இட்டோம்.

(பவ-வ-ம்) நான் ஒரு அம்பைத் தொடுக்கின்றேன், அதை உங்களிருவரில் யார்முன்னெடுத்து வருகின்றீரோ அவரை நான் ஒப்புவேன்.

(யூகி-வ-ம்) அப்படியே, உன்பெயரென்ன?

(பவ-வ-ம்) என்பெயரோ பவழேந்திரி, (இருவரும் ஓடுதல்) இப்போது நாம்செய்த தந்திரமே சரி. அவாள் வெகுதூரம்போயினர்கள். அவாளுடுப்பை நாமணிந்து பெண்ணுருபமாறி ஆண்வேடம்பூண்டு வேவிடஞ்செல்வோம், அவாளோ நிராயுதமானார்கள், ஒருவேளை நம்மிடம்வந்தால் இக்கணைக்கிரையிடுவோம், சரி, இந்தவனத்திரும்புவோம்.

(யூகி-வ-ம) இதோநானெடுத்தேன்.

(மதியூகி-வ-ம்) நானணியைத்தொட்டேன், நீயடியைப் பிடித்தாய் ஆனதால் மறுபடியும் அம்புவிட பவழேந்திரியைக்கேட்போம்.

(யூகி-வ-ம) சரிதான்தம்பி, ஐயோ! பவழேந்திரியைக்காணோமே! ஐயையோ! ஆடையும், ஆயுதமும்போய்விட்டதே இதுவும்விதியோ!

யூகி தரு.

இராகம்-காபி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தகதி சிவன்தந்த தாமதி ஓ! ஓ! ஓ! விதி. (இ)

அநுபல்லவி.

வந்தவனத்திலோர் வஞ்சியைக்கண்டதும்
வாடிநின்றவனால் பேடிபோனின்றதும். (இ)

சரணம்.

சந்திரபிம்ப வடிவைக்கண்டு
சருவக்கொண்ட எண்ணமின்று

அ

கொந்துருகிட — வாச்சேனன்று
கோன்பதின்வினையோ — நாம்செய்தபழியோ. (இ)

(பூதி-வ-ம்) அவனைத்தேடுவோம் வருவாய், அடி பவழேந்திரி ?

(சேர்வை-வ-ம்) பவழேந்திரி ?

(பவ-வ-ம்) இவனாரோ நம்மைக் கவனிக்கிறானே, எதிர்சென்று பார்ப்போம், ஆ! ஆ! இவனந்தக் கொடியவனாகிய சேர்வையல்லவா, நல்ல சமயம்வாய்த்தது, இவனை அம்புக்கிரையிடுவோம், (அம்பெய்தல்) போனையா படுபாவி, இனி இங்கிருக்கப்போகாது, அப்புறம் ஓடிப் போவோம், இவனோடு குந்தல இராஜனும்வந்திருப்பான், அவனை ஜெயிக்க நம்மால்முடியாது, நாமோ பெண்பால்

(குந்தல-வ-ம்) பவழேந்திரி ? ஆ! இதென்ன பிரதானியை யாரோ வதைசெய்துவிட்டனர், அப்பா! நேசனே! எனக்காக உடன்பட்டு நீ மாண்டுபோனாயா! நானினி ஒண்டியானேன்.

குந்தலராஜன் தரு.

இராகம்-அபுரூபம், தாளம்-ஏகதாளம்.

பல்லவி.

ஆ! ஆ! ஆ! மானே — அலையலானேனே
வாவாவென வுரைத்தே — வஞ்சிக்கலானாய்த்தேனே. (ஆ)

அநுபல்லவி.

உனக்காயென்னூரைவிட்டு — ஒண்டிவழியைத்தொட்டு
தினைக்காச்சோகத்திற்பட்டு — நிந்திக்கவிட்டாய்தேனே. (ஆ)

சரணங்கள்.

காடுகாடாயலைந்துக் — கருகிமனக்குறைந்து
தேடுகின்றேனினைந்து — தெளிவைமறந்துதேனே. (ஆ)
இருந்தசுகம்போச்சே — எவர்க்கும்வசையாச்சே
பெருமைக்கிழிவாச்சே பெண்மானே உன்னால்தேனே. (ஆ)

(குந்தல-வ-ம்) இங்கிருப்பதிற் பயனில்லை, அடுத்தநகரமடைந்து அங்கிருந்தபடி என்மந்திரியை அழைப்பித்து என்தேசமடைவேன், பவழேந்திரி ? உன்னாலெனக்கு இக்கெதியாச்சுது அடிமானே ? அரசு போச்சு, அறிந்தவருக்கு ஏச்சு. என்னபேச்சு.

(பவழே-வ-ம்) ஆ! இதெவருடையதோ திவ்வியமான சிங்காரவனம் இலைகனிகளை நமதுபசிக்கருசி தாகம்தீர நீருங்குடித்து அப்பால்செல்லுவோம், (கனிமுதலியவைகளைப்புசித்தல்) இப்பொழுது என்னமோ களையாய்க்காட்டுகின்றது, இந்த மரத்தடியில் கொஞ்சஞ் சயனிப்போமா, சயனிப்போம். (சயனித்தல்)

சந்திரரேகை தன் சேடியுடன் நந்தவனம் வருதல்.

(சந்திரரேகை-வ-ம்) அடி தோழி ? இன்று அதிகவெப்பமாயிருப்பதனால் சிங்காரவனம்போய் வருவோம் வருவாயா ?

(தோழி-வ-ம்) நல்லது அம்மணி.

(சந்தி-வ-ம்) ஆ! இவரார், மதனா? மாலா? சிவனா? என்னரூபம்? என்ன அழகு? இவரைக்கூடாத ஜென்மம் ஏன்? கடவுள்தான் நமக் காய்க்கொண்டுவந்தாப்போ லிருக்கின்றது, ஓ! இவர் தூங்கிக்கொண் டிருக்கிறாரே எழுப்புவேன்.

(தோழி-வ-ம்) தூங்குபவரை எழுப்புவது தோஷமம்மா.

(சந்தி-வ-ம்) அப்படியா, ஆனால் அவர் கண்விழிக்கும்படி ஒருபதம் பாடுவேன்.

(தோழி-வ-ம்) சரிதானம்மா. (பாடுதல்)

சந்திரரேகை ஜாவளி.

இராகம்-கமாஸ், தாளம்-ஏகம்.

இதுவும் தர்மமா

மாதழுது வாடக்கண்டு மனமில் வர்மமா. (இது)
சோர்ந்தாரி நானும்க்கே சோகமீறியே
சொக்கிவாடிப் புலம்பினாலும் கவாமிவர்மமா. (இது)
பாவிமதன் கணைகளிதோ பலவாய்த் தூவியே
பயமுறுத்து முனைசாமி பாவைசர்மமா. (இது)
மோசக்கருத்தாலே கண்ணை மூடியே நீரு
முறக்கம்போல இருப்பதென்ன மோடிதர்மமா. (இது)
காமமீறு தையையோவினிக் கண் திறவாயா
காக்குவித்தும் பாராதென்தன் கடினக்கர்மமா. (இது)
மதனரூபமானகாமி மனதுகல்லோடா
மாருமிதோ துடிக்குதடா மாராதர்மமா. (இது)

(சந்-வ-ம்) ஆ! விதியே! நான் எவ்வளவோ வருந்தியும் இவர் பிடிவாதமாய்த் தூங்குவோரைப்போ லபினயிக்கின்றாரே; அப்படி ஒருக்கால் தட்டியெழுப்புவோமெனில், மணமானது தோஷமெனக்கூறுகின்றாரே, இதற்கெப்படி, யோசிப்போம்,—சரி, இன்னமும் தொனியிட்டுப்பாடுவோம்.

சுந்தர்ரேகை ஜாவளி.

இராகம்-அரிகாம்போதி, தாளம்-ஆதி.

ஓ துரையே மையல்மீறுது பாராய்
மீறுதுபாராய் சோருதுவாராய. (ஓ துரை)
வர்கணம் நேமியே சுந்தரக்காமியே
சந்திரகாமியே கந்தனேசாமியே. (ஓ துரை)
கூவினேனின்நேரே யேவிடப்பாரே
பாவிநானிரே தாவியேகாரே. (ஓ துரை)

கண்ணைமூடியே காட்டுருய்மோடியே
என்னுறேன்வாடியே இணக்கவேனாடியே. (ஓ நாரை)

சந்திரரேகை விருத்தம்.

என்னடிதோழி மன்னன் எழுந்திருக்காமலேயோ
என்னடி யுறங்குகின்றான் எதினிச்செய்வேனிங்கு
என்னடி மதனும்பாவி யெய்கிறான் சோகமீற—
என்னடி யிதற்கோர்மார்க்க மியம்புவா யினிவரய்த்தானே.

(தோழி-வ-ம்) அம்மணி? யான் தனியேசென்று பிறரறியாமல் ஓர் சிவிகைகொண்டுவாறேன், அதன்மீது இவரையசையாமல்வைத்து, நீ யிருவருமே நமது கன்னியா மாடமடைந்து, அதன்பிறகு அரசனுமதிபெற்று விவாகத்தை முடித்து சுகித்திருப்பாய் தேவியே.

(சந்திர-வ-ம்) இதுவும் சரியானயோசனைதான்,—(தோழி சென்று சிவிகையையெடுத்துவந்து பவழேந்திரியை யசையாமல் எடுத்தேகுதல்) அம்மா தோழி? இதோ மாளிகைவந்தோம், நீ என்னுடையதந்தைக்கு இதை அறிவித்து விடைபெற்றுவா, சடுதியில்.

சந்திரரேகை தரு.

இராகம்-சுருட்டி, தாளம்-ஏகம்.

பல்லவி.

போடி போ போ போ தெரிவிக்க நீ

அநுபல்லவி.

நாடியென் தந்தைமுன்பு நான்சொன்ன தாகச்சொலி (போடி)

சரணங்கள்.

அந்தவரசன் றன்னை யனைய எனக்குமணம்
வந்ததும் நீதெரிந்த வகை யதல்லவோ பாங்கி (போடி)
உத்தமன்குண வந்தன் உவமை யில்லாவழகன்
மெத்தவலுத்தோனென மிகவாய் விளம்பிட நீ (போடி)
வேறரசரை நானும் வேண்டேனெனப்புகட்டி
சேரவிருக்கநாளை சீக்கிரத்தில் அமைக்க. (போடி)

(தோழி-வ-ம்) நல்லதம்மா, போற்றிபோற்றி வேந்தே?

(சங்குசீலமகாராஜன்-வ-ம்) தோழி? நீவந்தகாரியமெதுவோ வுரைசெய்வாய்?

(தோழி-வ-ம்) மகாராஜரே? சந்திரரேகையும் நானும் சிங்காரவனத்திற்குப்போனோம், அங்கொரு இராஜகுமாரன் நித்திரையிலிருப்பதைக்கண்டு மெத்தவும் மோகமாகிப்புலம்ப, நான்மறுத்து அரண்மனைக்கெடுத்துவரச்செய்தேன், அவர் இன்னந்தூக்கத்தி லிருக்கின்றார், அவரையேதான் மணப்பேன், இல்லாவிடில் உயிரை மாய்ப்பேனெ

ன தங்களுக்குத்தெரிவிக்க என்னைச் சந்திரரேகை அனுப்பினாள், ஆனதால் இதை சீக்கிரம் பூர்த்திசெய்யவேண்டும் அரசே.

(சங்குசீல-வ-ம்) சந்தோஷம், அப்பா மந்திரி? என் மகளுக்கு விவாகமெனசுயம்வரம்சாட்டி மணவோலைபலநாட்டிற்கும்எழுதுவோமா

(மந்-வ-ந்) சரி, நல்லகாரியமே.

(பவழே-வ-ம்) ஆ! இதென்ன! இங்கு நாமெப்படி வந்தோம், நம்மை இந்த இடத்திற்கு யாரெடுத்துவந்தாரோ அறியோம் விதியே.

பவழேந்திரி ஜாவளி.

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்.

அங்கிருந்திங்குற்றவித மறிகிலோநாமே!
ஆரெடுத்து வந்தனரோ எதுவுந்தோணுமே!

(பவ-வ-ம்) ஆ! இதுயென்ன ஆச்சரியம்! நாம் சோலையில் நீராருந்தி சற்று இளைப்பினால் நித்திரைசெய்த நாம் இங்குவர என்னகாரணமாயிருக்கும்! அந்தோ! நாம் எங்குசெல்கினும் ஆபத்து விடவில்லையே! ஜெகதீசா உன்திருவிளையாட்டின்பெருமை இன்றுகண்டேன் இனியாகிலும் இவ்விததுயரத்திலிருத்தாமல் காரும்.

சந்திர—வனத்தில்நீருந் தூங்கக்கண்டு வஞ்சிநானுமே
வாரியெடுத் திங்கோடிவந்தேன் அறியுந்தானுமே.

(சந்திர-வ-ம்) ஆ! மன்னனே? யானும் என்சேடியும் மனம் உல்லாசங்கொள்ளுநிமித்தம் சோலையின்கண்வர உம்மைக்கண்டு வாரியெடுத்தோடிவந்த வஞ்சியென்றறிவீர், அறியாமல்செய்தபிழையை அருள்கூர்ந்து இரட்சியும்.

பவழே—என்னைநீ இங்கேந்திவந்த தென்னமென்னமோ!
எனக்கெடுத்து வுரைசெய்யாயா இது என்கன்மமோ!

(பவ-வ-ம்) ஆ! மாதே? உன்னைப்பார்க்கில் இராஜன் புத்திரியைப்போலுங் காணுகின்றது, அப்படிசோலையில்தூங்கிய என்னைவர்மமாய் எடுத்துவந்ததற்குக் காரணம் உரைசெய்யாயா!

சந்திர—கன்னிநானு முனைமனார கருதினாதனே
கடுகித்தாங்கி வந்தேனீதான் காண்பாய்நீதானே.

(சந்தி-வ-ம்) ஆ! அரசே? யான் அவ்விடம்வர மோகமீறி உம்மையேமாலையிட கருத்தில் அமைத்தவளாகி இங்கு உம்மை அசையாமலெடுத்துவரலானேன், மற்று வேறொரு சந்தேகமும் தாங்கள் கொள்ளப்போகா; அந்த அருபியின்மாயகை யாவருக்கும்பொதுவே.

(பவ-வ-ம்) ஆ! கடவுளே! என்னையும் இக்கெதியாக்க என்னதுணிவுகொண்டீரோ! உமதுமனம் கல்லா! கல்லாயினுங்கரையுமே! யான் குந்தலநகரத்தில் என்மன்னனைக் கண்டதுமுதல் இதுகாறும் பட்டகட்டங்கள்போராமல், ஏதோ என்கற்பைக்காக்குநிமித்தம் இவ்

வேடம்பூண்டு சோலையில் தூக்கிய என்னை இப்பெண்கள் சிகாமணிக்குக்காட்டிமோகத்தைமூட்டி. இக்குயிலை யெடுத்துவரச் செய்தனையே! இதவுந் திருவருட்கழகா, நானும்பெண் இவளும்பெண், இவ்விதிக்கென்னசெய்வேன! சி ஓவறிமனமே ஏன் தியங்குகின்றாய், இன்று தொட்டல்லவோ உனக்கு நல்லதிசை, ஆனதால் நீ இவளிஷ்டப்படியே நடந்துக்கொள்வதே மேலானகீர்த்தி, சரி, ஏ! மாதே? மெத்தசந்தோஷம், உனதிஷ்டப்படியே நடக்கின்றேன் கோதே,

(சக்தி-வ-ம்) நல்லது அரசே.

(சங்குசீலன-வ-ம்) அப்பா மந்திரி? என்னருமைமகளாகிய சந்திரரேகைத் தானும்மகிழ்ந்து உல்லாசமாகி யழைத்துவந்திருக்கும் அந்த இராஜகுமாரனை நீசென்றுகொலுமுகத்திற் கழைத்து வருவாய்.

(மந்-வம்) நல்லதுமகாராஜனே; போற்றி,போற்றி,மகாராஜனேதங்களை எங்களரசர் கொலுமுகம் அழைத்துவர ஆக்கினையிட்டார், இத்தத்தினிஷ்டமெதுவோ செரிவிக்கவேண்டுஞ் சுவாமி.

(பவ-வ-ம்) சந்தோஷ மிதோவருகின்றேனப்பா மந்திரி, போற்றி மாமாவே? அடியேனை அழைப்பித்த காரியமெதுவோ கனிவுகூர்ந்துரைசெய்யவேண்டும் நாதா.

(சங்குசீ-வ-ம்) வாழி மருமகரே, இந்த ஆசனத்தில் எழுந்தருளி தங்கள்பெயரும், தங்களுடைய பிதாவின்திருநாமமும், தாங்களிங்குவந்த காரணமுந் தெரியச்சொல்வீரா?

(பவ-வ-ம்) அப்படியே, என்பெயர் பவழேந்திரன், விந்தைபுரத்தையாளும் வீரவர்மரீன்ற புத்திரன், வேட்டைமார்க்கமாய் ஒருமானைத்தொடர்ந்து கனிமேவத்தயர்ந்து தங்களுடைய சிங்காரவனத்தில் அதிகவிடாய்ப்பட்டமையால், நீருந்தி சயனித்திருந்தவனிங்கு கன்னியாமாடத்தில் தங்களருந்தவக் குமாரத்தியிட மிருக்கக்கண்டேன்.

(சங்குசீ-வ-ம்) என்மகள் உம்மைமலரிக்கக் கருதினதினால் நானவ்வாறே சுயம்வரஞ்சாட்டிப் பலதேசத்தரசர்கள் காண உமக்கு மாலைசூட்டிப்பார்க்க அதிகப்பிரீதியுடையவனாய் இருக்கின்றமையால், இனி என்செங்கோலை நீர்தாங்கித் தேசத்தின்குடிகளைப் பாதுகாப்பீர்.

(பவ-வ-ம்) நல்லதென்மாமாவே, இதுவுங் கடவுள்சொல்தான், நாம் நமதுபிராணநாதரைப் பார்க்குங்காலம்வரையில் வெளிப்படப்போகாது, நாம இங்கிருப்பதை அவர் எப்படி அறியக்கூடும், இக்குவிவாகம் என்றால் ருசு-தேசத்தரசர்களும வருவதால் நம்மை இச்சித்த வஞ்சகர்களும் வருவார்கள், அவர்களைக் கண்டுபிடிக்கத்தக்க ஏற்பாடொன்றுசெய்யவேண்டும்; என்செய்யலாம், யோசிப்போம், சரி, நம்மைபபோல, ஒருபட்டமெழுதி கோட்டைவாசற்படியிற்கட்டித் தக்ககாவல

ர்களையுயிருக்கி இக்காட்டிற்குள் வருபவர்களில் யார்யார் அந்தப்பட த்தைக்கண்டு என்னவார்த்தைகளாடுகின்றார்களோ அதை நமக்கறி விக்கச்செய்து அதின் மூலமாய் அவளை இன்னாரெனவறிந்து அப்பா லதர்க்குத்தகுந்த யோசனைசெய்வோம், அப்பாமந்திரி ? நீ சித்திரச்சா லையடைந்து ஓவியங்களைத் தீட்டுவதற்குகந்த நானாவித வர்ணங்களை அடக்கிக்கொண்டிருக்கு மொருபெட்டியைச் சீக்கிரம் எடுத்துவரு வாய் மந்திரி.

(மந்-வ-ம்) நல்லது மகாராஜனே.—(பவழேந்திரி தன்னந்தனியே படமெழுதிமுடித்தல)

(பவ-வ-ம்) அடா ! நகர் காவற்காரத் தலைவனே ?

(கா-வ-ம்) சுவாமி.

(பவ-வ-ம்) நீ இந்தப்படத்தை கோட்டைவாசற்படியிற்கட்டி இதைக்கண்டவர் ஏதுவார்த்தை யாடுகின்றனரோ அதை உடனே எனக்கு நீயேவந்து அறிவிக்கவேண்டும், அவரை என் உத்திரவுபெறுகிறவரையில் அவ்விடம்விட்டு அசையாமலிருக்கத்தக்க காவலுமமைத்து வரவேண்டும், ஜாக்கிரதை, அசட்டைசெய்தால் ஆக்கினைவிதிப்பேன்.

(காவ-வ-ம்) நல்லது ஆண்டவா. (கோட்டைவாசற்படியிற்கட்டுதல்)

(சங்குசி-வ-ம்) அப்பாமந்திரி ! எனதுமகளாகிய சந்திரரேகைக்குச் சுயம்வரமணஞ்செய்யவெண்ணித்தகைத்து அரசர்களுக்குமணவோலைபோக் கிக்கலியாணத்திற்காக வேண்டியவைகளையமைப்பதோடுவந்தவர்க ளிருக்கத்தக்க விடுதிகளையும் சித்தப்படுத்துவாய், எனக்கு ஏகபுத்திரியானதால் விவாகத்தை அதிகச்சிறப்பாய் நடப்பிக்கவேண்டியது.

(மந்-வ-ம்) மகாபாக்கியம் வேந்தே, அடா தூதர்களா ? சந்திரரேகையம்மாளுக்குச் சுயம்வரமானதால், இந்த மணவோலைகளைக்கிரமமாய் அந்தந்த இராஜாக்களுக்கீந்து அங்குருட்க்குஞ் சங்கதிகளையுந் தெரிந்தோடிவந்து அறிவிக்கவேண்டியது, அசட்டைசெய்யப்போகாது.

(தூதன்-வ-ம்) புத்தி, புத்தி, நல்லதுசுவாமி.

(இடூ-வ-ம்) இனி என்னசெய்வோம் அடிபவளம் நீசொன்ன வார்த்தையைநம்பி என் குலத்தாரை கப்பட்டை மேளவாத்தியத்தோடு இங்கழைத்துவந்து உன்னைக்காணாமல் வந்தவாள எல்லோரும் என்னைப்பலவாறு ஏசிப்போகலாச்சே, இனிமேல் நாம் நாட்டுப்புறம்போனால் கண்டவர்கள்கேலிசெய்து கைகொட்டி நகைப்பார்கள் நம்மை ஏமாத்தியகாரி இந்தக்காட்டுக்குள்ளேதான் ஓடி ஒளித்திருப்பாள் அவளுடைய காலடியைப்பற்றிச் செல்லுவோம், காத்தவராயன் தயவினால் ஒருவேளை அகப்படுவாளாகில் செந்தூக்காய்த் தூக்கிக்கொண்டு நமதுவீடுவந்து சேருவோம், சாமி ? காத்தவராயா துணைசெய்யும்.

திருடன் குலதேவதையை மானதபூசையால் தோத்தரித்தல்.

இராகம்-காம்போதி, தாளம்-ஆதி.

பவளம[illegible]ப்பட்டால் எங் காத்தவராயசாமி-உனக்குப்
பத்தாடு வெட்டுறேன்டா.
சக்கரைப்பொங்கல் எங் காத்தவராயசாமி-உனக்குச்
சமைத்துப் படைக்கிறேன்டா.
சிகிக்கியகப்பட்டால் எங் காத்தவராயசாமி-நான்
செடல்குத்தி யாடுறேன்டா.
அஞ்சுகுடங்கள்ளு உனக் காறுகுடஞ்சாரா[illegible]
அபினிமருந்து ஆறுபலங்க[illegible]
அவித்தமுட்டை நாறு காத்தவராயசாமி-உ[illegible]கு
அன்பாக நான்படைப்பேன்.

(திருடன்-வ-ம்) நீயேதுணை, இதோ காட்டுக்குள்வந்தோம், தேடு வோம், பவளம் சிக்கினல் ஆடுவோம், பாடுவோம், கூடுவோம், தூக் கிக்கொண்டு ஓடுவோம், மிஞ்சிப்பேசுவாளாகில் மிலாரால் ஜாடுவோம், இதுவேசரி, கருப்பணன் காப்பாத்துவான் பவளம், பவளம், பவளம், நாமதனியே இந்தக்காடெல்லாந் தேடியும் பவளம் அகப்படவில்லே, இங்கல்லவதனுல் இனியொருபயனுங் காணமாட்டோம், கஞ்சியில்லாமல் காதுகளடைக்கின்றது, கண்களோபஞ்சாடுகின்றது, அதோ அந்தபாட்டையில் வெகுஜனங்கள் சங்குநகரத்திற்குப் போகிறார்கள், அங்கே கலியாணம்போலிருக்கின்றது நாம்போனுல் கலகஞ்சிகிடைக்கும், போவோம்.

(பூகி-வ-ம்) தம்பி ம[illegible], நமக்குள் கலகம் நேரிட்டதனுலன்றோ நாம் இந்தகதிக்கு ஆளானேம் இக்காட்டில் இப்படிக்கு நாமலேவதிலென்னபலனுண்டு, பவழேந்திரியோ தந்திரமாய்த் தப்பித்துக்கொண்டோடிப்போயினள். அவள் நரமனுஷியல்லவே யல்ல, அவள் [illegible]க்காட்டி[illegible]ம் வனதேவியா யிருக்கவேண்டும். நாம் முன்பின்யோசிக்காமல் அவள்மீது மோகங்கொண்டதற்காய் நம்மை அத்தேவதை இக்கதிக்காளாக்கிவிட்டது.

(மதி-வ-ம்) அண்ணு நீருரைத்ததேசரி, அப்படிக்கில்லாவிடில் நாம் அவள்விட்ட அம்பையெடுத்தோடி வருவதற்குள் எவ்வளவுதூரம் ஓடக்கூடும், மேலுமவளோவெண்பால் இனித்தேடுவதிற் பயனில்லே.

(பூகி-வ-ம்) சரிதான் தம்பி, சங்குநகரத்தில் சந்திரரேகைக்குச் சுயம்வரம் என்பதாக இங்கிருக்குந்தவசிகள் எல்லோரும்போகின்றார்கள்

அக்குருமனு தந்தையும்வருவார், அவரைக்கண்டு நாம்செய்த குற்றத்தை மன்னிக்கும்படிமன்றாடி அவருடன் தேசம்போய்ச்சேருவோம், உன்கருத்தெதுவோ வெளியிடுவாய் தம்பி.

(மதி-வ-ம்) அப்படியேபோவோம் வாரும் அண்ணாவே.

(குந்தல-வ-ம்) நாம் சுந்தர திருமனுடைய பிரதானிசெய்த தந்திரத்தினால் பவழேந்திரியெனும் பைங்கொடியை யடைந்து மனுபவிக்கக்கொடுத்துவைக்காத கொடும்பாவியாகிக் கூடவந்ததோழனையு மிழந்தோம், இக்கோலமாய் நாம்தேசம்போவோமாகில் கண்டவர்கள் நகைப்பாரேயன்றி வேறில்லை, அதைவிடச் சங்குசீலன் குமாரத்தியாகிய சந்திரரேகைக்குச் சுயம்வரமானதால் அங்காவதுசென்று அவள்கேள்ளைய[illegible]வித்துக் கலியாணஞ்செய்துகொண்டப்பாலதிக ஆடம்பரத்தோ[illegible]துநாடடைவோமாகில் ஒருவிதப் பெருமையும் புகழுமுண்டு; இ[illegible]சரியானயோசனை, போவோம், போறேனடி பவழேந்த்ரி,

குந்தலராஜன் கண்ணிகள்.

இராகம்-கேதாரம், தாளம்-ரூபகம்.

போறேனடி போறேனடி போறேனடி போறேனடி
போறேனடி போறேனடி போறேனடி தனியே (போ)
ஆறேன்துயா மீறேன்தேட வாறேன்மனந் தேறேன்பாவி. (போ)
கண்டவுடன் கருகேவெனக்கே கழருவெந்தன் வினையோபாவி (போ)
இந்தநிலையென்னைசெய்ய விருந்தவஞ்சியோ நீ பாவி. (போ)
[illegible]டைவிட்டுக் காட்டில்வந்து ஓட்டாண்டிப்போ லுளறிப்பாவி. ()
கண[illegible]நிறைந்த மனங்கரைந்து இளம்பிரிந்துந் தனியாய்ப்பாவி (போ)

(மந்-வ-ம்) போற்றி யரசே.

(சங்கு-வ-ம்) என்ன விசேஷமப்பா மந்திரி?

(மந்-வ-ம்) தங்களுக்குத்தவப்பே[illegible]கிய சந்திரரேகை யம்மாளுக்குச் சுயம்வரமெனப் போக்கிய மண[illegible]னுற்ற செப்பன்ன தேசத்தரசர்களும் வந்தவர்கள் [illegible]ல் தங்கள் தாய்மாமனாகிய வீரவர்மமகாராஜரும் இன்று வந்தமையால் இனி நடக்கவேண்டிய காரியங்களெதுவோ அதை யடியேனுக்கு ஆக்கியாபிக்கவேண்டு[illegible]

(சங்கு-வ-ம்) மெத்த சந்தோஷம், நீ மணவரைச்சாலையை யலங்கரிக்கச்செய்வதுடன், வந்திருக்கும் இராஜாக்களுக்குத் தக்கவிடுதிகளை ஏற்படுத்தி யவர்களுக்கு வேண்டியவைகளைக் குறைவின்றி யபரிமிதமாய் வைப்பாய், இதன்றியில் நாளைச் சுக்கிரவாரம் உதயாதி ௧௫-நாழிகைக்குமேல் மாலை சூட்டல் என்றறிவிப்பாய் மந்திரி.

(மந்-வ-ம்) நல்லதாண்டவா.—(தெரிவித்தல்)

(சுந்த-வ-ம்) ஆ! மனமே! என் நாயகியை எங்குதேடியும் காணாத

பாவியானேன், இவ்வாறு நாம் பேயைப்போல் காட்டி லலைந்துழலுதி னால் யாதொருபலனையு மடையமாட்டோம்; இதற்கெப்படி, ஐயோ! ஒருவாரமா யன்னம் ஆகாரமின்றி இக்காட்டிலலைந்ததனால் நமது தேகம் மெத்தவும் வருந்தலாயிற்று, இன்னமும் இக்காட்டி லலைந்திடுவோமாகி லனுதினப்பிரேதமாவோ மென்பதற்குத் தடையில்லை, பிறகு அரசு அன்னியர்பாலாகிவிடும், இதற்கென்செய்வேன் சிவனே! அடி பவழேந்திரி! உன்னையன்றிவெறுத்து சுந்தரிவார்த்தையை மேலென எண்ணியதோஷத்தாலும் மகான்கள்கொண்டகோபதினாலும் யான்,

சுந்தரதர்மன் கண்ணிகள்.

இராகம்-இந்துஸ்தான்பரஸ், தாளம்-ஆதி.

அல்பிதாயோ எனும் மெட்டு.

அக்க ரையா யுன்சொற் படி யருகி ருக்க வந்த எனை
இக்கு லன்னி வே சரி திருக சேஜசி போகி வா.
கோ மக ளைத் தேடி கூ விக்கூ விய லுற் றேன்
ஏ பிஜே துனி ஸ்வரா எவ ரிகி மொர ஜேதுன்.
உன்னைக் காண வேண்டி யானு முற்ற னனங் காவ லாய்
நன்னு வெதகி போகி வேமோ நலுதிக் குலன் கான னே.
அட்ட திக்கும் நாடித் தேடி யங்குண் டிங்குண் டென்றலைந்தேன்
இட்டி கஷ்ட மெப்பு டுகே நொரக னேஐ! தேவு டா!
காலடியைப் பிடித்துன் முகம் காண வெண்ணினேன் கண்மணியே
நேல நெக்கட நின்னு குடக சால மனசு கொச்சி னே[illegible]
வேசி மயக்கிற் பலருமேச விற்றுனை நான் பெற்றேன் வசை[illegible]ய
தோஷ காரி பித டனுசு தொலகி போகி வோகா னனே.

(சுந்த-வ-ம்) ஏ! மனமே! நீ செய்த குற்றமானது அளவுகடந்து போனமையால், அத[illegible]யும்ப[illegible]னிதுவென்றே நினைப்பா[illegible], மேலு மருந்ததிக்குச் சரியொத்த பவழேந்திரியைப்பண்ணசோலம் இவ்விதமாய் நீ யனுபவிக்கநே[illegible]டது; [illegible]தற்கு யார் என்செய்யலாம்; இனியாகிலும் இல்லறக்கி[illegible]சிபினிட மன்புவைத்துத் தே[illegible]வையே யா[illegible] வெகு சீக்கிரத்திற் சுகமடைவாய் கெட்ட குணமே.

(குணபாலசெட்டி-வ-ம்) ஆ! இதென்னகொடுமை! நாம் செட்டிப் பிள்ளையாய்க் கெட்டித்தனமாய்ப்பிறந்தும் பயனென்ன: ஆளோடேவிய காரியம் பாழாகுமென்பதை யறியாமற்பொருளைக் கொடுத்தனுப்பினேனும், போனவன் இன்னந்திரும்பவில்லை, அவனோ இராஜபுத்திரன், எந்த வேசியைக்கண்டு மோகித்துமுடிப்பைக் கொடுத்து முழுகி நமக்கு முகத்தைக்காட்ட வெட்கப்பட்டு எங்கேனு ஓடிப்போனதாய்க்காட்டுகின்றது, இல்லாவிடில் இதுவரையில் வந்திருப்பானே; இது

போக உடன் கூட்டாளிக ளறிந்தால் நமது பற்றுவழியி லெழுதிவிடு வார்கள், இதற்கென்னயோசனை ; சரி, சரி, சங்குநகரத்தரசன் மகளு க்குச் சுயம்வரமென ஓலைகண்ட இராஜராஜாக்களும் குடிகளு மங்கு செல்லுகின்றார்கள், நாமும் கொஞ்சம் விலையுள்ள சரக்குகளை யங்கு எடுத்தேகில் வந்திருக்கும்பிரபுக்கள்முதலியோர்களுக்குக்காட்டி விற் போமாகில் மிகவும் இலாபங்கிடைக்கும், ஒன்றுக்குக்கால்வரிசைப் ப ங்காளிகளுக்குக்கொடுத்து மற்றதை நாமவி விவேகத்தினுல் உத்தமசி லன் வசங்கொடுத்தனுப்பிய பொருளைக்கணக்கில் வரவிட்டு மானத் தைக்காத்துக்கொள்ளுவோம், இதுவேசரியானயோசனை, இதைவிட வேறுமார்க்கம்காணேம்.——(பிரயாணப்பட்டேகுதல்)

(சுந்த-வ-ம்) ஏ ! மனமே ? நீ யெவ்வளவு நீதிசொல்லியும்காலான து பலவிடத்திலேயும் பவழேந்திரியைத்தேட ஓடுகின்றதே, அப்படி ஓ டியும் காண்பது வெகுதுர்லபமாயிருக்கின்றதே, இனி யென்னசெய் யலாம், நாமொருவாறு துணிந்து சங்குநகரத்திற்கதிபனுகிய நமது சிறி யதந்தை சங்குசீலமகாராஜன் புத்திரிக்கு விவாகமெனக் கேள்விப்பட் டு அதோகூட்டங்கூட்டமாகப்போகிறார்கள், நாமங்குசென்று சிலகா லமிருந்து மந்திரியைவரவழைத்து நடந்தகாரியங்களைத்தெரிவித்து, பிறகு வேறொரு மாதைப் பாணிக்கிரகணஞ்செய்துகொண்டு பலவழி யிலுஞ்செல்லாமல் இல்லறவாழ்க்கையைப்பெரிதென எண்ணிநடப்ப து மேலாகீர்த்தி, ஆனதால் சங்குநகரம் செல்லுவோம்,(ஏகுதல்) ஆ ! மாதே ? உன்னைத்தேடித்தேடிக்க லும் வருந்துதே !

சுந்தரதர்மன் ஜாவளி.

இராகம்-இந்துஸ்தான் சுவாய், தாளம்-ஆதி.

உந்தனைத்தேடி ஓ ! மயிலேமன
ஊக்கமழிந்தது என்குயிலே. (௧)
எந்தநாட்செய்த இழிவுளபவமோ
ஏவரெனக்கோதி யி[illegible]பமோ
வந்ததிக்காளினில் [illegible]னமெல[illegible]க்தேடி
வதங்கியுருகலானேன் வனக்[illegible]யிலே. (௨)
என்று உன்முகத்தை யினிக்காணப்போறேன்
இவ்வுசைநீங்கிட எவ்விடஞ்சார்வேன்
அன்றுனைவைத்த வருந்திறைதோஷத்தால்
அலறிக்குலைக்கலானே னடி மயிலே. (௩)
பெண்டினைவிட்டப் பேடிபென்றென்னை
பேசுறுருலகோர் பெரும்வசைதன்னை
கொண்டிதோநானுங் கோட்டானைப்போலக்
கூவித்திரியலானேன் குணமொயிலே. (௪)

(சுந்த-வ-ம்) ஆ ! சிவனே ! நாயைப்போல் சுத்தியழுதிடினும் என்

மனைவி வரக்காணவில்லை! இனி என்னசெய்வோம், சரி, நடப்போம்

(திரு-வ-ம்) இதோ சங்குநாடுவந்தோம், ஆ! ஓ! மெத்த சனக் கூட்டம், நமக்கு இன்றைக்கு நல்லபிழைப்பே, (குதித்தல்) ஆனால் நாம் வெறுங்கையனாகவந்தோமே, ஒரு கத்தரிக்கோலாவது வரும்போது கொண்டுவராமற்போனேனும், சி, வல்லவனுக்குப்புல்லே ஆயுதமல்லவா, நம்ப கையே கத்தரிக்கோலாச்சே, ஆகையால் இனி ஊருக்குள் செல்லுவோம், டே யப்பா! இந்தக்கோட்டையின் வாசற்படிக்கு எவ்வளவு சிங்காரிப்புச் செய்திருக்கின்றது! ஒருவேளை நம்மைக்கண்டு காவற்காரனனுமானப்பட்டு விசாரித்தால், நாம் குந்தலதேசத்துத் தலையாரிகளிலொருவனென்றும், பொக்கிஷத்திற் பொன்பூணிகளைத் திருடிய கள்ளனைப்பிடிக்க உருமாறி வந்தோமென்றுஞ்சொல்லித் தப்பித்துக்கொண்டு ஊருக்குட்போய் ஒரு இடத்திற்குந்தியபடியே இப்பகலைப்போக்கி நமது நேசனாகிய இராத்திரிவந்தவுடன் வேலையைப்பார்த்துக்கொண்டுபோய்விடுவோம், இதுவேசரி, அ! இதென்னபடம்! (உற்றுப்பார்த்தல்) அடி குட்டி பவளம்? பவளம்? அடி மோசக்காரி? குதிரையிலேற்றி யென்னைக் குடிசைக்கனுப்பி எங்கே ஓடிப்போனாயடி பவளம்? டியே பவளம்!

(குந்த-வ-ம்) இதோ சங்குநகர்வந்தோம், ஐயோ! சரியொத்த மன்னர்களின்முன் நாம்பாதசாரியாய்வர அந்தப்பவழேந்திரியாலல்லவோ வாய்த்தது, இனியோசிப்பதிற்பிரயோசனமில்லை, அ! இதென்னபடம்! அடிபெண்ணே பவழேந்திரி? இரவில் ஓடிவந்[illegible]டவளே? இதோ பாரடி உன் பெயருள்ள மோதிரம், அ! என்ன[illegible]செய்தாய்! இதன்றியில் இக்கோலமாக்க எண்ணங்கொண்டோ[illegible] அன்று நானுனதிடம் வந்தபோது தந்திரமாய் நோன்பெனச்செப்பினாய், நானும் அம்மொழியை நம்பினேனல்லவா, இனியுனை விடுவதில்லை.

(பூதி-வ-ம்) தம்பி [illegible] குந்தலநகர்வந்தோம், இனி ஊருக்குட்சென்று நமது [illegible]தைகள் வந்திருக்கின்றனரா என விசாரிப்போம்

(மதிபூதி-வ-ம்) நல்[illegible]து இதுவேசரியானயோசனை யண்ணலே,

(பூதி-வ-ம்) அ! தம்பி? இந்தப்படத்தைப்பார்!

([illegible]பூதி-வ-ம்) அண்ணா? நம்மைக்காட்டில் வஞ்சித்தக் கருணையில்லாக் கசடியாகிய பவழேந்திரிபோற்காணுகின்றது.

(பூதி-வ-ம்) ஆமப்பா, இவளைக்கவனிப்பதிற் பிரயோசனமில்லை, ஏனெனில், இவள் மானிடப்பிறவியாயிருப்பாளேயாகில் அங்கேயே கண்டுபிடித்தேயிருப்போம், அல்லவே யல்ல, பார்? நாமெங்குச்சென்றாலும் இங்குவரப் படத்திலுமிருக்கின்றாள், இதென்னமாயமோ தெரிந்திலேன்! போனவள் நமது உடுப்பையும், ஆயுதங்களையும் எங்கேனு மறை

த்துச்சென்றாள், ஆனதால் இனி இவளைக்கவனிப்பதில் பிரயோசன மில்லை, தம்பி நீ என்னசொல்லுகிறாய் ?

(மகிபூஷ-வ-ம்) ஆம் அண்ணா, நீரும் என் புத்தியிற்பட்டவாறு எடுத்துச்சொல்லிவிட்டீர் சரி, அடி பவழேந்திரி எங்கள்பாவம் உனக்கிடிக்காதா, ஆ ! என்னமோசம் செய்துவிட்டாய், இனி உனக்குறகா. (இருவரு மக்களையோசித்திருக்குதல்)

(காவலர்-வ-ம்) நாயிக்கு நடந்ததை ஒன்றுவிடாம லிப்போதே ஓடிச்சென்று உரைக்கவேண்டும், இல்லாவிடில் நமக்குத் தீங்கே நேரிடும், சரி, போவோம்; போற்றி போற்றி தேவே.

(பவழேந்திரன்-வ-ம்) ஏதாகிலும் விசேஷமுண்டாயிருந்தால் நீ சீக்கிரந்தெரிவிப்பாயப்பா !

(காவ-வ-ம்) சுவாமி ! தாங்களாக்கினையிட்டவாறு படத்தினருகி லதிஜாக்கிரதையோடு காவல்புரியுங்கால், அனேகர் படத்தைப்பார்த்தவாறே சென்றனர்கள், இன்றையதினம் பார்த்தால் கள்ளனைப்போலிருக்கிறான் அவன் படத்தைக்கண்டு பலவாறுபேசி குந்திறான்.

(பவ-வ-ம்) ஆ ! அப்படியா ! அவனைச்சிறைச்சாலையி லடைப்பாய்.

(காவ-வ-ம) புத்தி, ஆண்டவா, இவ்வொருவன் வடிவி லரசனைப்போல்தோன்றுகின்றது, அவன் படத்தைக்கண்டு இராத்திரியில்மோசஞ்செய்து ஓடிப்போனவளேயென்றும் உன்னகமோதிரம் இதோ இருக்கிறது பாரடி கசடியென்றும் பலவாறு பேசி தியங்கி யவனுமொரு புறங்குந்தியிருக்கிறான் சுவாமி.

(பவ-வ-ம்) ஆ ! ஆ ! அப்படியா ! அவனைப்பின்புறமாகக்கட்டிச் சிறைச்சாலையி லடைக்கச்செய்வாயப்பா.

(காவ-வ-ம்) புத்தி, ஆண்டவா, சுவாமி ! வேறு இரண்டுவாலிபர்கள் அங்கனேதோன்றி அப்படத்தைப்பார்த்துப் பலவாறு வெறுத்துப் பேசிப்பூடன் பெண்ணே ? உன்னை [illegible] ஆயுதமுமிழந்தோமேயெனப்படத்தைப்பார்த்தவாறே தேங்கி நின்றிருக்கிறார்கள்தேவே

(பவ-வ-ம்) சரி, அப்படியா ! அவ்விருவர்களுக்கும் இராஜவுபசாவனைகளளித்துச்செய்து நல்லபோஜனமுதலியவைகளை உண்ணச்செய்து சிங்காரமண்டபத்திலிருக்கச்செய்வாயப்பா.

(காவ-வ-ம்) புத்தி, ஆண்டவா.

(பவ-வ-ம்) மந்திரி ? யான் காவலனுக்குச்சொன்னதையறிந்தீரா ?

(மந்-வ-ம்) அறிந்தேன் பிரபு,—அடா காவலனே ? இங்குவந்தபாவனைகளை பெருத்தேகி அவ்விருவாலிபர்களுக்கு மீந்து, மற்றவர்களைச்சிறையிலடைக்கச்செய்வாய், சீக்கிரம்.

(காவ-வ-ம) அப்படியே செய்விக்கிறேனாண்டவா,—அடா சிறைச்

சாலையக்காக்குங் காவலனே ? இப்படிவருவாய் ? இவாளிருவரையும் உன்காவலுக்குள்ளாக்கிச் சிறைச்சாலையடைத்து அதிஜாக்கிரதையோடுகாவல் புரியவேண்டும், இது புது அரசர்கட்டளை.

(சிறைக்காவலன்-வ-ம்) நல்லதப்பா, அடே தம்பிமார்களே ? இவாளிருவரையும் பிணிக்கயிற்றாற்கட்டி புநவினகத்தியோடு சிறைச்சாலைக்குக் கொண்டுவருவீர்கள், ஏகேனுந்தடுக்குப்பேசினல் கொடுங்கள்கும்மா, சீக்கிரம், சீக்கிரம்.—(கட்டிக்கொண்டுபோகுதல்)

(திரு-வ-ம்) ஐயோ ! அப்பா ! நான் ஒன்றுந்திருடவில்லையே ! நான் பெரும்பள்ளிக்கூடம்போய்வந்து உபவாரங்கூட ஆகவில்லை ! என்னபழிவருமோதெரிய இல்லையே ! காத்தவராயா ! காரும் காரும்.

(சி-காவ-வ-ம்) நடபயலே நட, சரி, சரி, நீ திருடனு ! நட நட.

(குந்த-வ-ம்) ஆ ! விதியே ! இதென்னகொடுமை ! இதற்கெப்படி ! நாம் காட்டிலிருந்தபடியே நாட்டிற்குப்போகாமல் இங்குவந்ததாலன்றோ இவனோடு நம்மையும் சேர்த்துக்கட்டிக்கொண்டுபோகலாயிற்று, அதிலும் பவழேந்திரியும் இங்கனேயிருப்பதாகவுந்தோன்றுகின்றது; சரி, வரும்விதி வந்தே தீரும்.

குந்தலராஜன் ஜாவளி.

இராகம்-இந்துஸ்தான் சுருட்டி, தாளம்-ஏகதாளம்.

போனது போனது போனதென்புகழின்று
புவியிற் செங்கோற்பிடித்த பூபாலனென்பதும். (போ)
காவலர் கரங்களைக் கயிற்றினாற்கட்டியே
கள்ளனென் றுரையென் கருமுங்குறைந்தேயோடி (போ)

(காவ-வ-ம்) வாயை மூடுபயலே, போதும், கூச்சலிடப்போகாது, திருடனே உன்னுடைய துக்கடிக்காரர்களெல்லாமெங்கே இருக்கிறார்கள் ? கலியாணகாலமான தால் நல்ல கொள்ளையடிக்கலாமென்று வந்தாயோ, இப்போது இராஜகாரியங்கள்பார்ப்பவர் புது அரசனென்று என் தெரியாமற்போனது, அவரோ மகா நீதிமான், புத்திவான், தந்திரசாலியாச்சே, சி, நட நட.

அடே நடவென்றசொல் . . . . . . காலால்
அங்கமுங்குன்றுதெந்தன் ஆண்மைமிபங்கமேனொடு. (போ)

(காவ-வ-ம) இது தெரியுமா, சிறைச்சாலை ; இங்கொருவருடனும் வார்த்தையாடப்போகா, ஆடிலோ ஆக்கினைநேரிடும்.

(திரு-வ-ம்) அப்பா ! பசிக்குது, கஞ்சி, கஞ்சி, கூழு, கூழு, பசி, பசி, அப்பா என்ன செய்வேன் !

(குந்த-வ-ம்) விதியே ! இனி யென்னை யென்னகெதி செய்வாயோ

தெரியேனே! ஐயோ! இவ்வித துன்பங்கள் என்னை வந்தடுத்த காணம் எதுவாயிருக்கும், யாரும் உரைப்பவரும் காணோமே! என்ன செய்வேன்! ஜெகதீசா! எந்நாட்டில் எவ்தேவி என்னவியாகுலப்படுகின்றாளோ தெரிகிலேனே!

குந்தலராஜன் கண்ணிகள்.

இராகம்-பரசு, தாளம்-ஆதி.

ஐயையோ ஈதென்ன அவதிவந்தெய்தது
ஆரிட்டசாபமோதான் அறியேனே ஐயோ ஐயோ. (ஐ)
நொய்யுற எக்காலே நூற்றநோன்பின்பயனோ
துதவினெழுத்தோயாரை நோகுவேனையோ. (ஐ)
அன்னியன்பெண்டை காவலையக்கொண்டதோஷம்
அலையவந்ததிதோ அறியேனே. (ஐ)
நீதியில்தப்பியதோ நெறியிற்பிசகினதோ
நிலைகுலைந்ததோஷமோ தெரியேனே. (ஐ)

(குந்த-வ-ம்) மனமே? எண்ணித்துணிவது கருமம், துணிந்தபின் எண்ணுவதிழுக்கல்லவா, அந்தப்பிரதானியின் வார்த்தைக்கேட்டதாலன்றோ இவ்விதத்துன்பத்திற்கிடந்தரலாயிற்று, நாம் செய்துகொண்டவினைக்குக்கடவுளை நிந்திப்பது கூடாதே, இன்னம் வருவதையெல்லாம் தந்திரமாக இருந்து தப்பித்துக்கொண்டு நமது நாடுபோவதேயுத்திசாலித்தன்மை, பொறுமனமே? எப்படியும் மன்னன் நம்மை யழைத்து விசாரிப்பான், அப்போது நாம்நமது வரலாற்றை எடுத்தோதி அதன்பின்பு ஞாயனுட்பங்களைக்கண்டறிந்து விடுதலைசெய்வான், பிறகு நமது தேசமபோய்ச்சேருவோம், இதுவேசரி.

(காவ-வ-ம்) ஐயா? நீங்களிருவரும் இந்த இராஜ உடுபாவனைகளை அணிந்து என்பின் சிக்காரமாளிகைக்கு வருவீர்கள், இது எங்களரசருடையக் கட்டளை, என்றறிவீர்கள்.

(யூகி-வ-ம்) நல்லதப்பா காவலனே, இதென்ன ஆச்சரியம்!

யூகி விருத்தம்.

இன்றெதுவோ நமக்குநல்ல காலம்வந்து
[illegible]யுதுமேயபா [illegible]ண்ணுதப்பா
அ[illegible]றவளா லுடுப்பிழந்து அநாதிபோல
அடவியெலாந் திரிந்தவகை யறிந்துமீசன்
[illegible]ன்றமைக்க வுனக்களித்திக் கடையச்செய்தான்
நற்றம்பி யாடைதொட்டு மிவனைப்பற்றி
சென்றறிவோம் வருஞ்சுகத்தை நீதானப்பா
சீக்கிரமா யணிந்திடுவாய்ச் சோரத்தானே.

(யூகி-வ-ம்) தம்பி? பவழேந்திரிசெய்த சூதினால் வஸ்திர ஈனர்களா கி நாம் காட்டிலலைந்ததைக்கண்ட கடவுள், இன்று ஏதோநமக்கொரு சந்தோஷத்தைக்கொடுத்தார்; ஆனதால் அரசனுலனுப்பப்பட்ட இவ் வுடுப்பை நாம் சீக்கிர மூடித்திக்கொண்டு, இவனோடு சென்றுவருவ தையறியலாமப்பா.

(மதியூகி-வ-ம்) நல்லதன்னாவே, இதுவும் முன்செய்தபலனே.

(காவ-வ-ம்) ஐயா? என்பின் வருவீர்கள், இதுதான் சிங்காரமண் டபம், இங்குவந்திருக்கு மரசர்களோடு களிப்பாய் போஜனமுதலான துங்கொண்டிருப்பீர்கள்; வாலையரசன் செய்யும்படியான வுத்திரவை யுடனேவந்தறிவிக்கின்றேன்.

(யூகி-வ-ம்) நல்லதப்பா.

(உத்தமசீ-வ-ம்) இதோ சங்குநகரம்வந்தோம், ஆ! பவழேந்திரித் தாயே? ஐயோ! உன்னைப்போலவே இங்கு ஒருபடமெழுதிக் கட் டியிருக்கின்றதே! இதென்னமாயமோ! அம்மணி? நீ என் கதியை விசாரிப்பதென்றோ தாயே! நான் தனபாலசெட்டிக் கதிகமோசக்கா ரனாகிவிட்டேனே! என்செய்வேன்கருணாகரி.

(காவ-வ-ம்) இதையும்போயரசனுக்கறிவிப்போம், போற்றி, அரசே? தாங்களிட்ட ஆக்கினைப்படி யந்நால்வரையும் நடத்தினேன், இப்போ தொருவர்வீபன் படத்தைக்கண்டு பலவாறு புலம்பித் தனபாலசெட் டியாருக்குத்தான் மோசக்காரனானதாகவும், தாயே? நீ என்விதியை விசாரிப்பதெப்போவென்றும், சிந்தித்துக்கொண்டிருக்கிறா.. தேவே.

(பவ-வ-ம்) அப்படியா! அவனையுஞ் சிங்காரமண்டபத்தி லி..க்கச் செய்து, கிரமமாய் மரியாதையோடு போஜனமுதலானதும்விசாரிக்கச் செய்வாயப்பா.

(காவ-வ-ம்) நல்லதாண்டவா.—ஐயா.? இப்படிவாரும், இந்த சிங் காரமாளிகையில் வந்திருக்குமரசர்களுடன் நீரும் இருப்பீர், இது எ ங்களரசரிட்டகட்டளை சுவாமி.

உத்த-வ-ம்) மெத்தசந்தோஷம், உங்கள் வேந்தருக்கு என் வந்த னை.. சொல்லுவாயப்பா.

(சுந்தர-வ-ம்) இதோ ச.. .. ..! இதென்ன கோட்டைவாயற்படியருகில் வெகுஜெனக்கூட்டம் ..! நாமுஞ்சென்று சங்கதியைத் தெரிந்துகொள்ளத்தக்க தன்றோ, ..வோம், ஆ! பவ ழேந்திரி! நீ எங்கிருக்கின்றாய்! உன்னுடையவுருவை..ப்போல ஒருப டமெழுதி யிங்கு கட்டியிருப்பதின்காரண மின்னதெ..ன் றறியேனே! அடி அன்னமே! கிளியே! அறிவுள்ளதேனே! பெ..மயிலே! நீ இருக்கும் இடத்திற்கு என்னையும்,

சுந்தரதர்மன் ஜாவளி.

இராகம்-லடக், தாளம்-ஆதி.

வாவென் றெழுத லாகாதா — நான்
வாடித்-தேடி-ஓடி-நாடிவந்தேன். (வா)
சாவந்தாலும் நான் சாவேனினி வாழேன்
சத்தியனே-மெத்தநொந்து-கத்திவந்தேன்-நத்திபென்னை (வா)
உத்தமி நீசொன்னபடி உற்றேன் அவ்வத்துடன் அடி
ஊழ்வினைப்பயனிற்கூடி உறங்கினான் கொண்டேன் மிடி
கத்திமெத்த அலைந்தோடி களைத்துடலுளம் வாடி
கண்ணே பெண்ணே என்றுதெல்லா மெண்ணிவந்தேனென்னைநீ ()
வேசி மயலிற்பட்டு வெட்கி வசைமேலிட்டு (வா)
வீரமுஞ்சூரமும் விட்டு விவேக மறிவுங்கெட்டு
ஆசித்துன்னுவல் தொட்டு அபவாதப் பேரையிட்டு
அஞ்சிக் கெஞ்சி வஞ்சியே நான் தஞ்சமென்றேன் என்னையுநீ. (வா)

(காவ-வ-ம்) ஆ ! இந்த சன்னியாசி படத்தைக்கண்டுமெத்தவுந் துயரப்படுகிற சங்கதியை அரசருக்கு அறிவிப்போம், போற்றி சுவாமி ? ஆரோ ஒரு சன்னியாசி படத்தைக்கண்டு மெத்தவும் பிரலாபித்து வேசிவலையிற்பட்டுக் கெட்டுப்போனதாயும், தான் குதிரையைக்கொண்டுவந்துங் கெட்ட காலத்தினுல் தூங்கிவிட்டதாயும், பதறிக் கதறி அழுகின்றார், நாதா.

(பவழேந்திரன்-வ-ம்) அப்படியா ! மந்திரி ? நீசென்று அந்தசன்னியாசியை அழைத்துவந்து ஓர் விடுதியில் இருத்தி எனக்கறிவிப்பாய்.

(மந்-வ-ம்) நல்லதாண்டவனே, ஐயா சன்னியாசி ? இப்படிவாரும் ? இந்த மாளிகையில் இரும் சுவாமி.

(சக்குசில-வ-ம்) அப்பா மந்திரி ? மணவறைச்சாலை முதலானதும் மகாவேடிக்கையாய் ஜோடிக்கச்செய்தாயா ?

(மந்-வ-ம்) செய்துவைத்தேன் வேந்தே.

(சக்குசில-வ-ம்) ஆனால் என்குமாரத்தியாகிய சந்திரரேகையை தாதிகள்மூலமாய் திவ்யமாய் சிங்காரித்து அழைத்துவரச்சொல்லுவாய்.

(மந்-வ-ம்) மகாபாக்கியம் வேந்தே, அம்மாதோழி ? உன் எஜமானியாகிய சந்திரரேகையம்மாளை வாசனைநீரினுல் ஸ்நானஞ்செய்வித்து, நல்ல ஆபரணங்களைச் சிங்காரித்து, வெகுசீக்கிரம் கொண்டுவருவாய், தாமதிக்கப்போகாது.

(தோழி-வ-ம்) அப்படியே ஆண்டவா. ஆ ! ஜெகத்ரக்ஷகா ! என் ஆசிகோரியபடி முடித்ததற்கு இதோவந்தனம் மிகவுந்தந்தனன், சரி, இனிநடப்போம்,—அம்மா என்னரசியே ? இனிநீ தாமதிக்கப்

போகாது, ஸ்நான முதலியவைகளைச்செய்து உமக்குவேண்டிய ஆபரணங்களை அணிந்துகொண்டு மணவறைச்சாலைக்கு என்பின்னுடன் வருவாய்தாயே.

(சந்தி-வ-ம்) அடிபாங்கி? தாமொன்று நினைக்கில் தெய்வமொன்றாக நினைக்கிறதென உலகில் அறிவினர்கள் பேசுவதுபிசகேயெனத் தீர்மானித்துவிட்டேன், ஏனெனில் யான்கோரியவாறு பரமசிவன்முடித்தாரேயன்றி வேறில்லையே! என்பாக்கியமே பாக்கியம் (சிங்காரமண்டபஞ்செல்லுதல்) போற்றி என்தந்தையே? அடியாளை அழைப்பித்த காரணத்தை வெளியிடுவீர் பிதாவே.

(சங்குசீல-வ-ம்) அம்மா ! நான் அருந்தவஞ் செய்துபெற்ற.

சங்குசீலமகாராஜன் விருத்தம்.

அந்தமுள்ள சண்மணியே மயிலே மானே
அறிவுடைய பசுங்கிளியே அமுதவோசைச்
சந்தமுள்ள சரக்குயிலே சண்பகமே தேனே
சாரோணு நன்னமுதே சலியாப் பாகே
சுந்தரமேயென்குலத்தை விளக்கவந்த
சொர்னமே கற்கண்டே சொல்லக் கேளாய்
வந்திருக்கு மரசர் முன்பு உனக்குகந்த
வருக்கணிவா யிம்மாலை யணங்கித் தானே.

(சங்கு-வ-ம்) அம்மா ? இந்தமாலையைத்தாங்கி, இங்கு வந்திருக்கும் அரசர்களுடைய பெருமையைத்தோழி வியரமாய்ச்சொல்லக்கேட்டு, உனக்கிஷ்டமான குணவந்தருக்கு அணிவாய் என் கண்மணியே.

(சந்-வ-ம்) நல்லதுபிதாவே, அடி அம்மாபாங்கி ? மணவறையில் என்னுசைநாயகராகிய பவழேந்திரமகாராஜன் வந்திருக்கின்றாரா ? தெரிவிப்பாயடி ?

(தோழி-வ-ம்) இன்னம் அவர் இராஜாங்கவேலையில் இருக்கிறாப்போற்காட்டுகின்றது அம்மணி.

(சந்-வ-ம்) அப்படியா ! என்தந்தைக்கு அறிவித்து அவரைச்சீக்கிரம் மணவறைச்சாலையில் வந்திருக்கச்செய்யடி ? அவருக்கேநான் மாலையிடுவேனேயன்றி மற்ற எவரையுங்கண்ணால் நோக்கேனடி.

(தோழி-வ-ம்) நல்லதம்மா, அரசே ? மணவறைமண்டபத்தில் பவழேந்திரமகாராஜா இன்னம்வராதிருக்குங் காரணமென்ன ? சடுதியில் வரச்செய்யும்படிக்கு என்தேவி விரும்புகின்றாள் அரசே ?

(சங்கு-வ-ம்) நல்லது அம்மா—மந்திரி ? பவழேந்திரமகாராஜனைக் கொலுமுகம்விட்டு மணவறைக்கு வரச்செய்வாய் ?

(மந்-வ-ம்) அப்படியே வரச்செய்கிறேன் அரசே,—ஸ்வாமி ? தாங்களின்னம் இக்கிருப்பதழகா ?

(பவழேந்திரன்-வ-ம்) இதோ வருகின்றேனப்பா (போகுதல்) நாம் போகும்முன்னமே, நம்மைக் கெடுக்கக்கருதிய கசடர்களையும், நமது பிராணநாதரைய மணவரைக் கழைத்துவரச்செய்து, அந்தச்சந்திரரேகை நமக்குமாலையிட்டவுடன், சகல இராஜாக்களுமறிய நமது வரலாற்றைச்செப்பி முன்னடப்பதற்குந் தீர்மானமுஞ்சொல்லுவது நமது முக்கிய [illegible]ருகவே இருக்கின்றதல்லவா, சரி, அப்பா கட்டியனே? சிறையிலகப்பட்ட விருவரையும். சிங்காரமாளிகையி லிருத்திய மூவரையும், புது அரண்மனையிலிருக்குஞ் சன்னியாசியரையும், மணவரைக்கழைத்துவந் தொருபுரமிருக்கச் செய்வாய்? சீக்கிரம்.

(கட்-வ-ம்) நல்லது சுவாமி, எங்களரசன் மகளுக்குக் கலியாணமானதால் நீங்களும் வருவீர்கள். (யாவரும்வருதல்)

(தோழி-வ-ம்) அம்மா? இவர் சோழபூபதி அதிபத்திமான்; இவர் சோகாட்டதிபர் வெகுபுத்திமான்; இவர் நேபாளர் அதிதநவந்தர்; இவர் கலிங்கர் வெகுவீரர்; இவர் பவழேந்திரர், அதிசுந்தரர், வீரர், விவேகி, நீதியான்.

(சந்திர-வ-ம்) அப்படியா! அரியர பிரமாதி முப்பத்துமுக்கோடி தேவர்[illegible]றிய மாதா, பிதா, பந்துவர்க்க மன்னுதி மன்னவர்களறியப் பவழே[illegible]திரருக்கு இதோ மாலையிட்டேன்.

(பவழே[illegible]திரன்-வ-ம்) சபையோர்களே? நான் இப்போது எடுத்துரைக்[illegible]ம் வார்த்தைகளை அசட்டையின்றிக் கவனமாய்ச் செவிகொடுத்துக்[illegible]ட்டு, அதற்குத்தகு[illegible]யாயமுரைப்பது உங்களுக்குரிய கடமையென்ம[illegible]க்து இதோ பெருஞ்சபைக்கு வந்தனஞ்செய்துநின்[illegible]றன், விடைதருவீர் மகாராஜ[illegible]களே?

(சபை-வ-ம்) அப்படியே க[illegible]னிக்கின்றோம், உமதுகருத்தை வெளியிடுவீர் பவழேந்திரமகாராஜனே?

(பவழேந்திரன்-வ-ம்) அரசர்களே? இரூ-தேசத்தி லடங்கியநாடுகளில் [illegible]ந்தைபுரியென்று ஒன்றுண்டா?

([illegible]பை-வ-ம்) உண்டு, அதை அரசுசெய்[illegible]வர் வி[illegible]வர்மமகாரா[illegible] இதோ இக்கச்சுபகாரியத்தைக்கண்டு களிக்கவந்திருக்கின்றார்பாரும்?

(பவழேந்-வ-ம்) [illegible]பெற்ற [illegible]தனே?

(வீரவ[illegible]ம-வ-ம்) வாழி, நீரும உமதுபத்தினியாகிய சௌபாக்கியவ[illegible] சந்திர[illegible]ரேகை[illegible] வாழி.

(பூகி-வ-ம்) தம்பி? நமது பிதாவைக்கண்டும், நாம்வணங்காதிருப்பது அடாது.

(மதிபூகி-வ-ம்) வாரும் அண்ணா? போய்ப்பணிவோம், போற்றிபிதாவே, எங்கள் குற்றத்தை மன்னித்து ஆட்கொள்ளுந் தந்தையே.

(வீரவர்ம-வ-ம்) ஆ! என்மக்களே! என்னைப்பிரிந்து நேசோனாகி ன்மதே, என்னை இவ்வாறுவருத்தத்தி லிருத்தியதும் நான்முன்செய் ததீவினையே, இன்றிங்கு உங்களைக்கண்டதும் நான்செய்தநல்வினையே வாழி மைந்தர்களே.

(பவழே-வ-ம்) இவாளன்றோ நம்மைக்காட்டிற்கண்டு மோகித்தவர் கள்! நமக்கிப்போது தமையன்மார்களானதே சந்தோஷம், அரசர்க ளே? சரி, சுந்தரநகரென்பது ஒன்றுண்டா?

(சபை-வ-ம்) உண்டு, அதற்கதிகாரி இந்தச் சக்குசீல மகாராஜாவி னுடைய தமையனாகிய சற்குணேந்திரர் அவர்கதியடைந்ததாற்செ ங்கோலை அவர் குமாரன், சுந்தரதர்மன் தாங்கித்தான் வேசிகாந்தனாய் நாங்களறிய மணந்த வீரவர்மர் குமாரத்தியாகிய பவழேந்திரியம்மா ளை ஏலக்கூறி விற்பனைசெய்துவிட்டதாய்க் கேள்வி.

(சபை-வ-ம்) ஆ! சிவமே! இப்படியும் தன்மனைவியை எங்கனுனி லும் விலைகூறி விற்பனைசெய்வதுண்டா!

(வீரவ-வ-ம்) நானருந்தவஞ்செய்து பெற்ற.

வீரவர்மமகாராஜன் தரு.

இராகம்-முகாரி, தாளம் ரூபகம்.

ஆ! மகளே! உனக்கிவ்விதிஉனக்கு-அடைந்ததோ மகளே! (ஆ! மக)

பாவிநான்செய்த பழியோ வினைப்பயனோ

பவழேந்திரியுன்னை ப[illegible]வே விற்றானோ (ஆ! மக)

(பவழேந்திரன்-வ-ம்) சுவாமி! வீரவர்மமகாராஜ[illegible]? அந்தவிருத் தாந்தத்தை முழுதுஞ்சொல்லுகின்றேன் கவனித்து அப்பால் சி[illegible] ப்பதுசிரன்றி ஆரம்பத்தில் அழத்தொடங்குவ தழகன்று.

(வீர-வ-ம்) நல்லது மகாராஜனே.

(பவ-வ-ம்) சபையோர்களே? இப்போது நீங்களுரைத்த சுந்தரதர் மர் அதிகபுத்திமானாயிருந்தும் ஒருசுந்தரியெனும்வேசிமொழிக் கிண [illegible]யதும், பத்தினியை விற்றதுமுண்மையே, அவளைபத்மசே[illegible] ராஜன்புத்திர[illegible]கிய உத்தமசீலன் அதிக விலைக்குவாங்கினா[illegible]

(பத்மசேக[illegible]வா[illegible]மி பவழே[illegible]? உத்தமசீலன் என்புத் திரனே, அவனைக்காணாமல் காணும் என்மாதும் [illegible]ருந்து[illegible] எடுத் தோதப்போகாது, அவனிருக்குமிடந்தெரிந்தா ல[illegible]ள்செய்யவே[illegible] ம் உமதுநன்மைக்கு இதோவந்தனம்.

(உத்-வ-ம்) நாம் நமது தந்தையைக் காணுங்கால மிதுவேயாகும், போற்றி பிதாவே.

(பத்மசேகர-வ-ம்) அப்பா! என் அருந்தவக்கொழுந்தே!

பத்மசேகரமகாராஜன் தரு.

இராகம்-புன்னாகவராளி, தாளம்-ஆதி.

பல்லவி,

வாடாவென் கண்ணின்மணியே-இங்கொருமுத்தம்
தாடாவென் தவத்தின்கனியே புனிதனுமீனன் (வாடா)

அநுபல்லவி.

நாடாள உன்னையீன்றும் நாங்கள் வருந்தவிதி
நம்பனருலோசனி நாட்டமோடா ஈபதி (வாடா)

(பவழேந்-வ-ம்) இவர் தனபாலசெட்டி என்பவர் வியாபாரங்கொள்ளும்படிக்குக் கொடுத்தபொருளை ஈந்து அவளைவாங்கி அதன்பின்வருந்துவதைக்கண்டு, அம்மாது தானணிந்திருந்த மோதிரத்தைக்கொடுத்துக் குந்தலராஜனிடம் அனுப்பி தான் ஊருக்குவெளியில் இருக்கும் மண்டபத்திலிருக்க, உடனே அத்தேசத்துக்காவற்காரன் அவளைப்பிடித்து ஒருமாளிகையில் இருத்தித் தாதிமார்களைக் காவல்வைத்துச்சென்றான்; மோதிரத்தின் சங்கதி உத்தமசீலன் உரைக்கவேண்டியது.

(உத்-வ-ம்) வேந்தரே? நானந்த அம்மாளுக்குப் பணிவிடைசெய்து ப[illegible]ம்பெற எண்ணிக் குந்தலராஜனிடஞ்சென்று மோதிரத்தைக் கா[illegible]கோடிவராகன் என்றேன்; என்னை அங்கிருக்கச்செய்து, அ[illegible]கிலிருந்தசோலைக்காரனுந் தானுங்கொஞ்சம்போது வ[illegible]த்தபின்பு குந்தலராஜன், என்னைநோக்கிமோதிரத்தில் "பவழேந்திரி" என்று இருப்பதால் அவளையழைத்துவரவேண்டியது; இல்லாவிடில், இதைக்களவு என்னப்படும்; உன்னைத்தண்டிப்பேனென, நான் அவ்வாறேயாகுக எனச்செப்பி [illegible]ண்டபம்வந்து தேவியாரைக் காணாமல் தாயே! தாயே! என்று காடெல்லாம்சுத்தி இங்குள்ள கோட்டைவாயற்படியில் அம்மணியைப்போல் ஒரு படத்தைப்பார்த்து என் சதியைவிசாரிக்கப் போகாதோவென்றேன், இங்கு அழைத்துவரலாகி[illegible]ன்.

(பவழேந்-வ-ம்) அப்பா காவலனே? இவர் (குந்தலராஜன்) படத்தருகிற்சொன்னதென்ன?

(காவ-வ-ம்) பவழேந்திரி? இதோ வுன்னுடையமோதிரமென்றான்.

(பவ-வ-ம்) அம்மோதிரம் எங்கே?

(குந்தல-வ-ம்) இதோ இருக்கின்றது அரசே.

(பவ-வ-ம்) இது உமக்கு எப்படிகிடைத்தது?

(குந்[illegible]-வ-ம்) அரசே? என்வாக்குமூலத்தை யறிந்து என்னைச்சிறை[illegible]லிருந்து விடுதலைசெய்யவேண்டும்.

(பவ-வ-ம்) உமதுபேரில் ஏதேனுங்குற்றங் காணாதபட்சத்தில் அப்படியே செய்யப்படும்.

(குந்தல-வ-ம்) இச்சிறுவன் வருமுன்னம், என்னிடம்சுந்தரதருமன் பிரதானி வந்திருந்தான்; மோதிரத்தைக் கண்டவுடன் இவன் ஒரு இராஜபுத்திரியைக் களவாய்க் கைப்பற்றி வந்திருக்கின்றான்; அவளோ! அதிரூபவதி, நீர் அவளைப்புணரத் தகுந்தவரென, நான்மதிமயக்கி, உத்தமசீலன் இப்போது சொன்னவாறுசெய்து, அம்மாதைக் காவலர்மூலமாய் சிங்காரமாளிகையில் இருத்தி நான்தனியேசென்று மோகமீறி வார்த்தையாட, அவள் இன்னம் ஒருவாரம்வரையில் விரதமென ஒப்பிச்சென்றேன். மூன்றாம்நாள் அவள்மாளிகையைவிட்டோடிப்போயினளெனத் தெரிந்ததாற் குதிரைக் காலடியைப்பற்றி, வனமடைந்து நானும்பிரதானியுந் தேடிக்காணாமல் இங்குற்று; நான் சிறையில் அடைக்கப்பட்டேன்.

(பவ-வ-ம்) இவரை வெளிப்புறத்தில் உனது காவலில்வைப்பாய்; சபையோரே? அப்பால் சுந்தரதருமர் பரதேசியைப்போல் அங்குவர ஒருகுதிரையோடு இராத்திரி (௪௫) நாழிகைக்குமேல் வாருமென்று தானிறங்க ஒருயேணியைச் சாளரத்துக்குச்சரியாய் சாற்றியிருந்ததை ஒருகள்ளன்வந்து அசைக்க, மாதிறங்கி யவன்கையிற்சிக்கி சூரியனுதிக்கும்வேளை யத்திருடனைக் குதிரையேற்றிக் குடும்[illegible]த் வர ஏவி, தான்காட்டிற்குள்ளோடி, ரிஷி யாசிரமமடைந்[illegible]க்குங்காலை, இந்த ஆயுதங்களைக்கவர்ந்தாள், இது எவருடையதோ கவனிப்பீர்கள்.

(பூகி-வ-ம்) தம்பி? இதுநமதாயுதமே, யவைகளெங்களுடையது.

(பவ-வ-ம்) எப்படி?

(பூகி-வ-ம்) நாங்களிருவரும் ஒருபெண்ணைக் காட்டிற்கண்டு காமமீறியுனக்கெனக்கென வழக்காட அவள் உடுப்பையும், ஆயுதங்களையுங் கீழேயிடச்செய்து, ஒரு அம்பைவிட்டு அதைமுன்னெடுத்துவருவோனைக்கருதுவேனென, நாங்கள் ஓட அவள்யாவற்றையும்எடுத்து[illegible]ண்டு எங்ஙனோ ஓடிப்போயினள், இங்கு அவளைப்போல் ஒருபடம்மாத்திரங்கண்டோம்.

(பவ-வ-ம்) சபையோரே? அம்மாதிவனை நீங்கிமறுவனமடைய, அங்குசேர்வைதோன்ற, அவனை எமலோகம்போக்கிச் சிங்காரவனமடைந்து சயனித்தாள். அடா காவலனே? அக்குந்தலராஜனைக் கொண்டுவருவாய், ஓ! இராஜனே? உமதுதோழனாகிய பிரதானி எங்கே?

(குந்தல-வ-ம்) அவனைக்காட்டில் ஆரோவதைத்துப்போயினர்; நான்கண்டுவருந்தி இங்குவந்தேன்.

(பவ-வ-ம்) காவலனே? அந்தக்கள்ளனைக் கொண்டுவருவாய்.

(காவ-வ-ம்) புத்தி ஆண்டவா.—அடா திருடா? நீயாரைத்தேடுகின்றாய்?

(திரு-வ-ம்) பவளம்? பவளம்? நாசகாரி ஆசைக்காட்டி மோசஞ் செய்தாள்.

(பவ-வ-ம்) கனவான்களே? நான்தான் அந்தப்பவழேந்திரி, ஆணல்ல நான் பெண், இவர்தான் என்நாயகன்.

(சபை-வ-ம்) ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! என்னபெருமை!

சுந்தரதர்மன் ஜாவளி.

இராகம்-இந்துஸ்தான் காபி, தாளம்-ஆதி.

அடிமாதே! இந்த	அவதியெல்லா முனக்கென்
னாலே யமைந்ததடி	அருங்கிளியே! (அடி)
படிமிசை நான்மெத்தப்	பாவியிலுங்கருமி
பாவையேநீயாரும்	பகரத்தக்கபொறுமி
துடியிடை பேயுனக்	கித்துன்ப மனுகவிட்ட
தோஷிநான்மாபழி	தொகுத்தவ னடிகெட்ட (அடி)
வேசி மொழிக்கிணங்கி	வெறுத்துனைச் சிறைவிட்டு
விற்கச்செய்தேனே யெந்தன்	வெட்கமானமும்விட்டு
தாசிக்கிழ் கா[illegible]போல்	தையலே நீயிருந்தும்
தடியன் பெ[illegible]ரையக்குந்	தானினைந்தாய்கனிந்தும் (அடி)
கள்ளக்கை சிக்கியே	கலங்கி மிகப்பயந்து
காட்டில் வருந்தினையோ	காதகனை நினைந்து
உள்ளமுருகுதே நீ	யுரைத்ததெல்லாங் கேட்டு
உயிரோ டிருக்கினில்யா	னூரார் வசைக்கேபாட்டு (அடி)
மாதைத் துயரிவிட்ட	மந்தன் கொலைபாதகன்
மனுமுறையை மீறிய	மாபாவி நான்காதகன்
கோதை யிவரறியக்	கோணுமிவ் வாளையேந்திக்
[illegible]ப னுடலைத்துண்டாய்க்	கொய்வாய் பவழேந்திரி. (அடி)

(பவ-வ-ம்) ஆ! என் பிராணநாதா? என்னவார்த்தைஎடுத்துரைத்தீரென்றுரையே! அடியாள் முன்செய்திருந்த தீவினையாலன்றோ இவ்விதத் துன்பங்களெல்லாம் வந்தடைந்ததன்றி, உம்மாலன்று, அடியாளுமது திருவடியை மறவாதிருந்தமையால், அவைகளிலிருந்து தப்பித்தங்களுடைய பாதங்களைப் பணியும்பெருமை கிடைத்தது. இதற்குமுன் அனேகமாதர்கள்பட்ட துன்பத்தினின் முநீங்கி பிறகு இன்பசுகத்தை அனுபவிக்கவில்லையா, கேளும் பிராணநாதா?

(சுந்த-வ-ம்) சொல்லுவாயடி உன்தந்தையின் அருந்தவத்தால்வந்த என்கிளியே.

பவழேந்திரி விருத்தம்.

சத்யநெறி யரிச்சந்த்ரன் பெண்டைவிற்கச்
சந்திரவதி யதிகதுய ரடைந்தாளன்றோ
உத்தமியாஞ் சீதையருஞ் சிறையிருந்தும்
உரைத்திடுவேன் காடுறைந்து உருகலானாள்
பத்தினியாந் துரௌபதியாள் பட்டபாடு
பஞ்சமியா தெனநாலும் பகருதன்றோ
நித்தியரே யென்வருமை யதற்கொவ்வாது
நெறிவழுவா திருந்ததுந்த னருள்கா[illegible]ரே.

(பவ-வ-ம்) பிராணநாதா! விசுவாமித்திரன்செய்த தால், சந்திரவதி வேதியனுக்குழியாகி யனுபவித்த சங்கட்டங்களைக் கேட்டறியீரா, ஸ்ரீராமன்தேவியாகிய சீதாபிராட்டியார், தசகண்ட இராவணனாற்கொடுஞ் சிறையிலிடப்பட்ட துக்கம்போதாமல், தன்னையகனாற்காட்டிற்கனுப்பப்பட்டு அக்கவலையடைந்த சோகத்தைஎன்னவென்றெடுத்துரைக்கப்போகும், இவரைவிட வீராதி வீரர்களாகிய பாண்டவரைத்தொட்ட பாஞ்சாலி யனுபவித்த அவமானத்தையும், அவஸ்தைகளையும், நினைக்கும்போதே நெட்டுயிர்வருத்துகின்றதே, அவர்கள் எல்லாம் வந்ததுன்பத்தை அனுபவித்தார்களன்றிப் பத்தாவைநொந்தாடியதுண்டா? பதிவிரதைகளுக்குப் பலதுயர்களைப் பரிட்சிக்கும்பொருட்டுப் பரமன் ஏவுவதியல்பே, அடியாள்தங்களுடைய திவ்யபாதங்களைத் தியானித்திருந்ததே எனக்குநித்தியப் புகழைத்தந்தது, நாமினிமது தேசமடைவோம் பிராணேசா; சபையோர்களே? நான் அணிந்திருந்த உடுப்புகள் என்தமையன்மார்களுடையதென விளங்கியதால், என்கற்பிற்கு அழிவில்லை. இக்கள்ளன்தனக்கு வேண்டியபொருளைத்திருடாமல், பெண்ணைத்திருடியதுடன் அவன்நெறியையும், உண்மையையும், உணராதபடியால் இவனைச்சிரச்சேதம் செய்யவேண்டியது; இக்குந்தலராஜன் ஒருவன்பத்தினியைப் பலவந்தமாய்க் கையைப்பற்ற நினைத்தது, மனுநீதிக்கு விரோதமானதால், இவனை ஆயுட்பிரியாணங்கடுங்காவலில் இடவேண்டியது: உத்தமசீலன் சந்திரரேகையை மணம்புரியவேண்டியதுந்தவிர குந்தலநாட்டிற்கு உத்தமசீலனை அரசனாக்கவேண்டியது.

(கோரகர்-வ-ம்) ஓ! இராஜாக்களே!

(இராஜர்கள்-வ-ம்) சொல்லும் எங்கள் குலக்குருவே.

(கோரகர்-வ-ம்) பவழேந்திரிக்கு, நாங்காணும்படி மணமாலை இட்டசந்திரரேகை அவனுடைய சொத்தானதால் அவனுக்கிஷ்டமானவருக்கு அளிக்கக்கூடும், இதுமநுமுறையே.

(சங்குசி-வ-ம்) மகாபாக்கியம், அப்படியேசெய்விப்பது உத்தமத்தி லதியுத்தமம்,—அம்மா குழந்தாய் ?

(சந்த-வ-ம்) தந்தையே ? எனக்கும் சம்மதியே.

மறுமாலை உத்தமசிலனுக்குச்சூட்டல்.

சுந்தா தருமன் - தரு.

இராகம்-கலியாணி, தாளம்-ரூபகம்.

இன் றென் ஜென்மம் புனித மானது என்தேவியாலே
அன்று செய்த பழி யனைத்தும் நீங்கி
நன் றளித்திடவே நாத னருளோங்கி. (இன்)

வேறு.

சுந்தா தருமன் ஜாவளி.

இராகம்-குல்ரோஜ், தாளம்-ஆதி.

இன்றென் ஜென்மம் புனித மாச்சு என்தேவி யாலே
நன்று நன்று சுக மினி நாடுமென் மேலே (இ)
மனைவியில்லா தோஷியென்ற வசையும் நீங்கினேன்
மண்ணில்மிகப் புகழிதோ மன்னன் தாங்கினேன் (இ)
தாசியாசைக் கொடிதாமெனத் தானுங்கண்டனன்
தாஷியவர் மையற்பூணும் தன்மைவிண்டனன் (இ)
மஹான்கள்கொண்டகோபத்தால்நான் மகிழ்வுகொண்டனன்
மாபாவியென்ற வசையும் மாறக்கண்டனன் (இ)
மாசிலா மணிபதத்தை மனதிலூன்றி நான்
நேசித்திருந்ததனால் நன்மைபூண்டனன் (இ)

(சபை-வ-ம்.) அம்மா பவழேந்திரியாரே ? தங்களுடைய புத்திக்கு இணையிடத்தக்கவரை இப்பூமியின்கண்ணே எவரையுங் காணோம் ! தங்கள் கற்புநிலைக்கு இணையாக அந்த அருந்ததியையுஞ்செப்பப் போகாது ! இதன்றியில் தங்கள் நீதி விசாரணையினுடைய நுட்பாதி பெருமையைப் புகல ஆதிசேடனுக்கே அடுக்கும் ; ஒருநாவுடைய வர் என்னவெனப்புகழப்போவார்கள் ; ஆனதால் நீருமுமதுபத்தாவா கியசுந்தர தருமரும் மதனும் இரதியைப்போல வாழ்வீர்க ளம்மணி.

(பூசி-வ-ம்) சபையோர்களே ? எனது தங்கையாகியபவழேந்திரியம் மாளுடைய, விஷயத்தில் கெடுதிநினைத்த துட்டர்களை எல்லாந்தண்டிக் கக்கண்டது ஒருசந்தோஷ மன்று ; இத்தீபாதிகாரியங்களுக்குங் கார ணபூதமாகிய சுந்தரிக்கு யாதொருவிதியையும் விதிக்காதிருப்பது தங்க ள்கருத்திற்படாதிருந்ததைக்கவனிக்கத்துணிவுகொண்டேனரசர்களே

(சபை-வ-ம்.) ஆம் ! ஆம் ! அம்மா பவழேந்திரியாரே ? சுந்தரியெ ன்னும் வேசிக்கு, ஒருதண்டனை விதிக்காததேனோ !

(பவ-வ-ம்) சபையோர்களே? அவள் எல்லோருக்கும் பொதுவானவள், ஆதலால் பொதுப்பொருளையும், பொதுவானவளையும், தண்டிக்கத்தக்க அதிகாரி அரசரென்றறிவீர்கள் கனவான்களே.

(சுந்த-வ-ம்.) அரசர்களே? அவளை அறைத்தூக்கால் மரிக்க விதிக்கின்றேன். ஆ! என் நேயர்களே? விலைமாதர்களின்சேட்டைகளை நானனுபோகத்திற்கண்டேன், இவ்விடம்வந்திருக்கும் ஒவ்வொரு புத்திமான்களும் என்னனுபோகத்தையொட்டி இல்லாளிடத்திலன்புமிகப்பெருகி, சர்ப்பாத்திரவிஷயங்களி லூடேதாக்கி கடையில் மேலானபதவியடைவதேபெருங்கீர்த்தி யெனமதிப்பீர்களாக.

(சபையோர்-வ-ம்) அப்படியே, தாங்கள்சொன்னமார்க்கமும்சரியே.

(சுந்த-வ-ம்.) அப்பா தனபாலசெட்டி? நீ சுந்தரபுரத்துக்கு வந்து உனது பொருளை வாங்கிக்கொள்வாய்.

(தன-செட்-வ-ம்) நல்லது அரசே.

(பொது-வ-ம்.) சங்குசீலமகாராஜன் உத்தமசீலனுக்கும் சந்திரரேகைக்கும் விவாகம்செய்வித்து வந்திருந்த அரசர்களுக்கு தகுந்தமரியாதைசெய்து அவாளவாள்பதிக்கனுப்பினனென்றறிவீர்கள்.

(சுந்த-வ-ம்.) மாதே? இனி நமது தேசம்போவோம், வருவாயடி கண்ணே?

(பவ-வ-ம்.) நல்லது என்பிராணநாதா, என்பாக்கியமே பாக்கியம்!

(உத்-வ-ம்.) தங்கள் திருப்பாதங்களுக்கு இதோ நமஸ்காரந்தாயே.

(பவ-வ-ம்.) வாழிமைந்தா, தன்னுயிரைப்போல மன்னுயிரையெண்ணி, நீதிகுறையாமல்குந்தலதேசத்தை ஆண்டுசுகிப்பாய்கண்மணியே.

(உத்த-வ-ம்.) மகாபாக்கியம் என்தாயே.—(சுந்தரதர்மனும்பவழேந்திரியும் தங்கள் நாட்டிற்கேகி, மந்திரியைக்காணல்.)

(மந்திரி-வ-ம்.) போற்றி அரசே, போற்றி போற்றி, அம்மணி.

(சுந்த-வ-ம்) வாழி அப்பா, மந்திரி? உன் எண்ணத்தின்படியே என் பத்தினியை அழைத்து வந்தேன் நேசா.

(மந்-வ-ம்.) மகாசந்தோஷம் அரசே.

(சுந்தர-வ-ம்.) மந்திரி? அந்த நன்றியில்லாத வேசியாகிய சுந்தரியை, அறைத்தூக்கில்மாட்டிப் பலருங்காண இறக்கச்செய்வதுடன், அவள்மனையிலிருக்குஞ்சொத்துகளைப்பொக்கிஷத்திற்சேர்ப்பிப்பாய்; அதன்றியில் அப்பொருளிலிருந்து தனபாலசெட்டிக்கு உத்தமசீலமகாராஜன் கொடுக்கவேண்டிய மொத்தத்தை வட்டியுடன் கொடுத்தனுப்புவாய்; சேர்வையைச் சேர்ந்தவர்களெல்லோரையும் நமது எல்லைக்கப்புறந்துரத்திவிடுவாய்.

(மந்-வ-ம்.) மகாபாக்கியந் தேவே, இப்போதே தாங்கள் ஆக்கினை

யிட்டவாறுசெய்து மறுகாரியத்திற் பிரவேசிக்கின்றேனென்றார். அப்பா சிறைச்சாலைச்சேர்வையே? நீசென்று அந்த வேசியாகிய சுந்தரியை உன்காவலுக்குள்ளாக்கி மோரணிமலைக்காடடைந்து தூக்குப்போடும் தூக்மரத்தில் சற்று முன்பின்பாராமல் பலரும்காண அறைத்தூக்கில் மாட்டி யறிவிப்பாய்.

(சேர்-வ-ம்.) நல்லது சுவாமி, அடி! என்சாளர்க... பெருமையைக் குறைத்த கொடும்பாதகி! இப்படிவா? அடா காவலர்களே? இவளிரு கரங்களையும் பின்கட்டாய்க் கட்டிக்கொண்டுவருவீர்கள். அடி நாரி? உன்னை அறைத்தூக்குப்போட அரசனாக்கினை யிட்டாரடி சண்டாளி.

சுந்தரி ஜாவளி.

இராகம்-பியாக், தாளம்-ரூபகம்.

இந்தவிதி வருமென்று மெண்ணாமற் போனேன்-மனம்
புண்ணாகலானேன். (இ)
அந்நாளிலுத்தமியை யவமதித்தேனே - இன்
றுவிசாரப் பாவிக்குமிடி யடையலாச்சுதே - சுகம்
கடையாய்ப்போச்சுதே. (இ)
அதிகவாஞ்சைவைத்தராஜ னாக்கினையிட்டானே-பல
ஆடவரைநம்பிக்கெட்டு அலையலானேனே - கனம்
குலையலானேனே. (இ)

(சேர்-வ-ம்) சி, வாயைமூடடி, படுபாவி: அடா அதி சூரவிஜயா? இவளை பலருங்காண அறைத்தூக்கில் மாட்டுவாயடா.

(விஜ-வ-ம்) அப்படியே ஐயா,—டீ குட்டி? இப்படிவாடி? பலபேர்களைப் பொருளுக்காசையிட்டு சேர்த்தனைத்தக் கைகளைக்காட்டுவாயடி சண்டாளி.—(கரத்தைக்கட்டி தூக்குமரத்தின்மீதேற்றல்)

(சேர்.வ-ம்) கனவான்களே? இப்பாதகியாம் வேசி, இவள் தன்னைப் போஷிக்கும் நாதனிருக்கும்போதே, தானன்னியரைப்பொருளுக்காசைப்பட்டுப்புணர்ந்தவருடைய பெருமைக்கு இழிவு வரச்செய்த வஞ்சகி, இதன்றியில் உத்தமியைப்பழிசுமத்தி யகலச்செய்த சண்டாளி, ஆனபடியால் இவளை அறைத்தூக்கிட அரசன் ஆக்கினையிட்டார் தெரிவீர்களாக—ஆரியநேயர்களே? தம்தம் இல்லாளை வருத்தத்திலிருத்தி, பரநாரியின்மோகவலையிற்சிக்குண்டு துன்பமடையாமலிருக்க இச்சரிதையே சாக்ஷிகமாகமனதினிடத்தே உட்கொண்டு நடத்தல்வேண்டுமென இதோயாவருக்கும் வந்தனஞ்செய்கின்றேன்.

சுந்தரி கண்ணிகள்.

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-சாபு.

ஐயையோ முன்செய்த அரும்பழிப்பயனிதோ
அறியேன் மற்றெதுவமோ ஓ தெய்வமே!

பொய்யான இவ்வாழ்வைப் போதித்தாளென்தாயும்
புகழும்பெருமையும்போச்சே ஓ தெய்வமே!
ஒருவர்க்குப்பெண்டாய்நான் உலகிலிருந்தாலென்னை
உண்டாடாதேயித்துயர் ஓ தெய்வமே!
கருமத்தொழிலாமிது கைகட்டுவேசிமார்க்கம்
கண்டவர்போலாச்சே ஓ தெய்வமே!
பாத்தையாய்ப்பிறந்தே பழிபாவம்பரிகாசம்
பாதகத்தோதகிநான் ஓ தெய்வமே!
சரத்தைப்பற்றிநரம்பு காலுமிழுக்குதே[illegible]தோ
கடவுளே நீயேகதி ஓ தெய்வமே!

வேறு.

இராகம்-ஸ்ரீராகம், தாளம்-ருபகம்.

ஆ[illegible]கதி ஓ! ஓ! சிவமே!
ஐயையோ இதோவுயிர் தொய்யவேபோகுதே
நையுமேயுடலதும் - பொய்யையோ இவ்வாழ்க்கை. (ஆ)

பாவி பார்ப்பானும் தாயுங்கூடி
பாவையாமெந்தனைச் சாவதைப்பூண்டிட
கோவதையிந்தரே போலதுமெவ்விடம். (ஆ)

அருமைப்[illegible] [illegible]தனை
அலங்கோலமாக்கியே நலங்கெடச்செய்திட்ட
[illegible]லங்காளே இதோவுயிர் கலங்கியேவுயிர்விட. (ஆ)

[illegible]தாய்ப்பிறந்த சுகம்போதும்
வேடிக்கை[illegible]மாய் [illegible]டச்செய்ததையெலாம்
கூடியேயெனைக்குயர் [illegible]ல்லுதேயையையோ (ஆ)

மணிக்குள் மணியாய்விளங்கவந்த
மாசிலாமணிபோற்று மந்திரயோகனை
வந்தனஞ்செய்துநான் புந்தியிலினைக்காமல் (ஆ)

(சேர்-வ-ம்) அரசே? தாங்கள் ஆக்கினையிட்ட[illegible] [illegible]ரினைப்பல ருங்கண்டு நகைக்க அறைந்தூக்கில்மாட்டினேன், அவ ளுயிரு[illegible] எம புரஞ்சென்றது, உடனே உடலைக் காக்கைகளுக்கும், கழுகுகளுக்கும் இரையாய்விட்டுவந்திருக்கிறேன் ஆண்டவா.

(சுந்த-வ-ம்) மெத்த சந்தோஷம்சேர்வையே, இனிசுகப்பட்டோம்.

(பொது-வ-ம்) சுந்தாதர்மராஜனும் பவழேந்திரியும் மனதொத்து ஒருவருக்கொருவராதரவாய் அனேககாலம் மதுநீதிவழுவாம லாண்டு வந்தனர்.—சுபம், சுபம், சுபம்.

நூதன பவழேந்திரசபா சம்பூரணம்.

சுப்ரமண்யன்சகாயம்.